Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, கார்த்திகை 19- ஆம் நாள். ஜமாதிஸானி பிறை 4 (5-12-59) சனிக்கிழமை இதழ் 44.

தினக்குறிப்பு
— 1960 —
மாணவர்களுக்கும், மற்றேருக்கும்
உபயோகமானது.
(அளவு 4″ × 6½″)
விலை சதம் 75 தபால் செலவு சதம் 35
கலாநிலைய பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

# அரசாங்கத்துக்கு உயிர்ப்பிச்சை அளித்த நியமன அங்கத்தவர்!

## கர்னல் போர்ப்ஸ் ராஜினமா?

### இலங்கையை விட்டு வெளியேறி பிரிட்டன் செல்கிருர்

— நமது அரசியல் நிருபர் —

**இலங்கை பார்லிமெண்ட் சபை நியமன அங்கத்தவரான கர்னல் போர்ப்ஸ், தமது அங்கத்தவர் பதவியை சீக்கிரம் ராஜினமாச் செய்துவிடுவாரென்று அறிகிறேன்.**

**இம்மாதம் 31-ந் திகதி அவர் தமது மனைவியாருடன், இத்தீவைவிட்டு வெளியேறி பிரிட்டன் செல்கிருர்.**

**முந்திய வாரத்தில், அவர் அளித்த ஒரே ஒரு வாக்கினுல் தான், தகநாயக்கா மந்திரிசபை, உயிர் பிழைத்து வாழ்ந்து வருகின்றது.**

கர்னல் போர்ப்ஸ் இலங்கையின் கௌரவப் பிரஜையானவர். பிரிட்டன் பிரஜா உரிமையைவிட்டுவிட்டு, இலங்கையையே தாயகமாகக் கொள்ள விசுவாசப் பிரமாணமெடுத்தவர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின் போது, எதிர்க் கட்சியைச் சேர்ந்த டாக்டர் கொல்வின் முதலிய "பீரங்கிகள்" அவரைக் காரசாரமாகத் தாக்கின. "நீங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் அழுகல் உரித்துக்களை நாட்டிலிருந்து விரட்டி அடிப்போம்" என்று எச்சரித்துப் பயமுறுத்தினர்.

இந்த அரசாங்கத்தின் இரண்டுமாத நிர்வாகத்தில் பல குறைகளிருப்பினும், நாட்டில் பொதுத்தேர்தல் இச்சமயம் நடந்தால் குழப்பம் ஏற்படுமென்றும் அதைத் தவிர்க்கவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தாமும் தமது சகாவான ஸால்மனும் எதிர்ப்பதாகச் சமாதானம் சொன்ஞர்.

இம்மாதம் 21-ந் திகதி கர்னல் போர்ப்ஸ் தம்பதிகளுக்கு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உரித்துக்கள் நல உரிமை சங்கத்தார் ஒரு பிரியாவிடை உபசாரம் அளிக்கிருர்கள்.

போர்ப்ஸ் தம்பதிகள் பிரிட்டன் திரும்பியதும், இஷ்டப்பட்டால் ஆறு மாதங்களில், இலங்கை கௌரவ பிரஜா உரிமையை விட்டுவிட்டு, பிரிட்டிஷ் பிரஜையாகலாம். போர்ப்ஸ் தம்பதிகளுக்கு மீண்டும் இலங்கை திரும்பும் உத்தேசமில்லை என்றும், பிரிட்டனிலேயே பிரிட்டிஷ் பிரஜா உரிமையைப்பெற்று வசிக்க உத்தேசித்துள்ளாயும் தெரிகிறது.

பார்லிமெண்டில் காலியாகும் அவரது ஸ்தானத்துக்கு மற்ருெரு வெள்ளைக்காரர் சீக்கிரத்தில் நியமிக்கப்படலாம்.

இது பற்றி கர்னல் போர்ப்ஸை விசாரித்ததில் தாம் இத்தீவைவிட்டுச் செல்லுவது உண்மையே என்றும், வேறெதுவும் கூறுவதற்கில்லை என்றும் தெரிவித்தார்.

# மூன்று மந்திரிகளும் 'பேசாமடந்தை'களாயினர்

## ஒரே நாளில் இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

நீங்கள் செனேட் சபையைப் பார்த்திருக்கிறீர்களோ? சென்ற புதனன்று இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்தபோதுதான் அச்சபையை முதல் முதலாகப் பார்த்தேன்.

தலைவரையும் சேர்த்து 30 அங்கத்தினர்தான். பார்லிமெண்ட் சபையுடன் ஒப்பிடுகையில் இது சின்னது என்ருலும் அதிக வசதியானது. பொது மக்களுக்கும், பத்திரிகைக்காரர்களுக்கும் மிக வசதியான ஆசனங்கள்.

இங்கு பொது மக்கள் தடுக்கப்படவில்லை. போக்குவரத்து மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா, முன்னுள் மந்திரி குணசிங்கா, நிமால் கருணதிலகா முதலியவர்கள் உள்ளிட்டு, பலர் சபை விவாதத்தை கவனித்தனர்.

இச்சபையில் செனேட்டர் டோரிக்டி' சொய்ஸா, (சமசமாஜி) நடேசன் (சுயேச்சை) இவ்விருவரின் பேச்சும் என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. ஒரே உணர்ச்சி வசமாகப் பேசி, கேட்போர் மனதைக் கவர்ந்து விடுகிருர் சொய்ஸா. பிரதமரை கிழட்டு விபசாரிக்கு ஒப்பிட்டு காரசாரமாகப் பேசினர்.

செனேட்டர் நடேசன் பேச எழுந்ததும், வெளியே சென்ற அங்கத்தினரும் வந்து கவனமாகக் கேட்கிருர்கள். நுண்ணிய அறிவால், பல கேள்விகள் கேட்டு, எதிராளியை இடுக்கி பிடித்ததுபோல் திகைக்க வைத்து விடுகிருர், சிறந்த வழக்கறிஞரான நடேசன். அவர் பேச்சு செவிகளுக்கும், அறிவுக்கும் நல்ல விருந்தாகும்.

மரண தண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற மசோதாபற்றி செனேட்டர் நடேசன் பேசுகையில் "ஒருவெடி குண்டை"ப் போட்டார். இம்மசோதா, ஐக்கியநாடுகள் சங்க மனிதஉரிமை சாஸனத்துக்கு முரணனதென்றும், அந்த சாஸனத்தை ஒப்புக் கொண்ட இலங்கை, இம்மசோதாவை நிறைவேற்ற முடியாதென்றும், ஒருவர் குற்றம் செய்த காலத்தில் இருந்த தண்

(9ஆம் பக்கம் பார்க்க)

# சேர் ஜோன் தலைமையில் புதிய அரசியல் கட்சி?

— நமது அரசியல் நிருபர் —

சேர் ஜோன் தலைமையில், புதியதோர் அரசியற்கட்சியை அமைக்க முயற்சிகள் நடந்து வருவதாகத் தெரிகிறது. ஆனல் இப்போதுள்ள தகநாயக்கா மந்திரிசபை, இரண்டு கண்டங்களுக்கு உயிர் தப்பினும், அதன் நிலைமைபற்றி அக் கட்சியிலுள்ளவர்களுக்கே நிச்சயமில்லை.

அதில் வரவரப் பிளவுகள் அதிகரிக்கின்றன. திரு. தகநாயக்காவிடம் வெகுவாகப் பலருக்கும் விசுவாசமில்லை என்றும், தங்கள் பதவிகளைக் காத்துக்கொள்ளவே அதில் ஒட்டிக்கொண்டு இருப்பதாயும் கூறப்படுகிறது.

அவசரகாலப் பிரகடனம் இப்போது நீக்கப்பட்டதால் நாட்டில் அரசியல் பொதுக் கூட்டங்கள் இனித் தாராளமாக நடைபெறலாம். எதிர்க் கட்சிகளும், சிறப்பாக இடதுசாரிக் கட்சிகளும் இனிக் கூட்டங்கள் கூடி, பார்லிமெண்டுக்கு வெளியேயும், இந்த அரசாங்கத்தைத் தாக்கிப் பிரசாரம் செய்யும்.

பொதுத்தேர்தல் நெருங்கி வருகிறது. ஆகவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஒவ்வொரு கட்சியும் தீவிரமாக முனைந்துள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் இருக்க முடியாதவர்கள், சேர். ஜோனின் தலைமையில் புதிய கட்சி அமைத்துப் போட்டியிட முயற்சித்து வருகிருர்கள். ஆனல் அவர்கள் முயற்சிக்கு விசேஷ ஆதரவு கிடைப்பதற்கான அறிகுறிகளைக் காணவில்லை.

# சென்னை "மூர் மார்க்கெட்" சாயலில் யாழ்ப்பாணத்தில் புதிய சந்தை உருவாகும்

## பெரியகடை வியாபாரிகள் மேயருக்கு அளித்த வரவேற்பு

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

சென்னை மாநகரத்துக்கு விஜயம் செய்தவர்கள் அங்கு எதைத்தான் பார்க்கத் தவறினுலும் "மூர் மார்க்கட்"டைப் பார்க்கத் தவறுவதில்லை. பிரசித்திபெற்ற இந்த மார்க்கட்டில் இல்லாத பொருள் ஒன்றுண்டு. அதுதான் இறைவன் இதுவரை படைக்காத பொருள்!

இந்த மூர் மார்க்கட்டின் சாயலில்தான் யாழ்ப்பாணத்தின் புதிய இரண்டடுக்கு மாதிரிச் சந்தையும் அமைக்கப்படுமென்று, யாழ்ப்பாணமேயர் திரு. தங்கராசா துரையப்பா தெரிவிக்கிருர்.

### வரவேற்பு விழா

பெரியகடைச் சந்தையில் ஏற்கெனவே சில திருத்த வேலைகள் நடந்துள்ளன. இப்பொழுதிருப்பதைவிடக் கூடுதலான கடைகள் அமைக்கக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்திகளுக்கு நன்றிதெரிவிக்கும் முகமாகச் சென்ற புதன்கிழமை மாலை பெரியகடைச் சந்தையில் கடை வைத்திருப்பவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பணம் திரட்டி, மேயருக்கும் மற்ற நகர சபை அங்கத்தவர்களுக்கும் ஒரு வரவேற்பு விழா நடாத்திஞர்கள். பஸ்நிலையத்திலிருந்து சந்தைக் கட்டடம்வரை மேயர் மாலை அணிவிக்கப்பட்டு மேளதாளத்துடன் அழைத்துவரப்பட்டார். சிற்றுண்டியும் பான வகைகளும் வழங்கப்பட்டன.

### மாதிரிச் சந்தை


மேயர், இந்த வரவேற்பை ஏற்படுத்திய வியாபாரிகளுக்கு நன்றி கூறி, அவர்கள் காட்டிய உற்சாகம் தம்மை மூழ்கடித்துவிட்டதென்றும் விரைவில் கட்டப்படவிருக்கும் மாதிரிச் சந்தையில் அவர்களுக்குப் பல நவீன வசதிகள் கிடைக்கும் வகை செய்வதாகவும் வாக்களித்தார். உதவி மேயர் திரு. இராசரத்தினமும் பேசினர்.

கூட்டம் முடிந்தபின் ஒரு வியாபாரியிடம் பேசிக்கொண்டிருந்தபோது, "எல்லாம் சரி, ஐயா, கடை வாடகையைத்தான் குறைக்க மாட்டார்களாம்" என்று என்னிடம் நொந்துகொண்டார். தற்சமயம் ஒரு முழுக்கடைக்கு 50 ரூபாயும் அரைக்கடைக்கு 25 ரூபாயும் வாடகையாக வசூலிக்கப்படுகிறது.

### அவசரகாலச்சட்டம் நீங்கியது

காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் மரணத்துடன் நாட்டில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் சென்ற வாரம் அரசாங்கத்தால் நீக்கப்பட்டது.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ் ஸ்டோன் டயர்கள்

Distributors:

Tuckers Autodrome

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஒட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்.

போன்: 496 தந்தி: "ஒட்டோஸ்"

# யாருக்கு வாக்களிப்பது ? வவனியா மக்கள் பிரச்சினை

— நமது நிருபர் —

வவனியா

வவனியாத் தொகுதி மக்களுக்கு இடைத்தேர்தல் பெரிய தலையிடியைக் கொடுத்துள்ளது. உள்ளூர்ப் பிறந்த ஒருவரையே ஆதரிக்க வேண்டுமென்ற எண்ணம் மக்கள் பலரின் இதயத்தில் நன்கு இடம் பெற்று வருகின்றது.

தமிழரசுக் கட்சிக்கு வவனியாத்தொகுதி இதுவரை மதிப்புக் கொடுத்து வந்ததென்பதைப் பலரும் ஒப்புக்கொண்டபோதிலும், இன்றைய் சூழ்நிலையில் நிலைமை மாறிவிடவும் கூடுமெனவே சொல்லத் தோன்றுகிறது. இதற்கு முன்பெல்லாம் கிராமப் புறங்களிலே தமிழரசுக் கட்சி என்றால் உயிர். அதே நிலை இன்றும் நிலைத்திருக்குமென எதிர்பார்க்க முடியாது. சுயநலவாதிகள் திரித்த கயிறு யாழகற்றுச் சங்கம் என்ற கற்பனைச் சங்கம். இந்த இடைத் தேர்தலில் அது நன்கு செயலாற்றுவதாகச் சொல்லப்படுகிறது. எப்படி இருந்தபோதிலும் தமிழரசுக் கட்சி அபேட்சகருக்குப் போதிய ஆதரவு இருக்கிறதென்றே எங்கும் பேசப்படுகின்றது.

## உள்ளூர்த் தகராறு

உதிரியாக நின்று போட்டியிடும் முல்லைத்தீவைச் சேர்ந்த வாலிபர் திரு. ரி. சிவசிதம்பரத்துக்கு அண்ணன் தம்பி, மாமன் மச்சான் என்ற முறையில் உள்ளூர் வாசிகளின் அநுதாபம் தாராளமாக உண்டு. அரசாங்க உத்தியோகத்தைக் கைவிட்டு சேவை மனப்பான்மையுடன் அபேட்சகராக முன் நிற்கும் திரு. ரி. சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சிக்கு எதிரானவரல்லர் என்பதும் தமிழ் மக்களிடையே ஒரு பிரசாரமாக இடம் பெற்றுள்ளது. சிங்கள மக்களில் ஒரு பகுதியார் இவ்வாலிபரை ஆதரிப்பதாகவும் சொல்லப்படுகிறது. வன்னி நாட்டு விவசாயிகள் முன்னணியின் சார்பாக இடைத் தேர்தலில் குதித்துள்ள திரு. பி. முத்தையாவுக்கு வாலிபர்களின் ஆதரவு நிறைய இருக்கின்றது. பொது உடைமைக் கட்சியின் ஆதரவும் இவருக்கு இருந்து வருவதாகத் தெரிகிறது. சிங்கள மக்களிற் பலர் திரு. பி. முத்தையாவுக்கு ஆதரவளிப்பதாக உணரக் கிடக்கிறது. சிங்களர், தமிழர் என்ற பாகுபாடு இல்லாமல் இவர் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் சேவை செய்தமை பலருக்கும் திருப்தி அளித்துள்ளது.

## சமசமாஜக் கட்சி

சமசமாஜக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. டபிள்யு. பி. சிற்றம்பலம் மிகக் குறுகிய காலத்துள் சமசமாஜக் கட்சியின் குறிக்கோளை விளக்கி வெற்றி பெறுவதென்றால் அது பகீரதப் பிரயத்தனமே. ஒரு சிறந்த வழக்கறிஞரான திரு. சிற்றம்பலம் வெற்றி பெற்றால் மக்கள் அவரது சேவையை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமென்ற அபிப்பிராயமும் இங்கு நிலவுகின்றது.

## வவனியா மாவட்ட ஆசிரியர் கழகம்

வவனியா மாவட்ட ஆசிரிய கழகம் வவனியா அரசினர் பாடசாலையில் 27-11-59 இல் ஆரம்பமாகி 28-11-59இல் முடிவடைந்தது. இக் கழகத்திற்குப் பகுதி வித்தியாதரிசி திரு. எஸ். இராமலிங்கம் தலைமை வகித்து, சொற்பெருக்காற்றினர். மாணவரின் சரீர வயது, மன வயது, விவேகம் தனி ஆற்றல் என்பனவற்றின் சிறப்பியல்புகளைத் தமது பேச்சில் நன்கு விளக்கினர். பெருந்தொகையான ஆசிரியர்கள் கழகத்தில் பங்கு பற்றினர். க்லந்துரையாடல், என்ற நிகழ்ச்சியின் போது ஆசிரியர்களின் சந்தேகங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டன.

## புனித கபிரியேல் கல்லூரிப் பரிசளிப்பு விழா

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரியின் பரிசளிப்பு விழா 28-11-59 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. விழாவுக்கு அவிசாவளை மாவட்ட நீதிபதி திரு. ஏ. டி. ஜே. குணவர்த்தன தலைமை தாங்கினர். கல்லூரி அதிபர் திரு. செலாஸ்கி டயஸ் அறிக்கை சமர்ப்பித்தார். நீதிபதி அவர்களின் சொற்பொழிவுக்குப் பின்னர் திருமதி குணவர்த்தன பரிசில்களை வழங்கினர். மாணவ மாணவிகளின் ஆடல் பாடல் சபையோருக்கு மகிழ்ச்சி யூட்டின.

மாணவர் சங்கத் தலைவன் செல்வன் ஜோர்ஜ் யோசேப்பு நன்றியுரை கூறினர்.

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஒற்றுமையா, எதிர்ப்பா ? எது சரி ?

திருமதி கோமதி வன்னியசிங்கத்தை ஆதரிக்க ஏற்படுத்திய முதலாவது பிரசாரக் கூட்டத்தில், தமிழ் எம். பி.க்கள் தேர்தல் காலத்தில் தாம் பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு அரசாங்கத்துடன் சேர்ந்து பதவியில் ஒட்டிக்கொள்வது மிகப் பெரிய தவறு, என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியது மிகவும் உண்மை. கடந்த பத்து வருட காலமாக தமிழ் எம். பி.க்கள் அப்படித்தான் செய்து வந்திருக்கிருர்கள். இரண்டாவது, அதாவது சென்ற பாராளுமன்றத்தில் தமிழ் எம். பி.க்கள் தங்கள் வாக்குறுதியை மறந்து பதவியேற்கவில்லை. தமிழ் காங்கிரசும் அதன் தலைவர் திரு ஜி.ஜி. பொன்னம்பலமும் ஆளும்கட்சி விரும்பிக் கேட்டால் தாங்கள் அவர்களுடன் ஐக்கியப் பான்மையில் (Responsive Co-operation) சேர்ந்துழைப்போமென்று முன்பே, அதாவது முதலாம் பாராளுமன்றத்தின் இடைக்காலத்தில் அறிவித்திருக்கிருர்கள். இதற்குப் பின்னர் தான் சமஷ்டிக் கட்சி உற்பத்தியானதென்பது பலரும் அறிந்த விஷயம். சென்ற பாராளுமன்றத்தில் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் மந்திரி பதவியிலிருந்து விலக்கப்பட்டதும் திரு. வி. குமாரசுவாமி ஒத்துழைத்ததும் கவனிக்கத்தக்கது. அரசாங்கத்துடன் ஒத்துழைத்த அவர்கள் யூ. என். பி. கட்சி அங்கத்தவராய் மாறியது சிறு குற்றமேயானலும் பாதகம் ஒன்றும் நேரிடவில்லை. சென்ற பார்லிமெண்டில் ஆளும் கட்சியுடன் ஒத்துழைத்த தமிழ் எம். பி.க்கள் தமிழுக்கும் தமிழருக்கும் செய்த நன்மைகள் பல. எதிர்க் கட்சியிலிருந்த தமிழ் எம். பி.க்கள் தான் இலங்கைக்கும் தமிழுக்கும் விளைந்துள்ள கேட்டுக்கு ஆதிகாரணர் என்று எண்ண இடமுண்டு.

அதே கூட்டத்தில் திரு.செல்வநாயகம், 'எமக்கு உரிமை அளிக்கப்படும் வரை ஒற்றுமை உறவு என்ற பேச்சுக்கே இடமிருக்காது', என்றும் கூறியிருக்கிருர். தமிழுக்கும் தமிழருக்கும் முன்னிருந்தபூரண சம உரிமைசமஷ்டி அரசியலில் தானும் கிடைக்குமென்று கூற திரு. செல்வநாயகம் கூட முன்வர மாட்டார். கனடாவின் சமஷ்டி அரசாங்கத்தில்கூட ஆங்கில மொழிக்கும் பிரெஞ்சு மொழிக்கும் பூரண சம அந்தஸ்து இல்லை. பண்டாரநாயக்கா — செல்வநாயகம் உடன்படிக்கையில் காட்டப்பட்ட உரிமைகள் தான் கிடைக்கும். அது சம உரிமை யாகாது.

இது ஒருபுறமிருக்க, தமிழர் ஏன் சிங்களவருடன் ஒற்றுமை உறவு காட்டக்கூடாது? திரு. செல்வநாயகம் ஆட்சிப் பீடத்துடன் தான் ஒற்றுமை வேண்டாமென்கிருர். இழந்துவிட்ட உரிமையைப் பெறுவதற்கு ஆட்சிப் பீடத்தின் ஒற்றுமையல்லவா வேண்டும். சமஷ்டிமுறை ஆட்சி பெறுவதர்க்குக்கூடஆட்சிப்பீடத்தின் ஒற்றுமையும்உறவும்வேண்டும். ஆட்சிப் பீடத்துடன் வேற்றுமையும் எதிர்ப்பும் காட்டி நாம் கண்டதென்ன? இலங்கையின் தமிழ் எம். பி.க்கள்ஆட்சிப் பீடத்துடன் ஒத்துழைப்பது தான் உசிதமென்று சுருதி யுக்தி அனுபவங்களால் தெரிய வருகிறது. நாம் விரோதிகள் அல்லது அடிமைகள் அல்லது குறைந்தவர்கள் என்ற மனப்பான்மையுள்ளவர்கள் ஐக்கியப் பண்பில் ஈடுபடுவதில் பிரயோசனமில்லை. நாம் ஆட்சிப் பீடத்தினரோடு எல்லா வகையிலும் சமமானவர்கள். ஆட்சிப் பீடத்துடன் ஒத்துழைக்கவும், அதன் பிழைகளைக் கண்டிக்கவும், தமிழர்உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எமக்கு சக்தியுண்டு. ஆகையால் ஆளும் கட்சியுடன் ஒத்துழைப்பதே உண்மையான இராஜ தந்திரம்.

வீ. வீரசிங்கம்
மானிப்பாய்

## "பெருவெல"என்பது "பெருவெளி"யின் திரிபே

'பெருவெல' (Beruwela) பட்டினத்தின் சரித்திரத்தையும் அதற்கு அப் பெயர் வந்த காரணத்தையும் ஆராயும்படி அரசாங்கம் இரு சிங்கள அறிஞர்களை நியமித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. 'பெருவெல' என்ற பெயர் 'பேபர்' (Berber) என்ற அரபு சொல்லை அடியாகக் கொண்டதென்றும் ஆகையால் 'பெருவெல' என்ற பெயரை மாற்றி 'பார்பரின்' என்று வைக்க வேண்டுமென்றும் சோனகர்கள் கருதுகின்ருர்கள். இதைச் சிங்களவர் ஆட்சேபிக்கின்றனர். இது சம்பந்தமாகத் தமிழரின் அபிப்பிராயம் என்னவென்பதை எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

இலங்கையின் தென் மேற்கு, வட கிழக்கு கரையோரங்களில் சில்லறை வியாபாரிகளாக வந்து குடியேறிய முஸ்லிம்கள் எல்லோரும் தென்னிந்திய தமிழ் பேசும் முஸ்லிம்களேயாவார். போத்துக்கீசர் வந்த காலத்திலும் கூட இம் முஸ்லிம்கள் இலங்கையிலுள்ள தமிழ் அரசர்களினதும், தென்னிந்திய சிற்றரசர்களினதும் தயவையே நம்பியிருந்தனர்.

'பெருவெல' என்பது இலங்கையின் வட கிழக்கு பகுதியில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள 'பெருவெளி' என்பதன் எதிர்ப் பெயர். வட கிழக்குக் கரையோரமாக 'பெரு வெளி'யைப் போல் பிற முஸ்லிம் குடியிருப்புகளுமுண்டு: உப்பு வெளி, நிலா வெளி, குச்சு வெளி.

தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் வட மேற்கு கரையில் இறங்கிய முஸ்லிம்கள் கடலையடுத்து பெரிய வெளி இருப்பதைக் கண்டு அதற்கு 'பெருவெளி' என்று பெயரிட்டனர். இதுவே பின்னர் 'பெருவெல' வாகத் திரிந்தது.

எஸ். ஜே. குணசேகரம்
கோப்பாய்.

## கடகட "வான்"

பஸ்கள் கிடைக்காத சில சமயங்களில் மக்கள் வான்களில் செல்ல வேண்டியிருக்கின்றது. பஸ்கள்தான் கட கட சப்தம் போடும் என்று எண்ணக் கூடாது. இந்த வான்களின் கதையும் அதேதான்.

இப்படியான வான்களை ஏன் தெருவில் உலாவ விடுகின்ருர்களோ தெரியவில்லை. அவைகள் வான்கள் என அழைக்கப்படாமல் புகைவண்டி என அழைக்கப்பட்டாலும் தகும்.

கிளம்பும் போதே புகையுடனும் சப்தத்துடனும் கிளம்பி, அசைந்தாடி ஒரு படியாக அடைய வேண்டிய இடத்தை அடைகின்றது. அது வரை நேரமும் உள்ளே அடைபட்டுக் கொண்டிருப்பவர்கள் இடர்ப்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்ருர்கள். இது தனியாட்சியில் நடைபெறும் 'சேர்விஸ்' தானே என்ற தைரியம் வான்காரர்களுக்கு!

இவர்கள் மக்களின் வசதிகளைச் சற்றே சிந்தித்து நல்ல வான்களை வைத்து ஓடினல் எல்லோருக்கும் நன்மை பயப்பதாகும்.

க. செ.
நல்லூர்.

# பழமையைப் பேணும் பண்பு எழுத்தாளரிடையேஅமைதல் நன்று

### ஆண்டு விழாவில் கவியரங்கமும் கருத்தரங்கமும்

யாழ்ப்பாணம்


'எழுத்தாளன் ஓர் இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கவேண்டும். நாடு செழிப்பதற்கும் நல்லாட்சி நடைபெறுவதற்கும், மொழி வளமுறுவதற்குமான பணிகளை அவன்மேற்கொள்ளவேண்டும்'. இவ்வாறு பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். இவ்விழா யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கமண்டபத்தில் சென்ற சனிக்கிழமை மாலை நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. க. தி. சம்பந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசும் போது தமிழ் எழுத்தாளர் அனைவரும் ஒன்றுகூடி உருப்படியான காரியங்களைச் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டார். திரு. இ. மகாதேவன் தமது பேச்சில் எழுத்தாளர் செய்ய வேண்டிய பணிகளைத் தெரிவித்தார். அத்துடன் எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிடும் பத்திரிகைகள் எழுத்தாளர்களுக்குச் சன்மானம் அளிக்கவேண்டுமெனவும், இல்லாது போனல் எழுத்தாளர்களின் உற்சாகம் குறைந்துவிடுமெனவும் கூறினர். செயலாளர் த. திருநாவுக்கரசன் (நாவேந்தன்) சங்கம் சாதித்த சிலகாரியங்களை அறிக்கை வாயிலாக வெளியிட்டார்.

## கவிஞர்கள் வாக்கு

இவ்விழாவில் நடைபெற்ற கவியரங்கத்துக்குத் திரு.இராஜ அரியரத்தினம் தலைமைவகித்

(10ஆம் பக்கம் பார்க்க)


வின்டோஜெனே




வின்டோஜெனே

எல்லா வலிகளையும் அதிவிரைவில் குணமடையச் செய்யும் வலி நிவாரணி.

எல்லாவித தசைப்பிடிப்பு, தலைவலி, நரம்புத்தளர்ச்சி, கீல் வாதம், இடுப்புவலி, முடக்குவாதம், தொண்டைப்புண், தடிமன் போன்ற வியாதிகளிலிருந்து உடன் குணமடையச் செய்கிறது.

போலிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:
சிலோன் அன் போரின் ட்ரேட்ஸ் லிமிட்டெட்

ஏக விநியோகஸ்தர்கள்:
புரோவின்ஷியல் சப்ளையர்ஸ் லிமிட்டெட்

125, மெயின் வீதி, கொழும்பு. போன்: 78653

ஈழத்திருநாடு பெற்ற அருந்தவப் புதல்வர்களுள் சேர் பொன். இராமநாதனவர்கள் இணையற்றவராவர். இவர் தமிழ் மக்கள் தலைவனாக மட்டுமல்ல, இலங்கை மக்களனைவராலும் போற்றப்பட்ட ஒரு தனிப் பெருந் தலைவராக விளங்கினார். இவர் மறைந்த பின், டிசம்பர் 4-ம் திகதி வெள்ளிக்கிழமையோடு இருபத்தொன்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இவர் சிவபதம் அடைந்த தினம் ஸ்ரீ இராமநாதன் கல்லூரியிலும் பிற இடங்களிலும் கொண்டாடப்படுகின்றது. இவ்வமயத்தில் அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் குணாதிசயங்களைப் பற்றியும் நினைவு கூர்தல் பொருத்தமுடையதாகும்.

### 1851-ல் பிறந்தார்

இவர் கொழும்பு மாநகரில் பெருஞ் செல்வரும் அருங்கொடை வள்ளலுமாகத் திகழ்ந்த பொன்னம்பல முதலியாரவர்களுடைய அருந்தவப் புதல்வராக 1851-ம் ஆண்டு பிறந்தார். இவருடைய தாய் மாமனாராகிய சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் புதல்வரே உலகப் பிரசித்தி பெற்ற கலாவிற்பன்னரான டாக்டர். ஆனந்தக்குமாரசுவாமி அவர்களாவர்.

இராமநாதன் கொழும்பிலும் சென்னையிலும் கல்வி கற்றார். பின்னர்க் கொழும்பில் உயர்தர நீதி மன்றத்து வழக்கறிஞரானார். அம்மன்றத்தின் தீர்ப்புக்களை இவர் சிறந்த முறையில் வெளியிட்டார். இப்பணியைப் பாராட்டி இவருக்கு இங்கிலாந்திலுள்ள சட்ட வித்தியா பீடம், பரீட்சையின்றியே "பாரிஸ்டர்" பட்டத்தை வழங்கிற்று. இவர் தம் மாமனாரான சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களுக்குப் பின், தமது இருபத்தேழாவது வயதில் இலங்கைச் சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். அக்காலந் தொட்டு எண்பதாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த காலம் வரை அச்சட்ட சபையிலிருந்து இவர் ஆற்றிய பணிகளோ அளப்பில.

**சேர் இராமநாதன் சிங்கள-தமிழர் ஒற்றுமைக்காகத் தம்மாலானவரை முயன்று ஒன்றுபட்ட இலங்கையை அமைப்பதற்கு உழைத்து வந்தவர். இனத் துவேஷமோ மொழித் துவேஷமோ பாராட்டுமியல்பு அவரிடம் இருக்கவில்லை.**

# சொன்னயமும் சோர்விலா உழைப்பும் வாய்ந்தவர்

## இலங்கைத் தலைவர் சேர் பொன். இராமநாதன்

— பண்டித வித்துவான் க. கி. நடராஜன் பி. ஓ. எல். —

### சொல் வன்மை

"சொலல்வல்லன் சோர்விலன்
அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும்
அரிது"

என்னும் குறளுக்கிலக்காகச் சொல் வன்மையிலும், சோர்விலாது கருமங்களை ஆற்றுந் திறத்திலும், எந்தப் பேரவையிலும் தாம் எடுத்துக்கொண்டதை அடுத்து வாதிப்பதிலும், இறை பணியில் திளைத்து நின்றமையால் எதற்கும் எவர்க்கும் அஞ்சாத தன்மையிலும் இவர் மிக்கு விளங்கினார். இவர் தம் பேச்சு கேட்டார்ப் பிணிக்குந் தகையதாய்க் கேளாதாரும் கேட்பதற்கு வேட்குந் தகையதாய் விளங்கிற்று. இராஜ கம்பீரம் வாய்ந்த தோற்றமும் குரல் இனிமையும் பொருளாழமும் சொன்னயமும் பொருந்த இவர் சபாசிங்கமாக நின்று சபைகளிற் பேசும் பேச்சுக்கள் தனி அழகோடு விளங்கின. அவர் பேச ஆரம்பித்ததும் சபையில் நிசப்தம் நிலவும். அவர்மீது சென்ற அவையோர் கண்கள் அவரையே நோக்கி நிற்கும். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் நிகழ்த்திய பேச்சுக்களைச் சிறுவனாக இருந்தபோது கேட்கும் பாக்கியம் பெற்ற யான் இன்றும் அவற்றை மறக்க முடியவில்லை. அவர்தம் குணாதிசயங்களையும் சொல்லாற்றலையும் கண்ட இலங்கை மக்களனைவரும் அவரை மதித்தார்கள். அவர் தேசப்பணியும், சமயப்பணியும், மொழிப்பணியும் புரிதற்கு அவர்தம் வாக்கு வன்மை பெரிதும் உதவிற்று. அவர்தம் வாக்கு வன்மையைப் பாராட்டுவோர் "வெள்ளி நாப்படைத்த சொல்வீரர்" என்று அவரைப் பாராட்டுவர்.

### சொலிசிற்றர்-ஜெனரல்

இவர் சில ஆண்டுகளாகச் 'சொலிசிற்றர்-ஜெனரல்' பதவியிலமர்ந்து பல நன்மையான சட்டங்களை நிறைவேற்றச் செய்தார். அவற்றுள், பௌத்த ஆலயங்களின் சொத்துப் பாதுகாப்புச் சட்டமும் ஒன்றாகும். இப்பதவியிலிருந்தபோது சேர். இராமநாதனவர்களின் சமய வாழ்க்கையிற் குறிப்பிடத்தக்க ஒரு தொடர்பு ஏற்படலாயிற்று. தஞ்சையைச்சேர்ந்த ஸ்ரீ அருட்பரானந்த தேசிகர் என்ற சிவஞானியின் அருளால் இவர் யோகஞான அனுபவங்களைப் பெற்றார். அதுமட்டுமன்றி, இவர் மேற்றிசை நாகரிகப் போக்குகளைவிட்டுத் தமிழ் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டமைக்கும் இச் சிவஞானியே காரணர் என்ப. "எழும்பெரிய மாடமிகும் கொழும்பதனில் தன்றாதை இயற்றியிட்ட செழும் பிறைகொள் சடைமௌலிப் பொன்னம்பலவாணேசர் தளிசிறப்புற்றோங்கக் கொழும்பரிய கருங்கல்லால் ஆலயமொன்றமைத்திட்ட குரிசில்" என்று மகா வித்துவான் கணேசையரவர்கள் பாடியுள்ளபடி, கொழும்பிற் பல இலட்சம் ரூபாய் செலவுசெய்து பொன்னம்பலவாணேசர் ஆலயத்தைக் கருங்கல்லால் அமைத்தல் முதலிய கோயிற் திருப்பணிகளைச் செய்தார். தமிழ்நூல்கள், வடமொழி நூல்கள் முதலியவற்றைக் கற்றார். தாயுமானவர் பாடல்கள், திருவாசகம், பகவத்கீதை என்னும் மூன்றிலும் அவருக்கு ஈடுபாடு அதிகமாய் இருந்தது. அமெரிக்க அறிஞர்கள் அவரை அழைத்தபோது அவ்வழைப்புக்கிணங்கி அமெரிக்கா சென்று அந்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் பிற பேரவைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சைவசமயத்தின் பெருமையை எடுத்துப் பரப்பினார். ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த ஹாரிசன் அம்மையார் இவருடைய வாழ்க்கைத் துணைவியானார்.

### கல்வித்துறையில் ஆற்றிய பணிகள்

சேர் இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்திற் பெண்களுக்காக ஒன்றும், ஆண்களுக்காக ஒன்றுமாக நிறுவிய ஸ்ரீ இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி என்னும் இரண்டும் யாழ்ப்பாணத்திற் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணி புரிந்து வருகின்றன. இவைகள் ஸ்ரீ இராமநாதனவர்களுக்கமைந்த ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்றன. இவைமட்டுமல்ல, இவர்செய்த நூல்களும் பலவுள. அவை, பகவத்கீதையைத் தமிழிற் பெயர்த்து அதற்குச் சைவசித்தாந்தபரமாக எழுதப்பெற்ற விருத்தியுரை, திருக்குறட் பாயிரத்துக்கு எழுதப்பெற்ற "இராமநாதீயம்" என்ற விருத்தியுரை, செந்தமிழ் இலக்கணம், ஆத்திசூடி, மந்திரவிளக்கம் என்பவையாம். இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களுள், "மேற்றிசை நாடுகளில் ஆன்ம வித்தை" (Culture of the Soul among Western Nations) என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைச் சட்டசபைக்கு மக்கள் தாம் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை முதன் முதலாக 1910-ம் ஆண்டிலேயே ஏற்படலாயிற்று. அப்போது ஆங்கிலங் கற்றவர்கள் தெரிந்தெடுக்க வேண்டிய பிரதிநிதி பதவிக்கு சேர் இராமநாதன் அபேட்சகராக முன் வந்தார். டாக்டர். எச். எம். பெர்னாண்டோ என்னும் சிங்களப் பிரமுகர் இவருடன் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். சேர் இராமநாதனவர்கள் பெருந்தொகை வாக்குக்களால் வெற்றிபெற்றுப் பிரதிநிதியானார். இவர் சட்டசபையிலிருந்து ஆற்றிய தொண்டுகள் அளப்பில.

### 1915-ம் ஆண்டில்

முதல் உலக யுத்தம் நடைபெற்ற காலத்தில் 1915-ம் ஆண்டில் இலங்கைத் தேசாதிபதியின் இராணுவச் சட்டத்தை எதிர்த்துச் சட்டசபையில் இவர் 13 மணி நேரம் பேசினார். அது வெற்றிபெறாது போகவே, இவர் இங்கிலாந்து சென்று வாதாடினார். இவர் இங்கிலாந்து சென்ற காலம் மிக்க ஆபத்து நிறைந்த காலமாகும். ஜெர்மானிய யுத்தக் கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் எதிரிக்கப்பல்களை மூழ்கடிக்க முனைந்துநின்ற காலமாகும். ஆங்கிலக் கப்பல்களிற் பிரயாணஞ் செய்வோருடைய உயிர்களுக்கு ஆபத்து நேரிடக்கூடிய காலமாகும். அத்தகைய ஆபத்துக் காலத்தில் தமது உயிரையும் பொருட்படுத்தாமற் கப்பலில் இங்கிலாந்து சென்று மக்கள் உரிமைக்காக வாதாடியமை அவர் தம் அஞ்சாமையையும் பணி செய்வதற்காக அவர் செய்த தியாகத்தையும் காட்டுகின்றன. இவர் இங்கிலாந்து சென்று வாதாடியதன் பயனாக, இலங்கைத் தேசாதிபதி அப்பதவியினின்று நீக்கப்பட்டார். ஸ்ரீ இராமநாதன் இங்கிலாந்திலிருந்து, போர்க்களத்தில் வெற்றிமாலை சூடிக்கொண்டு வீடு திரும்பிய தளகர்த்தனைப் போலக் கொழும்புக்குத் திரும்பி வந்தபோது, இலங்கையிலுள்ள எல்லா இன மக்களும் திரண்டு வந்து இவருக்கு மகத்தான ஒரு வரவேற்பளித்தார்கள்; போற்றினார்கள். இவரைக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஊர்வலமாகக் கொண்டு வந்தபோது நிகழ்ந்த சிறப்பை நேரிற் கண்ட முதியோர்கள் இன்னும் அதை உணர்ச்சியோடு கூறுகின்றார்கள்.

1930-ம் ஆண்டிலும் இலங்கைத் தமிழர் அரசியல் நிலையைப் பாதுகாக்கும் பொருட்டுக் கடைசி முறையாக இவர் இங்கிலாந்து சென்றார். அங்கிருந்து இலங்கைக்குத் திரும்பி வந்த பிறகு தமது 80-வது வயசில் 1930-ம் ஆண்டில் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### இறைபக்தி

சேர் இராமநாதன் சிங்கள—தமிழர் ஒற்றுமைக்காகத் தம்மாலானவரை முயன்று ஒன்றுபட்ட இலங்கையை அமைப்பதற்கு உழைத்து வந்தவர். இனத்துவேஷமோ மொழித்துவேஷமோ பாராட்டுமியல்பு அவரிடம் இருக்கவேயில்லை. அரசியல், சமூகத் திருத்தங்கள் தாமாகவே முதிர்ந்து கனிந்து பரிணமிக்க வேண்டுமன்றி வலிந்து விரைந்து புகுத்தப்படத்தக்கனவல்ல என்னும் கருத்துடையவர். எந்தக் கஷ்டசாத்தியமான காரியத்தையும் எந்தக் கஷ்டமான சூழலிலும் எதிர்த்துநின்று சாதிக்கும் வீரர். உறைத்த இறைபக்தி உடையவர். இத்தகைய ஒரு பெரியாரை மீளவும் இலங்கை பெறுமா?

இராமநாதன் புகழ் வாழ்க!

# பழுதடைந்த படகுகளால் மனித உயிரே பலியாகின்றது

## தீவுப்பகுதிகளை இணைக்கும் சீரற்ற 'பாதை'

— நமது நிருபர் —

வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே புத்திசாலித்தனம். இதை உலகத்தில் எவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அதன்படி ஒழுகுபவர்கள் எத்தனை பேர்? எல்லா விஷயத்தையும் அசட்டையாகப் பின்போட்டுவிட்டுப் பின்னர் ஆபத்து வந்தவுடனே 'குய்யோ முறையோ' என்று பிரலாபிப்பது பலரிடையே காணப்படும் ஒரு பெருங்குறை. மழையில் நனைந்து ஜலதோஷம் பிடித்த பிறகுதான் குடைவாங்குவதற்குக் கடைக்கு ஓடுகிறோம். வெள்ளம் அடுக்களைக்குள் நுழைந்த பின்தான் மண்வெட்டியைத் தேடுகிறோம். தேய்ந்த சைக்கிள் டயர் தார்றோட்டில் வெடித்த பிறகுதான் உருட்டிக்கொண்டு சைக்கிள் கடையை நாடுகிறோம்.

### யாருடைய தவறு?

தனிமனிதர்தான் இப்படியென்றால் மக்களின் நன்மையைக் கருதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அதன் மேற்பார்வையில் செயலாற்றும் அரசாங்கப் பகுதிகளுமே இவ்வித தவறுகளைச் செய்யவேண்டுமா? எடுத்துக்காட்டுக்கள் அநேகம் உண்டு. கவலையீனத்தாலும், சோம்பேறித் தனத்தினாலும், பொறுப்புணர்ச்சி இல்லாதமையினாலும் நாளுக்குநாள் ஏராளமான பணமும்பொருளும் விழலாகின்றன. பணவிரயம்தான் போகட்டும், இத்தவறுகளுக்கு மனித உயிர்களே பலியாகின்றன என்றால், கடுமையான பரிகாரம் தேடும்காலம் நெருங்கிவிட்டது.

### 'உடைசல்' பாதை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து தீவுப் பகுதிகளுக்கு மனிதரையும் மாடுகளையும் கார்களையும் கரத்தைகளையும் ஏற்றிச் செல்லும் 'பாதை'கள் ஒல்லாந்தர் காலத்தவை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகப் பழம் 'உடைசல்கள்'. அவற்றில் பிரயாணம் செய்பவர்கள் அவசியம் ஆயுள் இன்ஷ்சூரன்ஸ் எடுத்துக்கொண்டுதான் ஏறவேண்டும். இந்தப் 'பாதை'களை உபயோகிப்பதே தவறு. உபயோகிப்பவற்றை அடிக்கடிபழுதுபார்க்காமல்விடுவது மகாதவறு. இதன் பலனாக சில மாதங்களுக்கு முன் ஒரு பெண்மணி உட்பட இருவர் கடலில்மூழ்கி மாண்டனர்.

காரைநகர் — ஊர்காவற்றுறைகடவையில் நடந்த இந்தக் கோரசம்பவத்தையிட்டு விசாரணை நடாத்திய யாழ்ப்பாணம் நீதிபதி திரு. டேவிட் 'விபத்தினால் ஏற்பட்ட மரணம்' என்று தீர்ப்பளித்தபோதிலும் சில முக்கியமான விஷயங்களையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

### மோசமான நிலை

இந்தப் பாதைகளை வாங்கிக் கொடுப்பதும் அவற்றை அடிக்கடி பழுதுபார்த்துச் சீரான நிலையில் வைத்திருப்பதும் அரசாங்க பொதுவேலைப் பகுதியின் (P. W. D.) கடமைகளாகும். போக்குவரத்துச் சேவையைச் செவ்வனே கொண்டு நடாத்துவது அரசாங்க அதிபரின் கடமை. ஆனால் உண்மையில் அதை நடாத்துபவர், கேள்விப்பத்திரத்தின் (ரெண்டர்) மூலம், அரசாங்க அதிபரிடம் அனுமதிபெற்ற பிறிதொரு ஆசாமி. இவரை அரசாங்க அதிபரோ பொதுவேலைப் பகுதியோ கண்காணிப்பதில்லை. இப்படி ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கைபோட்டதினால்தான் இந்தப் படகுச்சேவை இவ்வளவு மோசமான நிலைக்கு வந்துள்ளதென்று நீதிபதி திரு. டேவிட் குறிப்பிடுகிறார்.

குறித்த பாதை மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது என்று அரசாங்க அதிபர் பொதுவேலைப் பகுதிக்குப் பல கடிதங்கள் எழுதியும் ஒன்றும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அது கவிழ்ந்ததற்கு ஒரு மாதத்திற்குமுன்புதான் பொதுவேலைப்பகுதித் தலைவர் எழுதிய கடிதமொன்றில் "பாதை பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்திருந்தார். "யாருடைய சிபார்சின் பேரில் அவர் இப்பேர்ப்பட்ட ஓர் உறுதியளித்தார்?" என்று நீதிபதி கேட்கிறார்.

# அனுராதபுரத்தில் ஒரே குளிர்ச்சி

## மகா விலாச்சி நிரம்பி வழிகிறது

அனுராதபுரம்.

இலங்கையின் வட பகுதியில் பெய்கின்ற மழையைப் போலவே இங்கும் மழை தொடர்ந்து பெய்து வருவதால் குளங்கள் மலிந்துள்ள அனுராதபுர மாவட்டம் குளிர்ச்சி பெற்று வருகின்றது. ஏராளமான விவசாயிகள் தங்கள் பகுதிக் குளங்களில் தண்ணீர் நிரம்பி வழிவதைக் கண்டு மகிழ்ந்து விவசாயத்தில் இறங்கியுள்ளார்கள்.

மகா விலாச்சி என்னும் இருபதடி ஆழமான குளம் ஒன்று நிரம்பி வழிகிறது என்று செவ்வாய்க்கிழமையன்று அனுராதபுரம் நீர்ப்பாசன இலாகாவினர் நமது நிருபரிடம் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து விவசாய வளர்ச்சியும் காணப்பட்டது.

கட்டியாவ என்னும் குடியேற்றப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் முப்பது டிராக்டர்கள் தருவிக்கப்பட்டு, ஆயிரத்துக்கு அதிகமான ஏக்கர் நிலங்கள் உழப்பட்டுள்ளன. அவற்றின் விளைச்சல் இம்முறை அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

—ந. நி.

## 13. உழைப்பாளி

சித்தம் போக்குச் சிவம் போக்காகச் சென்று, பழக்க தோஷத்தினாற் போலும் அக்கரையை வள்ளம் அடைந்து விட்டது. ஆனால் வேலாயுதத்தின்மனத்திலோடிய எண்ணங்களுக்கு ஓய்ச்சலேது? ஒழிவுதான் ஏது? மானிட ஜாதி உற்பத்தியான காலந் தொட்டே உலகின் துன்பத்திற்கான காரணங்களை எத்தனை எத்தனையோ நல்லாத்மாக்கள் ஊன்றிச் சிந்தித்திருக்கிறார்கள். அவர்களிற் சில பெரியாரின் சிந்தனைகள் எழுத்து ரூபத்தில் எழுதப்பட்டு மானிடனைக் கைதூக்கி விட உதவும் நூலேணிகள் என்ற தத்துவங்களாக உலாவத்தான் செய்கின்றன. ஆனாலும் இன்னமும் துன்பம் ஓய்ந்தபாடில்லை. துன்பத்தின் காரணம் என்ன என்று காண முயற்சிக்கும் சிந்தனைகளுக்கும் ஒழிவில்லை. சங்கிலிக் கோவையின் புத்தம் புதிய இழையாகத் தன் சிந்தனைகளும் இருக்கின்றன என்ற பிரக்ஞை வேலாயுதத்திடம் இல்லை என்பது உண்மைதான்! ஆனாலும் போதி மரத்துப் புத்தருக்கும், புங்கை மரத்து வேலாயுதத்துக்கும் ஒற்றுமை இருக்கலாம் என்பதில் யாரும் ஆட்சேபனை சொல்ல முடியுமா?

இஸ்மாயிலுக்கு ஏற்பட்ட விபத்தினால் உண்டான அதிர்ச்சியிலிருந்து இன்னமும் வேலாயுதமும் மீளவில்லை. எண்ணங்களின் ஓட்டத்தில் அவனைப் பொலிசார் தேடிக் கொண்டு வந்து விசாரிப்பார்களோ என்று வேலாயுதம் எண்ணினான். அப்படி வந்தால் என்ன? அக் கூட்டத்தினர் வந்ததையோ, டைனமைற் வெடி வைத்ததையோ தான் காணவில்லை என்று தீர்மானமாகச் சொல்லிவிடுவது என்று வேலாயுதம் தனக்குள் திட்டம் பண்ணிக்கொண்டான். ஆம்; அவன் இஷ்ட தெய்வமான கோணேசரின் மேல் ஆணையிட்டிருக்கிறான். அதற்கும் மேலாக மற்ற நான்கு பேரையும் காட்டிக் கொடுத்து அவர்களையும் சிறைச்சாலைக்கு அனுப்புவதினால் யாருக்கும் எந்த நன்மையுமே ஏற்படப் போவதில்லை. என்ன செய்யலாம்? இஸ்மாயிலின் விதி அவ்வளவுதான். வேலாயுதம் பெருமூச்சுவிட்டான். அவன் நெடுமூச்சின் உஷ்ணமான சுவாலை, அந்த அகோர வெய்யிலின் தகிப்பிற் கலந்து கொள்கையில், வேலாயுதத்தின் சுமை ஒன்று இறக்கப்பட்டு அவன் இருதயம் சற்றே இலேசானது போலத் தோன்றிற்று. ஆம், தன் சிந்தனைகளின் தோல்வியையும், தன் புத்திக் கெட்டாத தவிர்க்க முடியாத சம்பவங்களின் விளைவுகளினால் உண்டாகும் அதிர்ச்சி என்கிற பென்னம் பெருஞ் சுமையையும் இறக்கி வைக்க எவனோ ஒரு புத்திசாலி ஏற்கெனவே விதி என்ற சுமைதாங்கியைக் கட்டி வைத்திருக்கிறான். அந்தச் சுமை தாங்கி மட்டும் இல்லாவிட்டால் வேலாயுதத்தைப் போன்ற ஈர நெஞ்சினர்கள் சிந்தனையின் அழுத்தத்தினாலேயே குன்றிப் போயிருப்பார்கள். அல்லது பைத்தியம் பிடித்தவர்களாக உலகிலே உலவுவார்கள்.

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

பெருமூச்சு விட்ட வேலாயுதம் மெதுவாக நடந்து தன் குடிசைக்குப் போனான். குடிசையின் படலை அவன் கட்டி வைத்தபடியே தான் இருந்தது. அதை அவிழ்த்துத் திறந்து கொண்டு உள்ளே பார்த்த போதும் அங்கே செல்லனைக் காணவில்லை. 'சரிதான். பயல் வீட்டிற்குப் போயிருப்பான். இனிமேல் வரமாட்டான்' என்று எண்ணிக் கொண்ட வேலாயுதம் தட்டியில் தன் உடல் முழுவதையும் நீட்டிப்படுத்தான்.

தன் ஆயிரமாயிரம் அலைக் கரங்களையும் ஓய்வு ஒழிச்சலின்றிக் கொட்டி மோதி ஆர்ப்பரிக்கும் ஆழ்கடலின் கரையிலே, மீன்பிடிகாரன் அயர்ந்து நித்திரை செய்வதில்லையா? கடகடவென்று சப்தமிட்டுக் கொண்டோடும் ரயில் தண்டவாளத்தருகே, ரயிற் பாதைத் தொழிலாளி தன்னை மறந்து தூங்குவதில்லையா? அந்தத் தொழிலாளிகளைப் போலவே, உலகின் வக்கிர விசித்திரங்களை எண்ணிக் குமுறும் தன் இதயத்தின் இரைச்சலுக்கு மத்தியில், கூம்பிச் சாம்பிய உள்ளத்தோடும் சோர்ந்து வதங்கிய உடலோடும் வேலாயுதம் உறங்க முயற்சி பண்ணினான். ஆனால் அவன் துறைக்காரன். பிரயாணிகள் அவனைத் தேடி எந்த நேரத்திலும் வருவார்கள். அவர்கட்கு அவன் ஒரு வைத்தியனைப்போல உதவி செய்ய மனச்சாட்சியிற் கடமைப்பட்டிருக்கிறான்.

இப்போதுகூடத் தூரத்தில், ஓஹோ ஹோ என்ற குரல்கள் கேட்கின்றன. யாரோ மாடு 'சாய்த்துக் கொண்டு' வருகிறார்கள்போல இருக்கிறது. வேலாயுதம் தட்டியில் எழுந்து உட்கார்ந்து கொண்டு குரலைக் கூர்ந்து கேட்டான். வரவர அந்தக் குரல்கள் அண்மையில், மிகவும் அண்மையில் தெளிவாகவே கேட்டன. வேலாயுதம் தன் குடிசையை விட்டு வெளியே வந்தான்.

அவன் குடிசைக்குச் சற்றுத் தூரத்தேயிருந்த, நிழல் வாகை மரத்தின் கீழே இவ்விரண்டாகப் பிணைக்கப்பட்ட கடாமாடுகள் ஏறத்தாழ இருபது வரை நின்று கொண்டிருந்தன நடையாக நடந்து வந்த அந்த அசமந்தமான மிருகங்களின் சாம்பர் மேனியிலும், நீண்ட முகத்தின் உச்சிச் சரிவிலே நீட்டிக் கொண்டிருக்கும் இமைகளுக்கு இடையிலே வெளிறிக் கசியும் கண்களிலும் ஒரு துக்ககரமான சோம்பர் படர்ந்து கிடந்தது. அந்தக்கடாக்களை நடாத்திவந்த மூவரும் அலுத்துக் களைத்தவர்களாக நிழல்வாகை மரத்தின் கீழே குந்திக்கொண்டிருந்தார்கள்.

வேலாயுதத்தைக் கண்டதும் அவர்களில் ஒருவன் எழுந்து கொண்டே சொன்னான்; "தம்பி; காலம விடிவெள்ளி காலிக்க முதல் வெளிக்கிட்டோம். இப்பதான் வந்து சேர்ந்தோம். இருட்டுவதற்குள் தம்பலகாமத்திற்குப் போகணும்" என்றான்.

"என்னிலே ஒரு சுணக்கமும் இல்லை அண்ணே. வெளிக்கிடுங்களேன்" என்றான் வேலாயுதம்.

"இல்லைத்தம்பி, சோறு கட்டிற்று வந்திருக்கம். பசியாறிற்றுப் போவோம்" என்று சொல்லிக்கொண்டே அந்த முதியவர் தன்னுடன், வந்த மற்ற இருவரையும் துரிதப்படுத்தினார்.

அவர்கள் மூவரும் கங்கையில் இறங்கி, கங்கைக் கரையின் வெண்மணலைச்சுட்டு விரல் நுனிகளில் எடுத்துத் தங்கள் பற்களைத் தேய்க்கத் தொடங்கினார்கள். பல்தேய்த்து முடிந்ததும் கங்கையில் மூழ்கி முகத்தையும் உடல் முழுவதையும் கழுவிக்கொண்டு கரையேறினார்கள். கரையேறுகையில் அவர்களில் வயதில் இளையவனான தாமோதரம் "வாங்கண்ணே சாப்பிடுவோம்" என்று வேலாயுதத்தைக் கையிற் பிடித்திழுத்தான்.

வேலாயுதம் சிறிது பிகு பண்ணிக்கொண்டு திமிறிப் பார்த்தான். அந்த இளைஞன் விடவில்லை. காட்டிலும் மேட்டிலுமாகக் கடாமாடுகளின் பின்னாலே திரிந்து உரம்பெற்ற உடல் அல்லவா? வேலாயுதம் அவனுக்கு எம்மாத்திரம்? தாமோதரம் அவனை இழுத்துக்கொண்டே போய்விட்டான்.

முதியவனான அருணாசலம் சோற்றுப் பொட்டலத்தைப் பிரித்தான். நால்வரும் வாழையிலைத் துண்டுகளில் சோற்றுக் கட்டிகளைப் பெயர்த்து வைத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாப்பாடா அது? வெறுஞ் சோறும் ஒரே ஒரு குழம்புந் தான். அதனாலென்ன? ஏழெட்டு மைல் வெய்யிலில் நடந்து விட்டுக் கங்கையில் ஆயாசந் தீரும்படி குளித்தபின், கொட்டியாபுரத்துப் பனங்கழியரிசிச் சோறும் வரால் மீன் குழம்பும் சேர்ந்த கட்டுச் சாதத்தை நீங்கள் என்றைக்காவது ஒருநாள் கங்கைக்கரையில் இருந்து சாப்பிட்டிருக்கிறீர்களா? அந்த அமுதத்தை உண்ணும் பாக்கியம் எல்லார்க்கும் கிட்டாது. வேலாயுதம், அருணாசலம், தாமோதரம் போன்ற உழைப்பாளிகட்குத் தான் அதுகிட்டும். அந்தப் பாக்கியங்கிட்டாத ஆயிரக் கணக்கான வாசகர்களுக்கு என் அனுதாபத்தைத் தெரிவிப்பதைத் தவிர வேறு வழி எனக்கில்லை.

நால்வரும் சாப்பிட்டபின்னர் கங்கைத் தண்ணீரில் வாயலம்பி விட்டு, கங்காதேவியின் மேற்பரப்பைக் கைகளால் அலசி விட்டு இரு கைகளாலும் தெளிந்த தண்ணீரை அள்ளிக் குடித்தார்கள். உண்ட கிறக்கத்தில் அவர்கள் உடலெல்லாம் வெயர்த்துச் சிறிது களையாகவும் இருந்தது. ஆனாலும் களைப்பைப் பொருட்படுத்த முடியுமா அவர்களால்? இன்னமும் நெடுந் தூரம் போக வேண்டும்.

ஆம்; நெடுந் தூரமேதான். ஆனால் மாட்டுக் காரர்களுக்கு எந்த நெடுந் தூரமும் காலடியிலேதான் என்பது வேலாயுதத்திற்குத் தெரியும். எனவே அவர்கள் அக் கரைக்குப் போகத் துரிதப் பட்டபோது, மாட்டோடு மாடாக அவர்கள் காடு கழனி எல்லாம் அலைந்து திரிவதுதான் வேலாயுதத்துக்கு ஞாபகத்துக்கு வந்தது. இந்த நினைவோடு வேலாயுதம் தன் தோணியில் ஏறித் தன் ஆசனத்திற் சவளோடு இருந்து கொண்டான்.

மாட்டுக்காரர் மூவரும் தங்கள் கடாக்களைச் 'சாய்த்துத்' தண்ணீரில் இறக்கி விட்டார்கள். தண்ணீர் என்றால் கடாக்களைக் கேட்கவா வேண்டும்? ஒரே கொண்டாட்டம்தான். நாட்கணக்காக ஊணையே மறந்து தண்ணீரிற் கிடக்கக் கூடிய சலசரங்கள் தான் அவை. அவற்றை நீரை விட்டு வெளிக் கொணர்வதோ, அல்லது அக் கரைக்கு நீந்த வைப்பதோ பிரம்மப் பிரயத்தனந் தான். இப்போதுங்கூட அவைகளைத் தண்ணீரில் இறக்கி விட்டு அக் கரைக்கு நீந்துவிக்க 'ஓஹோ ஹோ' என்று குரல் காட்டிய போது அவை திமிறிக் கொண்டு பின்னாற் சென்று கொண்டிருக்கும் வள்ளத்தை இடக் கரையாலோ, அல்லது கிடைக்கும் தருணத்தைப் பயன் படுத்திக்கொண்டு வலப் பக்கமாகவோ ஏய்த்துக் கொண்டு மறுபடியும் இக் கரைக்கே வந்துவிட முனைந்தன. ஆனாலும் வேலாயுதம் விடவில்லை. மாடுகளின் போக்கையறிந்து வள்ளத்தை, அவைகளைத் தொட்டுந்தொடாததுமாக, மிக அருகாமையில் சாவதானமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். முன்னணியத்தில் நீண்ட கழிக்கம்புடன் இருந்த தாமோதரம் மாடுகளை அடித்தும் விரட்டியும், அநுதாப வார்த்தைகள் கூறியும் வழி நடத்திக் கொண்டிருந்தான். மற்ற இருவரும் ஓரோர் வேளை பலமாகவும் சிலவேளை இலேசாகவும், இன்னுஞ்சில வேளைகளில் எதிர்த் திசைக்குமாகத் துடுப்புகளை வலித்துக் கொண்டிருந்தனர்.

அதோ; அந்தத் 'திரிகைக் காலன்' ஜோடி முன்னுக்கு வேகமாகச் செல்கிறது. கூட்டத்திலிருந்து அது இப்போது பிரிந்தே விட்டது. எதற்காக அது தலை தெறிக்க வேகமாகச் செல்கிறது? திரும்பிக் கொண்டு மறுபடியும் வந்த இடத்திற்கே செல்லப் போகிறதா? தாமோதரம் இப்படி நினைப்பதற்குள்ளேயே அது திரும்பி விட்டது. பகுத்தறிவில்லாத மிருகங்கள் ஒன்று திரும்பினால் மற்றவை நிற்குமா? நிற்க வைக்கத்தான் முடியுமா? எல்லாமே திரும்பி விட்டன. அவைகள் முன்னேறிச் சென்று வளைந்த வேகத்தில் வள்ளத்தை முன்னேற்றி வளைக்க முடியவேயில்லை. கடாக்கள் எல்லாமே திரும்பி, வந்த கரைக்கே வேகமாகச் செல்கின்றன. வள்ளத்தைத் திருப்பி விடுவதைத் தவிர வேறு வழியே கிடையாது!

வள்ளம் கரையை முட்டியதும் முட்டாததுமாக அருணாசலம் கரையிற் குதித்துக் கொண்டு முன்னால் ஓடிக் கரையில் இறங்கி மனம்போன போக்கிற் சென்று கொண்டிருக்கும் கடாக்களைத் தலைக் கட்டமாக மறித்துத் திருப்பினான். திரும்பவும் அவைகள் வள்ளத்தடிக்கு வந்து தங்கள் எசமானர்களை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றன.

அருணாசலம் சொன்னான். "இனிமேல் இவைகளை அக்கரைக்குக் கொண்டு சேர்ப்பதென்றால் பெரிய வில்லங்கந் தான். போன சனியன்கள் திரும்பிக் கொண்டு வருகிறதே." அவனுக்கு வந்த ஆத்திரத்திலும் கோபத்திலும் திரிகைக்காலனுக்குத் தன் கைக் கம்பு முறிந்து சிதறும் வரையும் அடித்தான். பூமித்தாய்க்கு அடுத்த செவிலித் தாயாக, இந்தப் பிராந்தியத்து மக்கட்கு அன்னமளித்துக் காப்பாற்றும் அந்தக் கடாப் பிணையல், அத்தனை அடிகளையும் தனக்கு முந்திய பூமித்தாயைப் போலவே பொறுத்துக் கொண்டு அருணாசலத்தைப் பரிதாபமாகப் பார்த்தது. அருணாசலமும் இரக்க மேலிட்டவனாக அதன் அருகிற் சென்று அதன் முதுகைத் தடவிக் கொடுத்தான். தந்தை சொல் தட்டாத தனயனாக அந்தக் கடாப் பிணையலும் அடங்கி நின்றது.

சில நிமிடங்கள் கழிந்ததும் அருணாசலம் சொன்னான். "நான் மாடுகளின் பின்னாலேயே நீந்திவருகிறேன். நீங்களும் வள்ளத்தைக் கொண்டுவாருங்கள். இல்லாவிட்டால் அக்கரைக்கு கொண்டு போகவே முடியாது.'

வேறுவழியின்றி வள்ளத்தில் இருந்தவர்கள் அவன் சொல்லியதை ஒப்புக்கொண்டார்கள். அருணாசலம் கடாக்களை மறுபடியும் நீரிற்பாய்ச்சி, திருகற்காலனின் முதுகிற் தொட்டபடியே அவைகளின் பின்னால் நீந்தத் தொடங்கினான். எசமானனும் ஆற்றோடு வருகிறான் என்ற நினைப்பில் கடாக்களும் ஏதும் குழப்பமின்றி ஆற்றில் நீந்திச் சென்றன. வள்ளமும் பின்னால் சென்று கொண்டிருந்தது.

வேலாயுதத்தின் சிந்தனைகளும் அருணாசலத்தின் பின்னாற் சென்றன. இந்த மாட்டுக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களே ஓர் அபூர்வப் பிறவிகள். ஊரிலே பலசாலியும் சண்டித்தனமுள்ளவனாகவும் இருப்பவனெல்லாம் மாட்டுக்காரனாகத் தான் இருப்பான். உழைப்பு அவர்களுக்கு வலுவைக் கொடுத்திருக்கிறது. வருவாய் எவருக்கும் அடங்காத சண்டித்தனத்தைக் கொடுத்திருக்கிறது.

இதோ; இதுவரை காலமும் காட்டிலே தன்னிஷ்டத்திற்குத் திரிந்த மாடுகளைத் துரத்திக் கயிற்றால் வீசிப்பிடித்துப் பிணைத்து இட்டுக் கொண்டு வருகிறார்கள். இவைகளைப் பிடித்துவரச் சிலவேளை அவர்கள் மன்னம்பிட்டி வரை காட்டுவழியாகச் சென்றிருக்க வேண்டும். காட்டிலே அவர்களுக்குத் தெரியாதஇடமும் இல்லை வழியும் இல்லை. மாடுகளைத்

(5ஆம் பக்கம் பார்க்க)





உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே

வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய

லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

இலங்கைத் தமிழரின் எதிர்காலப் பொருளாதாரம்: 2

# அரசியல் அதிர்ச்சியால் ஏற்படும் மாறுதல்

## பொருளாதார விருத்தியில் மக்களின் ஆர்வம்

— எஸ். எஸ். பிள்ளை —

வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் மூலாதாரத் தொழில்களாகிய கமத்தொழில், கடற்றொழில் குறிப்பாக 1940-ஆம் ஆண்டுவரை விருத்தி பெருது பரம்பரை நோக்கங்கள், முறைகள் கொண்டதாகவே அமைந்திருந்தது சிறு மூலதனம் உடையவர்களுக்கு வர்த்தகத் துறையிலும், கற்றவர்க்கு உத்தியோகத்துறையிலும் தென்னிலங்கையில் வாய்த்த சந்தர்ப்பமே இதற்கு முக்கிய காரணமாகும். ஏககாலத்தில் மலாயாவிலும் படித்தவர்க்கு வேண்டிய உத்தியோக வசதிகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இதனுல் இவர்களது கல்வியின் நோக்கமும் அரசாங்க உத்தியோகத்தை நாடியே அமைந்திருந்தது. தமிழ் மக்களிடத்து ஆர்வம், சாதுரியம், விடாமுயற்சி ஆகிய குணதிசயங்கள் இயல்பாகவே அமைந்திருந்ததினுல் 19ஆம் நூற்ருண்டிலும், 20 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களனைத்தையும் பயன்படுத்தக் கூடியதாகவிருந்தனர். இதனுல் இவர்கள் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டிய பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியையும் பலனுகாத வருவாய் மூலம் தருவிக்கக் கூடியவர்களாயும் இருந்தனர்.

### ஐந்து ஆண்டுத் திட்டம்

இரண்டாவது உலகயுத்தத்தின் காரணமாக உள் நாட்டில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டினுலும், அதன் பின் இவற்றுக்கு ஊக்கமளிக்கக் கூடிய கொழும்புத் திட்டம் 1949 இல் நாணய மதிப்பை குறைத்ததால் ஏற்பட்ட பணப்புழக்கம் இரு ஐந்து ஆண்டுத் திட்டங்கள் வனப்பிரதேச மலேரியாத் தடுப்பு ஆகியவை காரணமாக பரம்பரை நோக்கங்கள், முறைகள் கொண்ட தொழில்கள் முன்னேற்றமான மாறுதல் அடையும் தன்மையை 1940 ஆம் ஆண்டிலிருந்து அடைந்து வந்தது. தொழில்களை விஸ்தரிக்கும் சிந்தனை எழுந்தது. எருதுகளுக்கும், மரக்கலப்பைகளுக்கும் பதிலாக உழவு யந்திரங்களையும், இரும்புக் கலப்பைகளையும், துலாப்பட்டைக்குப் பதிலாக நீரிறைக்கும் யந்திரங்களையும், படகுகளை ஓட்டிய பாய்களுக்கு பதிலாக யந்திரங்களையும் சிறிது சிறிதாக உபயோகத்திற்கு கொண்டு வந்தனர்.

சமீபகாலத்தில் அரசியலில் ஏற்பட்ட குழப்பம், அதிர்ச்சி காரணமாக வர்த்தகம், உத்தியோகம் முதலியவற்றிற்குத் தென்னிலங்கையில் இருந்த சந்தர்ப்பம் ஒழிந்து விட்டது. இது காரணமாக இப்பகுதியின் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிய ஆர்வம் மக்களிடையே எழுந்தது; இதனுல் இப்பிரதேச பொருளாதாரம் மாறுதல் அடையும் தன்மையிலிருந்து முன்னேறி, வளர்ச்சியடைவதற்கு ஆரம்பிக்கும் தன்மையை 1955 இல் இருந்து அடைந்து வருகிறது. பல்வேறு நாடுகளிலும் குழப்பங்களும், அதிர்ச்சிகளும் அந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாக இருந்ததென்றும், தம் நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிய அக்கறையற்ற சமூகங்களில் ஆர்வத்தை உண்டு பண்ணுவதற்கு இத்தகைய அதிர்ச்சிகள் கிளம்புவதற்கான காரணங்களை உண்டுபண்ணி, அவற்றின் பலாபலன்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்திவாரமாக அமைய வேண்டுமென்று பேராசிரியர் கிரிச்மென் என்பவர் கூறியுள்ளார்.

### இரு காரணங்கள்

சமூகங்களின் பொருளாதார அபிவிருத்தியில் அதிதீவிர கொள்கைகள் உடையோர் விரும்பும் அதிர்ச்சிகள் நம் பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பிக்கும் தருணத்தில் ஏற்பட்டபோதிலும் அவற்றினுல் ஒரு கணிசமான அளவு தானும் பலன் கிடையாமற் போனதற்கு இரு முக்கிய காரணங்கள் உள. 1- நவீன முறைகளில் தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய பொறுப்புணர்ச்சியும், துணிச்சலும் உடையவர்கள், தொழில்களை நவீன முறையில் நடாத்தக்கூடிய நிர்வாகத்திறன் உடையோர், தொழில்நுட்பத் தேர்ச்சியுடையோர் போதிய அளவு இல்லாததுமே முதலாவது காரணமாகும். 2- கண்டும் கேட்டும் உணரக்கூடிய செல்வங்களான மக்கள், மூலதனம், செய்கை நிலங்கள், மூலப் பொருள்கள் முதலியவற்றையும் மக்களின் அறிவு, குணதிசயங்களாகிய தொழில் நுட்பம், தேர்ச்சி, ஆர்வம், கெட்டித்தனம், பிரயாசம் ஆகியவற்றையும் ஒருங்குசேர்த்து அவற்றின் தற்காலிக பற்ருக்குறையை மற்றும் நாடுகளிலிருந்து வருவித்தும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைச் செவ்வனே நடாத்தக்கூடிய அரசியல் அதிகாரம் தமிழ்ச் சமூகத்தினிடம் இல்லாததுமாகும். தமிழர் வசிக்கும் பிரதேசம் பொருளாதாரத்துறையில் முன்னேறுவதற்குக் கையாளப்படவேண்டியவை தமிழ்மக்கள் சிந்தனையில் தோன்றி அவர்கள் உழைப்பில் வளர்ந்து, அவர்கள் நிர்வாகத்தில் வெற்றிபெறவேண்டும். எல்லைப்புறத்திலிருந்து 150மைல் தூரத்துக்கப்பால் தயாரிக்கப்படும் திட்டங்களினுல் அதிக பலன் கிடைக்க மாட்டாதென்பதை உணரும் தன்மை சமூகத்திற்கு ஏற்பட வேண்டும். காலத்துக்குக் காலம் மாற்றமடையும் தம் பொருளாதார அமைப்பைத் திறமையுடன் நிர்வகிக்கக் கூடிய தன்மையும் ஏற்பட வேண்டும்.

### வர்த்தக தாபனங்கள்

மேற்கு ஐரோப்பிய, ஐக்கிய அமெரிக்க மக்களின் வாழ்க்கைத்தரத்திற்கு ஒத்ததாக நம் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரமும் உயர்வடைய வேண்டுமாயின் அந் நாடுகளில் நிலவுவதுபோல நம் பிரதேசத்திலும் தொழில் வர்த்தக தாபனங்கள் அமைத்தல் மூலமே அதை அடைய முடியும். அவ்வித தாபனங்களைப் பொறுப்புணர்ச்சி, நிர்வாகத் திறன் தொழில் தேர்ச்சி அற்ற சமுதாயங்களினுல் அமைக்க முடியாது. உலக மொழியான ஆங்கிலத்தின் மூலம் பொதுக் கல்வியறிவும், ஆங்கிலேயரின் தொழில் வர்த்தக தாபனங்களில் நிர்வாகத் தேர்ச்சியும் கணிசமான அளவுக்குச் சிலருக்கு இருந்தபோதிலும், 200 ஆண்டுகளாக அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரம் காரணமாக மேல்நாட்டுமக்களுக்கு ஏற்பட்ட முற்போக்கு நோக்கங்கள் நம்மிடையே இல்லாததும் ஒரு குறையேயாகும்.

நம்நாட்டுப் பொருளாதார விருத்தியைப்பற்றி பேசப்படும் போதெல்லாம், நம் நாட்டின் மூலப் பொருள்கள் என்ன? அவற்றினைப் பதனிட எத்தனை தொழிற்சாலைகள் அமைத்தல் வேண்டும்? இவற்றை அமைக்க தேவையான மூலதனம் எங்கே கிடைக்கும்? என்ற கேள்விகளே கிளம்புகின்றன. இவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவைகளே! ஆயின், அவைகள் எவ்வளவு தான் இருந்த பொழுதிலும் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய வன்மை மிக்கோர் இல்லையேல் அவற்றின் பயன் தான் என்ன? உலகில் எந்த நாட்டிலும் தொழில் நுட்பக் கல்வியும், தேர்ச்சியுமுடையோர் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். இவர்கள் நாட்டின் பொது மூலதனத்தின் முக்கிய பங்காகவே மதிக்கப்படுகின்றனர்.

### வழி செய்தல் வேண்டும்

இவ்வித குறைபாட்டை தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கு தகுதியானவர்களெனக் காணப்படுபவர்களைத் தேர்ந்து தொழில் வர்த்தக, தாபனங்களும் அரசாங்கமும் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு வேண்டிய தொழிற் கல்வியும் தேர்ச்சியும் கிடைக்க வழி செய்தல் வேண்டும். இவ்வித தற்காலிக கல்வி வசதிகள் சில குறிப்பிட்ட நன்மைகளைக் கொடுக்கக் கூடியதாகவிருந்த போதிலும் ஒரு தேசிய அடிப்படையில் அளிக்கப்படும் கல்வித் திட்டத்துக்கு ஈடாகமாட்டாது. நமது பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றுக்கு முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனுல் கிடைக்கப்பெற்ற தொழில் நுட்பக் கல்வியறிவை யூட்ட வேண்டியிருக்கிறது. தொழில் முன்னேற்றமும் சமுதாயத்தின் சிந்தனை, கிரிகை, கல்வி, வளர்ப்பு முதலியவற்றுக்கு ஒத்ததாகவே அமையும். இதில் முரண்பாடு தோன்றினுல் முன்னேற்றம் தடைபடும். திருவிழா, கலியாண வைபவம் போன்றவற்றில் ஊதாரித்தனமாகச் செலவிடும் பணத்தை நவீன தொழில் துறைகளில் மூலதனமிடுவதால் வருவாய் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை கல்வியறிவினுல் ஏற்படல் வேண்டும். நவீன முறைகளில் தொழில்களை ஆரம்பித்து நடாத்துவதால் வருவாய் அதிகரிப்பதுடன், சமுதாயத்தினிடையே மதிப்பும் செல்வாக்கும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்படல் வேண்டும். பூர்வீக முறைகளில் நடாத்தப்படும் தொழில்களில் கிடைக்காத உயர்ந்த பதவிகளும் உயர்தர வாழ்வும் நவீன தொழில் முறைகளில் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டாக வேண்டும். ஒரு குடும்பத்துடன் அல்லது இனத்துடன் தொடர்புடையவன் என்ற காரணத்தினுலன்றி, மனிதன் விசேட சாதுரியங்களைக் கொண்டவன் என்பதினுல் சமுதாயத்தின் கண் உயர்தர அந்தஸ்துக்கு உரியவன் என்ற நம்பிக்கை உண்டாக வேண்டும். பல்லி சொல்லலோ அல்லது வினைப்பயனே மனிதன் வாழ்வைக் கட்டுப்படுத்த முடியாதன என்பதிலும், தன் சாதுரியங்களினுல் அரிய சாதனைகளையும் செய்யலாம் என்பதிலும் நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

### கல்வியும் தேர்ச்சியும்

எதிர்காலத்தில் நமது பொருளாதாரம் நவீன முறையில் அமைந்து முன்னேறிச் செல்ல வேண்டுமாயின், நுட்பத் தொழிற் கல்வியும், தேர்ச்சியும் தேசிய அடிப்படையில் அமைதல் அவசியமாகும். நமது பிரதேசத்தில் 1000 பள்ளிக் கூடங்கள் வரை உள. இங்கு கல்வி பயிலும் 100,000 மாணவர்களுக்கும் எத்தகைய தொழிற் கல்வியும் கிடைப்பதாகவில்லை. பிரதி வருடமும் இலங்கை முழுவதும் 30,000 தமிழ் மாணவர்கள் வரை பாடசாலைகளிலிருந்து வெளிவருகின்றனர். நமது பொருளாதாரம், நவீன முறையிலமைந்து முன்னேறும்பொழுது, இவர்களை எவ்வித தொழில் வர்த்தக கல்வியுமின்றி தம் பணியை நாட்டிற்கு செய்ய முடியாத நிலையில் விடுவது இவர்கள் பால் விளைவிக்கப்படும் ஒரு பெரிய அநீதியாகும். அகில உலக புகழ் பெற்ற அணுசக்தி விஞ்ஞானி சேர் ஜோன்

(13ஆம் பக்கம் பார்க்க)

# துறைக்காரன்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

துரத்திக்கொண்டு ஓடுகையில், முட்பற்றைகளையும், ஊடுருவிச் செல்ல முடியாத காடுகளையும் கடந்து சென்றிருப்பார்கள். வழியில் எதிர்ப்படும் காட்டாறுகளை நீந்திக் கடந்திருப்பார்கள். அவர்கள் காலெல்லாம் முள் தைத்திருக்கும். மேலெல்லாம் கீறலாக இருக்கும். இத்தனைக்கும் மேலாக அவர்களுக்குச் சரியான சாப்பாடே இராது. ஓரோர் வேளை விளாம்பழத்தையும், களாப்பழத்தையும் தின்று கொண்டே நாட்களைக் கடத்தவேண்டியிருக்கும். சில இரவு வேளைகளில் காட்டுமரங்களின் மேலேயே நித்திரை கொள்ள வேண்டியிருக்கும். இத்தனை கஷ்டங்களை அனுபவித்து மாடுகளைப் பிணைத்து இதே தம்பலகாமத்திற்கு நடத்திக் கொண்டு போகிருர்கள். இன்னமும் சில நாட்களில் தம்பலகாமத்தில் கோடைப்போக விதைப்பு ஆரம்பமாகிவிடும். வயல் உழக்குவதற்கு மாட்டைக் கொடுத்து விட்டால் அதன் பிறகு அவர்களைப் போலச் சுகவாசிகளை இந்தப் பிராந்தியத்திற் காணவே முடியாது. மாதா மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் தர்மலிங்கம் வாத்தியார் ஒரு பொருட்டா? இந்தப் பததுப் பிணையல் மாடுகளைக் கொண்டு ஐம்பது ஏக்கர் வயலாவது உழக்குவார்கள். விளைந்தபின்னர் மாட்டுக்காரனுக்கு எப்படியும் பன்னிரண்டரை அவணம் நெல் கிடைக்கும். இப்போதைய நெல்விலைக்குத் தடியால் அடித்த காசு ஆயிரத்தைந்நூறு ரூபாய்!

வேலாயுதத்தின் சிந்தனை இந்த அளவில் தரிக்கையில் வள்ளம் அரைஆற்றைக் கடந்து விட்டது. ஓஹோஹோ என்று அதட்டியபடி அருணுசலம் முன்னுல் கடாக்களை வழிநடத்திக் கொண்டிருந்தான். நீரைத் துழாவிவலித்துமறுபடியும் வள்ளத்தை நேராக்கிக் கொண்டு, வேலாயுதம் தன் சிந்தனையைத் தொடர்ந்தான்.

ஆனுலும் 'வயலடிப்பது'என்றுல் இலகுவான வேலையா? ஐம்பது ஏக்கரையும் உழக்க எப்படியும் முப்பது நாட்கள் செல்லும். சாயந்திரம் வயலடித்ததும் மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டால், மேய்ந்தபடியேஅவைகள் வெகுதூரம் போய்விடும். அடுத்தநாள் காலையில் அவைகளை வயலுக்குக் கொண்டுவருவதற்காக மூன்ருஞ் சாமத்திலேயே எழுந்து காட்டில் அலைய வேண்டும். அப்போதுதான் காலையில் அவைகளைக் கொண்டு வரலாம்.

இந்த ஒருமாத காலத்துக்கும் அருணுசலத்திற்கு வீடுவாசல் கிடையாது. ஊண் உறக்கம் கிடையாது. மிகவும்கஷ்டமான வேலைதான். இந்த வேலையை அருணுசலத்தைப் போன்றவர்கள் மட்டுந்தான் செய்யமுடியும்! அவன் உழைப்பைக் கண்டு மற்றவர்கள் பொருமைப்பட்டு என்ன ஆவது?

இதற்குள் தோணி அக்கரையை அடைந்துவிட்டது. கடாக்கள் அக்கரையில் ஏறிவிட்டன. நீந்திக் கரைசேர்ந்த அருணுசலமும் நிற்கத் தரிக்க நேரமின்றி மாடுகளின் பின்னுலேயே நடந்தான். தாமோதரம் தன் முடிச்சிலிருந்து ஐந்து ரூபாவை அவிழ்த்துக் கொடுத்துவிட்டு நடந்தான்.

வேலாயுதம் அப்துல்லாக் கிழவரின் கைமுகூர்த்தத்தை நினைந்து கொண்டான். என்றைக்குமா அவனுக்கு முழுதாக ஐந்து ரூபா கிடைக்கப் போகிறது.?

(தொடரும்)


## தொழில் நுட்பக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

என்ஜினியரிங் அன்ட்

இன்டஸ்ரியல் கொம்பனியால் தயாரிக்கப்பட்டது.

52 வாரங்களைக்கொண்ட 4 தவணைக்குரிய பயிற்சிப் பாடங்கள் ஜனவரி 18, 1960இல் ஆரம்பமாகும்.

**(i) மின்சார என்ஜினியரிங்:**
(சிற்றி, கில்ட்ஸ் பரீட்சைகளுக்கு)

இங்கிலாந்திலுள்ள எலெக்ட்ரிக் என்ஜினியர்ஸ் நிறுவனத்துக்கான பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயாரிப்பதற்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(ii) வானெலித் தொழிற் சேவை:**
(சிற்றி, கில்ட்ஸ் பரீட்சைகளுக்கு)

**(iii) நில அளவையும், மட்டம் பார்த்தலும்:**
(நில அளவையாளர் - ஜெனரல் லைசென்சுக்கானது)

**(iv) வரைவாளர் படிப்பு:**

ஸ்கூல் சேர்டிப்பிக்கெட்டுகளுக்கான பரீட்சைக்குப் பயிற்சி அளிக்கப்படும். அதிகார பூர்வமான நில அளவையாளருக்கு, நில அளவையாளர் - ஜெனரலுக்கான பரீட்சையில் தோன்றுவதற்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**(v) பி. எஸ். ஸி.**
(பொருளாதாரம்)

முதல் வருடம்-ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான பொருளாதாரம் - மூன்று தவணைகள் (லண்டன் பல்கலைக் கழகப் பரீட்சை)

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்புவதற்கான முடிவு திகதி:
1960ஆம் ஆண்டு ஜனவரி 12.
**விடுதி வசதிகளுமுண்டு.**

விண்ணப்பப் பத்திரங்களுக்கும் மற்றும் விபரங்களுக்கும் பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்:

விக்றர் ஜே. இராசையா,
தலைமை ஆசிரியர்,
"தி சிற்றெடல்", சுண்டிக்குழி.

# நமது நூல் நிலையம்

**பாரத நவமணிகள்:** ஆசிரியர்: பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை; **வெளியீடு:** செந்தமிழ் மன்றம், சாவகச்சேரி; விலை ரூ. 1-75.

தமிழ் என்பது இனிமை எனப் பொருள்படும். அவ்வினிமை தமிழ்ச் செய்யுள்களில் மட்டுமன்றித் தமிழ் உரைநடையிலும் மிக மிக உண்டு என்பதைப் "பாரத நவமணிகள்" என்னும் நூலைப் படிப்போர் நன்கு அறிவர். மோனை எதுகை முதலிய அலங்காரங்களின்றி பண்டிதமணியவர்கள் எழுதும் தமிழ்நடை காலத்தை வென்ற—காலத்தை மறக்கச் செய்யவல்ல தனிநடை.

பாரதம் தமிழ் நாட்டவர் அனைவரும் அறிந்த ஒரு பழங்கதை. அதனை ஐந்தாம் வேதம் என்பர் கற்றறிந்தோர். படித்தறிந்த கதைதானே என்று பாரதக் கதையைப் பொருட்படுத்தாதவரும் இந்நூலைப் படிக்கத் தொடங்குவராயின், மற்ற எல்லாக் கருமங்களையும் மறந்து, இறுதிக் கட்டுரைவரை படித்து முடித்த பின்னரே ஆர்வம் தீர்வர். அதுமட்டுமன்றி, மீட்டும் மீட்டும் படிக்கவும் ஆசை கொள்வர். உரை நடையின் வசீகர சக்தியும் கதையின் மூலம் கொண்டு செல்லப்படும் உயர்ந்த கருத்தும் இந்நூலை எந்நூற்கும் மேலாம் நன்னூலாக்கி விட்டன. மகா பாரதம் என்னும் முதற் கட்டுரையிலிருந்து கீதாபோதம் என்னும் முடிவுக் கட்டுரை வரை அமைந்த பொருளின் அமைதியை நோக்குவோர் வரலாற்றில் தொடங்கி படிமுறையாய்ச் சென்று மனிதன் அறிய வேண்டியதும், அடைய வேண்டியதுமாய உயர் ஞானப்பொருளில் இந்நூல் நிறைவுறும் அழகைக் கண்டு இன்புறுவர்.

* * *

**கார்க்கியைக் கண்டேன்:** ஆசிரியர்: எச். எம். பி. முஹிதீன்; **வெளியீடு:** சரஸ்வதி, 19, லேங்க்ஸ் கார்டன் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை 2; **விலை:** 30 காசு.

புது யுகத்தின் சின்னமாக இன்று விளங்கும் ருஷிய நாட்டின் தலைசிறந்த எழுத்தாளன்தான் மக்ஸிம் கார்க்கி. அவன் மறைந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், 1958இல் மொஸ்கோவில் நடைபெற்ற ஆருவது உலக வாலிபர் விழாவுக்குச் சென்றிருந்த ஆசிரியர் திரு. முஹிதீன், கார்க்கியை எம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

கார்க்கியின் வீட்டுக்குச் செல்லும்பொழுது தமக்கு ஏற்பட்ட பல்வேறு உணர்ச்சிகளையும், அதன் பின்னர் கார்க்கியின் மனைவியான, 83 வயது நிரம்பிய பெஸ்கோவாவுடன் கார்க்கியைப்பற்றிப் பல மணி நேரம் பேசியதையும், கார்க்கியின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில சம்பவங்களையும் ஆசிரியர் சுவைபடக் கூறியுள்ளார்.

இப்புத்தகத்திலிருந்து கார்க்கியின் இலட்சியங்கள், அவரது விருப்பு, வெறுப்புக்கள், பழக்கங்கள், வேறும் அவரது வாழ்க்கையின் பல அம்சங்களையும் நாம் அறிய முடிகின்றது.

* * *

**KOKUVIL—The Magazine of Kokuvil Hindu College· August 1959.**

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆண்டு வெளியீடு என்றுமே தனிச் சிறப்பு மிக்கது. கல்லூரி அதிபரின் கருத்துக்களும் பத்திரிகை ஆசிரியர்களின் குறிப்புக்களும் நாட்டின் கல்வி நிலையை நன்கு படம் பிடித்துள்ளன. பல்கலைக் கழகப் படிப்புக்கான வசதிகள் நாட்டில் மிகக்குறைவெனவும் அவற்றைச் சீராக்குவதுடன் தொழில் துறைக் கல்வி விருத்தியிலும் அரசினர் நாட்டங் காட்டவேண்டுமெனவும் அதிபர் ச. பேரின்பநாயகன் அரிய யோசனை கூறியுள்ளார்.

தாய்மொழி மூலம் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றப்பட வேண்டிய அவசியத்தை இதழாசிரியர்கள் வற்புறுத்தியுள்ளனர். கல்லூரி மாணவர்களின் கட்டுரைகள் யாவும் தரத்தில் உயர்ந்தனவாக அமைந்துள்ளன. கல்லூரி வைபவங்களின் குறிப்புக்களுடனும் புகைப் படங்களுடனும் இதுபொலிந்து விளங்குகின்றது.

* * *

**THE YOUNG HINDU—The Jaffna Hindu College Students' Annual.**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் ஆண்டு வெளியீடாகிய "இந்து இளைஞ"னின் பத்தொன்பதாவது மலர் அழகாக அச்சிடப்பட்டு பல புகைப் படங்களுடன் வெளி வந்துள்ளது. மாணவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள கட்டுரைகளும் சிறு கதைத் துணுக்குகளும் மிகவும்உயர்ந்த இலக்கியதரத்தைப் பிரதிபலிக்கின்றன. எதிர்கால நாவலாசிரியர்களும் கட்டுரையாளர்களும் அவற்றுள் ஒளிந்திருப்பதைக் காணமுடிகிறது. பரீட்சைகள், விளையாட்டுகள், விழாக்கள் முதலிய கல்லூரி சம்பந்தமான நிகழ்ச்சிகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. "எமது கல்லூரி மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளல்லர் என்பது அவர்கள் விளையாட்டுப் போட்டிகளிற் காட்டும் வெற்றிகளிலிருந்து அறியலாம்" எனப் பத்திராதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# குறவரின் பூர்வீகத் தாயகம்

## இந்தியா என்பதே ஆராய்ச்சியாளர் முடிவு

குறவர்கள் எனப்படும் நாடோடி மக்கள் தமது பூர்வீகத் தாயகமான இந்தியாவை விட்டு எப்பொழுது வெளியேறினர்கள் என்பது இன்னும் திட்ட வட்டமாக நிலைநாட்டப் படவில்லை. சில ஆராய்ச்சியாளர்கள் இது 7-வது, 12-வது நூற்றுண்டுகளுக்கிடையே நடைபெற்றிருக்க வேண்டுமெனக் கூறுகிறுர்கள். வேறு சிலர் 5-வது, 10-வது நூற்றுண்டுகளுக்கிடையிலேயே குறவர்கள் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டுமெனக் கருதுகிறுர்கள். பாரசீகம், ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளைக் கடந்து துருக்கி, பைசாந்தியம் இவற்றின் மூலமாக 13-வது நூற்றுண்டில் பால்கன் தீபகர்ப்பத்திற்கு வந்து சேர்ந்தனர். பிறகு 15-வது நூற்றுண்டில் மத்திய ஐரோப்பாவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் சென்றனர். 16-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே ருஷியாவின் தெற்குப் பகுதிகளுக்கு வந்துவிட்டனர். அதன் பின் 100 ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான் வட ருஷியாவுக்குப் பரவலாயினர்.

குறவர்களிடையே நிலவும் கதைகளிலும் கற்பனைகளிலும் அவர்களுடைய பூர்வீகத் தாயகமான இந்தியாவைப்பற்றியோ, அவர்கள் அதைவிட்டு வெளியேறியதன் காரணங்கள் பற்றியோ தெரிவிக்கும் தகவல்களைக் காண முடியவில்லை.

### குறவரின் மொழி

குறவரின் மொழி பிராகிருதத்திலிருந்து தோன்றியதாகும். வடக்கு, மேற்கு இந்தியாவில் வழக்கிலுள்ள நவீனகால இந்திய மொழிகளும் பிராகிருதத்திலிருந்து தோன்றியவையே. குறவர் நெடுங்காலம் பல நாடுகளிலும் சுற்றித் திரிந்ததின் விளைவாகப் பல்வேறு மொழிகள் பேசும் பல்வேறு தேசத்தவர்களுடனும் தொடர்பு பெறலாயினர். இதனுல் அவர்களின் மொழி அதற்குரிய பூர்வீக சொற்கள் சிலவற்றை இழந்து இதர மொழிகளிலிருந்து புதிய சொற்களை கிரகித்துக் கொண்டது. குறவர்கள் குடியேறிய இடங்களுக்கும், அவர்களுடைய நாடோடி முகாம்கள் அமைக்கப்பெற்ற இடங்களுக்கும் ஏற்ப இயல்பாகவே அவர்களுடைய மொழி பல்வேறு வகை மொழிகளின் தொடர்புகளால் மாற்றமடையத் தொடங்கியது. குறவரின் மொழியில் இன்று வெவ்வேறு பேச்சு வழக்குகளாக அமைந்துள்ள உட்பிரிவுகள் காணப்படுவதற்கு இதுதான் காரணம்.

குறவரின் நாடோடி வாழ்க்கை முறையும், அவர்களுடைய பிரத்தியேக பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும், மொழியும் 1936-ம் நூற்றுண்டின் மத்தியிலிருந்தே ருஷியாவிலும் பிற நாடுகளிலும் ஆராய்ச்சி அறிஞர்கள் பலரின் கவனத்தையும் கவரலாயின.

அலெக்சி பரான்னிகோவ் இந்தியா பற்றிய ஆராய்ச்சிகளில் புகழ் வாய்ந்தவர். இந்திய மொழிகளைப்பற்றி அவர் அடிப்படையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். குறவரின் (ஜிப்சி) மொழி சம்பந்தமாக, குறிப்பாக அதன் உக்ரேனிய, தென் ருஷிய பேச்சு வழக்குகள் சம்பந்தமாக, அவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

### சமூகம், மொழி, கலாச்சாரம்

இந்த ஆராய்ச்சி உரை குறவர்களையும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள், தார்மீகக் கோட்பாடுகள், மொழி இவைகளைப்பற்றிய முக்கிய மொழியியல், மனித இனவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்துத் தந்துள்ளது. "சோவியத் நாட்டிலுள்ள ஜிப்சி மக்கள்: வரலாற்று—இனவியல் கட்டுரை" என்றொரு விரிவான ஆராய்ச்சி நூலை எ. பி. பரான்னிக்கோவ் எழுதினர். இந்தியாவிலிருந்து குறவர் ஐரோப்பாவுக்கு வந்த மார்க்கம், ருஷியாவுக்கு அவர்கள் வந்து சேர்ந்தது, அவர்களுடைய எண்ணிக்கை, வாழ்க்கை முறை, குடும்ப உறவுகள், மத நம்பிக்கை, கலைகள், மற்றும் அவர்களுடைய கலாச்சார, பொருளாதார நிலை ஆகிய பல விவரங்களை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

### இக்காலப் பிரச்சினை

"நெவோ திரோமி" எனும் குறவர்கள் வெளியீட்டில் (புதிய பாதை) 1951 இல் எ. பி. பரான்னிக்கோவ் பல கட்டுரைகள் எழுதினர். இவற்றில் அவர் ஜிப்சி மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட கலாச்சார, கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்ந்தார். "பிற்பட்ட பிரிவு", "பெண்ணின் நிலைபற்றிய பாட்டுக்கள்" போன்ற பல கட்டுரைகளை குறவர் மொழியில் எழுதினர்.

இந்தி, மராத்தி, வங்காளி போன்ற இந்திய மொழிகளைப் பற்றிய பல கட்டுரைகளில் எ. பி. பரான்னிக்கோவ் 'ஜிப்சி' மொழிக்கும் இம்மொழிகளுக்குமுள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டுகிறுர். இவர் எழுதியுள்ள பல கட்டுரைகளும் ஆராய்ச்சி உரைகளும் ஜிப்சி மக்களையும் அவர்களுடைய மொழியையும் பற்றி ஆராயும் எல்லா ஆராய்ச்சியாளர்களுக்கும் இன்றியமையாதவையாகும்.

## இப்படியும் சொன்னுர்கள்

மிகவும் நிரந்தரமற்ற எதிர் காலத்தையுடைய பிரதமமந்திரி நான் —**பிரதமர் தகநாயக்கா.**

இன்றையஅரசாங்கம் நடாத்தப்படுவது பார்லிமெண்டினுலல்ல; மந்திரி சபையினுலும் அல்ல. அது ஒரே ஒரு ஆளினுல்தான் நடாத்தப்படுகிறது—அவர் தான் சேர் ஒலிவர் குணத்திலக்கா.

—**டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா.**

எனது தேசாபிமானத்துக்காக நான் எவரிடமிருந்தும் 'சேர்டிபிகெட்'டை எதிர் பார்க்கவில்லை

—**இந்திய பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன்.**

சுதந்திரக் கட்சி என்னும் தீக்குச்சியினுல், உளுத்துப் போன காங்கிரஸ் கட்டடத்துக்குத் தீ வைத்து விட்டேன்

—**இராஜாஜி.**

நாம் இப்பொழுது பார்லிமெண்டைக் கலைத்தால், அதன் மூலம் நாம், நாட்டுக்கும் மறைந்த பிரதமருக்கும் அநீதி இழைத்தவர்களாவோம்

—**தபால் மந்திரி மரிக்கார்.**

சுதந்திரக் கட்சி எவ்வித பிரயோசனமுமற்றவொரு கட்சியாகும். அக் கட்சியில் ஆக்க பூர்வமான எண்ணம் சூன்யமாகவேயிருக்கிறது

—**பிரதமர் நேரு.**

முன்னேற்றச் சக்திகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நான் எவ்வளவோ முயற்சித்தேன். ஆனுல் லங்கா சமசமாஜக்கட்சியின் கர்வம்பிடித்த மடைத்தனமான கொள்கையின் விளைவாக எதுவித முடிவும் செய்யப்படவில்லை —**பிலிப் குணவர்த்தன**

இராணி மாளிகை ஒரு சதிக்களமாக மாறிவிட்டது

**டக்டர் என். எம். பெரேரா**

பொதுத் தேர்தலுக்கு நாங்கள் தயார். ஆனுல், இது அதற்குத் தகுந்த தருணமல்ல. —**கலாச்சார மந்திரி கலுகொல்லை**

## திமிலைத்துமிலனுக்கு தங்கப் பதக்கம்

சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் சென்ற மாதம் நடாத்திய குழந்தைக் கவிதைப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. கி. கிருஷ்ண பிள்ளைக்கு (திமிலைத்துமிலன்) தங்கப் பதக்கம் பரிசாகக் கிடைத்துள்ளது. இவர் திமிலைத்தீவிலுள்ள புதூர் அரசினர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றுர். 'வழி தவறியவன்' என்பதே பரிசுபெற்ற இவருடைய கவிதையின் பெயராகும்.

## இருட்டில் பார்க்கக்கூடிய எலெக்ட்ரிக் கருவி

இருட்டில் பார்க்கக்கூடிய ஒரு கருவியைத் தாம்வெற்றிகரமாகப்பரீட்சித்துள்ளதாகஅமெரிக்க இராணுவம் அறிவித்தது. இப்பரீட்சிப்பின் போது இந்த எலெக்ட்ரிக் கருவி இருட்டில் 600 யார் தூரத்திற்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்த 15 அந்தர் "டிரக்" லொறியொன்றை அடையாளம் கண்டது.

பயிர், செடிகளுக்குண்டாகும்
சகல வியாதிகளையும் நிச்சயமாகத் தடுப்பது

பொலிடோல்

யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள்:
கே. எஸ். செல்லையா
ரேயல் டிஸ்பென்சரி

ஏகவிநியோகஸ்தர்கள்:
சதாம் ஹவுஸ் லிமிடெட்
தபாற் பெட்டி இல. 743. கொழும்பு.
சகல தகவல்களும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## பூஜ்யம் தபால்

கர்னல் போர்ப்ஸ்,
நியமன எம். பி.
கொழும்பு.

தேசபக்தரே!

உங்கள் தயவிலே இலங்கையிலுள்ள தகநாயக்கா ஆட்சி நடக்கிறது. நாங்களெல்லாம் இப்போது அமைதியாக வாழ முடிகிறது. மிகவும் நன்றி.

நீங்கள் மட்டும், சென்ற வெள்ளிக்கிழமையன்று, நீதி மந்திரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குச் சாதகமாக உங்கள் மனச்சாட்சி சொன்னபடி வாக்களித்திருந்தால், எங்கள் பாடு என்ன ஆயிருக்கும்?

இன்று இலங்கையில் பொதுத் தேர்தல் வந்து பெருங் குழப்பங்களெல்லாம் ஏற்பட்டிருக்கும். நாங்கள் அமைதியாக வாழ, நீங்கள் உங்கள் மனச் சாட்சியையும் மீறினீர்கள்.

அது மட்டுமல்ல. வெள்ளவத்தை மெம்பர் டக்டர் கொல்வின் ஆர். டி' ஸில்வா கொடுத்த சாட்டை அடிகளை எல்லாம் மிகப் பொறுமையாக வாங்கிக் கட்டிக் கொண்டீர்கள்.

அடாடா! தங்கள் தேச பக்தியும், தியாக சக்தியும்தான் என்னே!

பாருங்கள். எம். ஈ. பி. கட்சியினர் தேர்தல் காலத்திலே நியமன மெம்பர்களை எல்லாம் ஒழித்துக் கட்டிவிடுவதாக, எங்களுக்கு வாக்களித்தார்கள். நல்ல வேளை அந்த வாக்குப்படி காரியம் செய்திருந்தால், இந்த அரசாங்கம் இன்று உயிருடன் இருக்க முடியுமா?

ஆபத்தில் உதவுபவர்தான். உண்மை நண்பர் என்று கூறுவர். இந்தப் பெரும் ஆபத்தில் நியமன மெம்பர்களாகிய நீங்கள்தான் அரசாங்கத்துக்கு உதவுகிறீர்கள். நீங்கள் செய்த உதவி நிச்சயம் வீண்போக முடியாது.

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில், பார்லிமெண்டிலே நியமன மெம்பர்களின் ஸ்தானங்களை ஐம்பதுக்காவது உயர்த்த வேண்டுமென்று நான் பலமாக சிபார்சு செய்கிறேன். சரிதானே.

இப்படிக்கு
**பூஜ்யம்**

குறிப்பு:—

என் நண்பரொருவர் இவ் விஷயமாக இரு சந்தேகங்களைக் கேட்கின்றார். (1) நீங்கள் அத்தீர்மானத்தை, மனச்சாட்சிப்படி ஆதரித்திருந்தால், சபை கலைக்கப்பட்டு உங்கள் பதவிகளும் 'கோவிந்தா' ஆகியிருக்கும். ஆகவே அரசியல் தற்கொலை செய்து கொள்ள விரும்பாமலே தங்கள் சுயநலத்துடன் தான் இத்தீர்மானத்தை ஆதரித்தீர்களா?

(2) சென்ற ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம், பீரங்கிக் காவலுடன் நிறைவேற்றப்பட்டதல்லவா? அச்சமயத்திலும் அதன் பிறகும் நாட்டில் வகுப்புக் கலகங்களெல்லாம் மூண்டன. அமைதியாக இருந்த நாட்டில், கலகக் குழப்பங்கள் ஏற்படுத்திய, அந்தத் தனிச் சிங்கள மசோதாவை நீங்கள் ஏன் ஆதரித்தீர்கள்? நாட்டில் குழப்படி ஏற்படக் கூடாதென்ற உண்மை நோக்கம் இருந்திருப்பின் ஏன் அந்த தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து ஒரு வார்த்தையும் கூருமல் மௌனம் சாதித்தீர்கள்? இப்போதும் உங்கள் சமூகம் உள்ளிட்டு எல்லாச் சிறுபான்மை சமூகங்களின் நலன்களையும் கருதாமல், அந்தச் சட்டத்தை நீதிமன்றங்கள், கச்சேரிகள் இவற்றில் அவசரமாக அமுல் செய்ய எடுக்கும் நடவடிக்கை பற்றியும், ஆட்சேபித்து ஏன் ஒரு வார்த்தையும் கூறவில்லை? வகுப்புப் பூசல்களும் கலவரங்களும் நீடித்து இங்கு இருக்க வேண்டுமென்பது உங்கள் கருத்தா? அல்லது எப்படியாவது உங்கள் "அழுகல் உரித்துக்களுக்கு" ஆபத்தில்லாமல் செய்து கொள்ள அரசாங்கத்தைக் "காக்காய்" பிடிக்கும் நோக்கமா? என்று கேட்கின்றார்.

இச் சந்தேகங்களுக்குஉடன் பதிலளித்து, இவற்றைத் தீர்க்க வேண்டுகிறேன்.

'ஆயுபொவங்'

பூஜ்யம்.

# மலைநாட்டுத் தமிழருக்கு தாய்நாடு செல்லத் தடை

— நமது நிருபர் —

இவ்வார இறுதியில் மலைநாடு சென்றிருந்தபொழுது நாற்பத்து ஐந்து வயதுடைய ஒரு தமிழ் தோட்டத் தொழிலாளியைச் சந்தித்தேன். இந்தியாவுக்குச் செல்லுவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்துவிட்டார். பற்றுச் சீட்டையெல்லாம் பெற்றுக் கொண்ட பிறகு, கண்டியில் உள்ள இந்தியத் தூதுவரின் பிரதிநிதியின் அலுவலகத்துக்குச் சென்றிருக்கின்றார்.

### ஏமாற்றம்

இந்தியாவிலிருந்து மிக்க சிரமப்பட்டுத் தருவித்திருந்த தஸ்தாவேஜுகளை யெல்லாம், மிக்க கவனத்துடன் ஒரு அதிகாரி வாங்கிப் பார்த்தாராம். இறுதியில் தொழிலாளியிடம் "நீர் இந்தியாவுக்குச் செல்ல முடியாது," எனக் கூறிவிட்டாராம்.

அவருடன் சென்றிருந்த அவரது தொழிற்சங்கப் பிரதிநிதி, "ஏன் இந்த தொழிலாளி, இந்தியாவுக்குச்செல்ல முடியாது?" என்று வினவியதற்கு, "நாங்கள் எங்கள் விருப்பப்படியே யார் இந்தியா செல்லத் தகுதியானவர்கள், யார் செல்லத் தகுதியற்றவர் என்பதை நிச்சயிப்போம். இந்த நபரின் விஷயத்தில் அவர் இந்தியா செல்ல முடியாது," எனத் திட்டவட்டமாகக் கூறி, கை கூப்பி விட்டாராம்.

தொழிலாளியும் பிரதிநிதியும், வந்த செலவுதான் மிச்சம் என வருந்தி திரும்ப வந்துவிட்டார்கள். நான் அத்தொழிலாளியைச் சந்தித்த பொழுது, அவர் எங்காவது வேலை கிடைக்குமா எனப் பற்றுச் சீட்டுடன் அலைந்து கொண்டிருந்தார்.

### தாய் எங்களை ஏற்க மாட்டாள்

"உழைத்த நாட்டிலே எங்கள் உரிமைகளைப் பறித்துக் கொண்டார்கள் என்றால் பிறந்த நாட்டில் அடி எடுத்தும் வைக்க விடமாட்டார்கள் போலிருக்கின்றதே இந்திய அரசாங்கத்தார்,'' என நாத் தழு தழுக்கக் கூறினர்.

''இந்தியாவுக்குச் செல்லுவதற்கான எல்லா ஆயத்தங்களும் செய்துவிட்டேன். தோட்டத்திலிருந்த எனது பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொண்டேன். பல ஆண்டுக்கு முன்னே சென்ற எனது பெற்ருேர் என் வரவு நோக்கியிருக்கின்றனர். ஆனல் என் தாய் நாட்டுக்குச் செல்ல எனக்கு உரிமையில்லையே" என அழுதார்.

### நன்மையே செய்கின்ருேம்

கொழும்பு இந்தியத் தூதுவர் காரியாலயத்தில் இது பற்றி விசாரித்ததில், ''நாங்கள் 1954-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட நேரு கொத்தலாவல ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே நடக்கின்ருேம். இதனை அமுலாக்க முயலும் பொழுது சிற்சில சங்கடங்கள் தொழிலாளருக்கு ஏற்படுவது இயற்கையே" என்று கூறிவிட்டார்கள். இவருக்கு இந்தியாவில் சில ஏக்கர் நிலம் கூட உள்ளதாம். தாய்நாடு சென்று இந்த நிலத்தை உழுது, உலகிலேமிஞ்சியிருக்கும் நாட்களைக் கடத்தி விடலாம் என்ற எண்ணம் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளி, வரப்போவதையெண்ணி உள்ளதையும் இழந்த கதையாகி விட்டது.

### பரிதாபம்

இவரை, தோட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மீண்டும் அவர் முன்பு வேலை செய்த தோட்டத்தில் அமர்த்திக் கொள்ள மறுத்து விட்டார்கள். இப்பொழுது தங்கவும் இடமின்றி இவர் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கின்றது.

இதே நிலையில் இன்று மலைநாட்டில் பல தொழிலாளர் இன்னல் படுகின்றனர். தமது பெற்ருேரும், உற்ருரும் மரண தேவனுடன் போராடும்போது கூட இந்த அபாக்ய தொழிலாளரால் அவர்களைக் காண முடிவதில்லை. இவர்கள் தொடர்ந்தும் இப்படித் திரிசங்குகளாகவே வாழப்போகின்ருர்களா, அல்லது பிறந்த பொன்னுடாவது, வாழ்ந்த இந்நாடாவது இவர்களுக்கு வாழ்வளித்து, இவர்களையும் மனிதர்களாக மாற்றுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

இவர்களை இரு அரசாங்கங்களும் கால் பந்தாக அடித்து விளையாடினுல், முடிவு எப்படியிருக்குமோ? இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் "கள்ளத் தோணி"கள் செல்லுவது உண்மைதானு?

# அனுராதபுரத்துக்குப் புதிய பெயர்?

## 'ஜயநுவர' என மாற்றுமாறு பிரேரணை

— நமது நிருபர் —

அனுராதபுரம்

சமீபத்தில் இங்கு நடைபெற்ற நகர அமைப்புக் கூட்டம் ஒன்றில் அனுராதபுரநகருக்கு 'ஜயநுவர' எனப் பெயரிடவேண்டும் என்ற யோசனை கூறப்பட்டது. திரு. எம். பி. மெதிவாக்க, திரு. நிலங்கா பி. விஜேரத்தின, திரு. சிறிமேவன் கொடகே ஆகியோர் பிரசன்னமாயிருந்த இக் கூட்டத்தில் புது நகர் வளர்ச்சிக்கான பல திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன.

பழைய நகரையும் புதிய நகரையும் இணைக்கும் சாலைகள் பல இருப்பதனுல், அவற்றின் பராமரிப்புச் செலவு அதிகமாகிக் கொண்டு வருவதனுல் இரு நகரையும் இணைக்கும் பெருஞ்சாலை ஒன்றை அமைக்கத் தான் உத்தேசித்துள்ளதாக அரசாங்க அதிபர் திரு. என். பி. விஜேரத்தின தெரிவித்தார். புத்தளம் சாலை, பள்ளிவாசல் தெரு, சிற்றம்பலம் வீதியில் ஒரு பகுதி, பீகொக் தெரு வழியாக டிக்ஸன் வீதியை இணைத்துப் புது நகர் சாலை அமையும் என்று அறிவிக்கப்பட்டது.

பழைய நகரைப் புனித நகரமாக மாற்றிவிடச் சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்றும், குற்றங்கள் மலிந்துள்ள பழைய நகரிலிருந்து மக்களைப் புது நகருக்கு உடனடியாக மாற்ற வேண்டும் என்றும் அப்படி மறுப்பவர்களைத் தண்டிக்க சட்டத்தின் அதிகாரம்கொண்ட ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்த போது அவரது கருத்து ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், பழைய நகரின் சில பகுதிகளில் 'கிராவல்' எனப்படும் மண் சாலைகள் அமைக்கும்படி பொது மராமத்து இலாகாவைத் தான் வேண்டிக் கொண்டபோதும், அவ்வேலைகள் இன்னமும் பூரணமாக முடியாமல் இருப்பதைக் கூட்டத்தினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் சிறப்பு ஆணையாளர் திரு. டி. கே. திஸாநாயக்க.

நீண்ட விவாதத்துக்குப் பின்னர் அவரது கோரிக்கையை உடனடியாக மராமத்து இலாகா நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்படி இல்லாத பட்சத்தில் பட்டின சபையின் நிர்வாகத்துக்கு அவ்வேலையை விட்டுவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பழைய நகரில் முகிழ்த்துள்ள பல்வேறு அருவருப்பான தீமைகளை அகற்ற முடிவு செய்வது என்றும் குழுவினர் தீர்மானித்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா

# இந்தியாவுக்குச் சோதனை காலம்

## 'சீனத்துடன் போரிடவும் தயாராக இருக்கவேண்டும்'

—நேருஜி

லோக் சபையில் சென்ற வாரம் நடைபெற்ற விவாதத்தின் போது பிரதமர் நேரு பதில் அளிக்கையில் பூற்ருன் அல்லது நேபாளத்தைச் சீனம் ஆக்கிரமத்தால் அது இந்தியாவை ஆக்கிரமிப்பதற்குச் சமானமான செயலாகக் கருதப்படும் என்றும், இந்திய-சீன உறவுகள் மேலும் மோசமடையுமானல் இந்திய மக்கள் ஆயுதபாணிகளாக மாறிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென்றும் குறிப்பிட்டார். சென்ற 27ஆம் திகதி லோக் சபை,ஏறக்குறையஏகமனதாக, இந்தியஅரசாங்கம் சீன எல்லை விவகாரத்தில் பின்பற்றிவரும் கொள்கையை அங்கீகரித்துள்ளது. லடாக் பிரதேசம் குறித்துப் பிரதமர் நேரு சீனப் பிரதமர் சௌ என் லாயுக்கு அனுப்பிய பதிலைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பிரேரணைகள் லோக் சபையில் தோல்வியடைந்தன.

### சமாதானப் பாதையில்

பிரதமர் நேரு அகமதாபாத்திற் பேசும் போது குறிப்பிட்டதாவது: இந்தியாவுக்கு சோதனைக்காலம் ஏற்பட்டிருக்கிறது. எந்த விபரீதமான நிலைமை ஏற்பட்டாலும் மக்கள் ஆயத்தமாக இருந்து தத்தம் கடமைகளைச் செய்ய வேண்டும். போர் ஏற்படாமல் இருப்பதற்கு நாம் முயற்சிகள் செய்து வருகின்ருேம். சமாதானக் கொள்கையைப் பின்பற்றுவதென்பது பிறநாட்டவரின் ஆக்கிரமிப்புக்கு இடமளிக்க வேண்டும் என்பது கருத்தன்று. இக் காலத்தில் போர் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத தொன்ருக இருக்கின்றது. சீன எல்லை விவகாரம் குறித்து நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உலகம் கவனித்துக் கொண்டிருக்கிறது. சமாதானப் பாதையில் நின்று விலகமாட்டோம்; சீனம் எமது யோசனைகளை ஏற்று சமரச உடன்பாட்டுக்கு முயற்சி செய்யும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இராஜிய சபையில் 8 ஆம் திகதி சீன எல்லை விவகாரம் விவாதிக்கப்படும்.

### பாகிஸ்தான் பிரதமர் கூற்று

எந்த நாட்டுக்குச் சொந்தமானது என முடிவாக நிர்ணயிக்கப்படாமலிருக்கும் காஷ்மீர் இராச்சியத்தின் ஒரு பகுதியாக லடாக் பிரதேசம் இருப்பதால் இந்திய-சீன எல்லை விவகாரங்களில் பாகிஸ்தானுக்கும் பங்கு இருக்கின்றது எனப் பாகிஸ்தானின் பிரதமர் அயூப்கான் கூறியிருக்கிருர். வெளிநாட்டில் இருந்து வரும் அபாயங்களைத்தடுப்பதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் நேச உறவுகளை வளர்க்க வேண்டியது அவசியம் என்றும், காஷ்மீர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அம்சங்களை விளங்கிக் கொண்டால் அது ஒரு சிக்கல் நிறைந்தபிரச்சினையாக இருக்க மாட்டாது என்றும்அவர்விளக்கியிருக்கிருர். இப் பிரச்சினை குறித்து அவர் கூறிய மூன்று அம்சங்கள் பின்வருமாறு; 1- காஷ்மீர் முஸ்லிம்களுக்கும், பாகிஸ்தானியருக்கும் நெருங்கிய ஒற்றுமைகளும் தொடர்புகளும் இருக்கின்றன. 2- மத்திய ஆசியாவில் ஒரு கேந்திரத் தானமாக காஷ்மீர் இருப்பதால் அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. 3- மேற்கு பாகிஸ்தான் வாசிகளின் வாழ்க்கைக்கு காஷ்மீரில் உற்பத்தியாகும் நதிகளின் நீர் அத்தியாவசியமானதாக இருக்கிறது.

### ஆந்திர இராச்சிய முதலமைச்சர்

ஆந்திர இராச்சியத்தின் முதலமைச்சர் திரு. என். சஞ்சீவ ரெட்டி இந்திய காங்கிரஸின் அடுத்த ஆண்டுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட இருப்பதால் புதிய முதலமைச்சரை ஆந்திர இராச்சிய சட்ட சபையின் காங்கிரஸ் கட்சி டிசம்பர் 28 அல்லது 29இல் தெரிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

V. KATHIRVEL PILLAI
DENTIST
KOTTAYAM.
Over 32 years of steady practice in Kerala State.
Now at
Koddady, — JAFFNA.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு கார்த்திகை மீ 19 உ (5-12-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## தமிழருக்கு அதிக சங்கடங்கள்

தமிழர்களின் குறைகளைக் கவனித்துத் தாம் அவற்றை நீக்கப் போவதாக, திரு. தகநாயக்கா, பிரதமர் பதவி ஏற்றதும், உலகப் பத்திரிகை நிருபர்கள் மூலம் ஒரு வாக்குறுதி அளித்தார்.

ஆனால் அவர் அவ்விதம்கூறி இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், தமிழரின் குறைகள் எதுவும் நீங்குவதற்கான வழிகளைக் காணோம். அதற்கு மாறாகப் புதிய புதிய சங்கடங்கள் தமிழருக்கு ஏற்படுத்தப்படுவதையே பார்க்கின்றோம்.

உதாரணமாக தமிழ்ப்பகுதிகளிலும், நீதிமன்றங்களில் சிங்களம்மூலமே வழக்கு விசாரணைகள் நடாத்த வேண்டுமென்ற மசோதா இவ்வாரம் பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் சார்பாக ஊர்காவற்றுறை பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா இந்த நடவடிக்கையைப் பலமாக எதிர்த்தார். இம்மசோதா தமிழரின் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போலாகும்.

தமிழரின் குறைகளைக் கவனித்து அவற்றைத் தீர்க்க வேண்டுமென்று உண்மையில் பிரதமருக்கு எண்ணமிருப்பின் ஏன் இம்மசோதாவை இவ்வளவு அவசரமாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டும்? இதைத்தமிழ்ப்பகுதிகளில் அவசரப்பட்டு நடைமுறைக்குக் கொணர்ந்தால், மனக் கசப்புகள் அதிகரிப்பதுடன், நீதிநிர்வாகமும் பெரிதும் சீர்குலையும்.

இரண்டாவதாக, அரசாங்க மொழி விசேஷ 'கமிஷனர்', பல இலாகா நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் வெளியிட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில், ஒரு மாகாண அதிபர் காட்டியுள்ள வழியைப் பின்பற்றுமாறு யோசனை கூறுகின்றார். அதாவது, சம்பளப் பட்டியல்கள், 'வவுச்சர்'கள், லீவு மனுக்கள், வேறு கோரிக்கைகள் இவை எல்லாம் சிங்களத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும், அப்படியில்லாமல், ஆங்கிலம் அல்லது தமிழில் அம் மனுக்கள் இருப்பின், அவை திருப்பி அனுப்பப்பட்டு விடுமென்றும் அந்த மாகாண அதிபர் உத்தரவிட்டுள்ளதாயும் அவ்வழியையே மற்ற அரசாங்க இலாகாத் தலைவர்களும் பின்பற்றவேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார். இந்த உத்தரவு நடைமுறைக்கு வருமானால் சிங்களம் தெரியாத லட்சக்கணக்கான மக்களுக்கு இதனால் எவ்வளவு இம்சையும் சங்கடமும் ஏற்படுமென்பதைப்பற்றி அந்த அதிகாரி கவலைப்படவில்லை.

இது போதாதென்று, யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலிய தமிழ்ப் பகுதிகளிலே, சிங்களம் பேசும் மக்கள் எவ்வளவுபேர் இருக்கிறார்களென்று கணக்கெடுக்க உள்நாட்டு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாம். ஏன் தெரியுமா? அங்கு சிங்களம் பேசும் மக்கள் போதியளவு இருப்பின், அங்குள்ள கச்சேரிகளில், சிங்களம்மூலமே சில அலுவல்களை நடத்தவும், தேவையான சிங்கள அதிகாரிகளை அங்கு அனுப்பவும்தானாம்.

கச்சேரி நிர்வாகத்தில் சிங்களத்தைத் துரிதமாகப் புகுத்தத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனறும் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்வித செய்திகளெல்லாம், இத்தீவில் சிங்களம் தெரியாத சுமார் 30 லட்சம் பேர்களுக்கு, அதாவது ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்கினருக்கு, எவ்வளவு சங்கடமும் மனக்கசப்பும் ஏற்படுமென்பதை விளக்கத் தேவையில்லை.

மேலும் கொழும்பு, கண்டி, காலி முதலிய பல நகரங்களிலும் இரு சமூகங்களும் அதிகமாகக் கலந்து வாழுகின்றனர். சிங்களம்மட்டும் சட்டத்தை அவசரப்பட்டுத் திணித்ததால் நிர்வாகத்திலேயே சீர்குலைவு ஏற்படும். தமிழர்களின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் வேண்டுமென்ற ஆவல் பிரதமருக்கு இருக்குமாயின், அவர்களது குறைகளை அறிந்து அவற்றை நீக்க விரும்புவதாயின், இவ்வித வகுப்புவாத உத்தரவுகளுக்கு இடமளிக்கக் கூடாது. தமிழ்மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து, அவர்களது சம்மதத்தின் பேரிலேயே இவ்விஷயமாக அவர் காரியங்கள் செய்யவேண்டும். இந்தியாவிலே பிரதமர் நேருஜி, இந்தி தெரியாத மக்களின் தீர்மானப்படியே இந்தியைக் கொண்டு வரப்போவதாயும் அதுவரை ஆங்கிலமும் இருந்துவருமென்றும் உறுதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மொழிக் 'கமிஷனர்', ஒரு மொழிவெறியரென்றும் அவரே இதற்கெல்லாம் காரணமென்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின், நாட்டில் சமூக ஒற்றுமையும், நல்லெண்ணமும் வளர அவ்வித அதிகாரியை, அப்பதவியில் இருந்து மாற்றிவிட வேண்டியது பிரதமரின் தேசிய கடமையாகும். தமிழ்மக்களின் பிரதிநிதிகள், சும்மா இருக்கப்படாது. பிரதம மந்திரியையும், அவசியமாயின் கவர்னர் ஜெனரலையும் நேரிற் கண்டு, இது குறித்துத் தங்கள் பலமான ஆட்சேபனைகளைத் தெரிவித்து, தமிழ் சமூகத்துக்கு மேலும் சங்கடங்கள் ஏற்படாமலும், நாட்டில் சமூக வேற்றுமைகள் அதிகரிக்காமலும் தடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

## அரசியற் கட்சிகள்

இலங்கையில் நடைபெற்று வரும் பல உள்ளூராட்சித் தேர்தல்களிலும், எந்தக்கட்சிச் சார்பிலும் இல்லாமல் சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களே அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர். காரணமென்ன? பல அரசியல் கட்சிகளிடமும் பொது மக்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டதா?

சில இடங்களில் கட்சியின் பெயரால் நிற்க இஷ்டப்படாமல், மறைமுகமாக கட்சிகளின் ஆதரவை மட்டும் பெற்று சிலர் வெற்றி பெற்று வருகின்றனர். கட்சியின் செல்வாக்கில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை என்பதற்கு இது அத்தாட்சியாகும்.

ஜனநாயகம் வெற்றி பெற, பலமான அடிப்படையிலே, தக்க கொள்கைகளுடன் கூடிய கட்சிகள் அவசியமாகும். இலங்கையிலே கட்சிகளுக்குப் பஞ்சமில்லை. ஒரே கட்சி சில வருஷங்களில் பல கட்சிகளாகப் பிளவுபட்டு, ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கிவிடுமளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. ஒவ்வொரு கட்சிக்குள்ளாகவும் எவ்வளவோ பூசல்கள். தியாகசேவை செய்யவேண்டுமென்ற எண்ணம் குறைந்து, அரசியல் ஆதிக்கம்,பதவி, ஆசை முதலியவை தலை தூக்கி வருவதே இந்த அவல நிலைக்குக் காரணம்.

இவற்றை வர வர பொது மக்கள் அதிகமாக அறிந்து வருகின்றனர். கட்சிகளிலுள்ள ஊழல்கள் அம்பலமானதும், அவற்றிலே பொது மக்களின் நம்பிக்கை குறைகின்றது. இதற்கு இப்போது நடைபெறும் தலதாபனத் தேர்தல் முடிவுகள் நல்ல அத்தாட்சிகளாகும். பொது மக்களின் நம்பிக்கையைப் பெற முயலும் கட்சிகள் இதை எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். தங்கள் கட்சிகளிலுள்ள ஊழல்களை நீக்கவும், பொதுமக்களுக்கு உண்மையில் தியாக சேவை செய்யும்படியான நிர்மாணத் திட்டங்களை வகுத்து நடத்தவும் முற்படவேண்டும். குறுகிய வகுப்புவாத அடிப்படையிலின்றி தேசிய அடிப்படையில் கட்சிகளைத் திருத்தி அமைப்பது, இனி மக்களின் நம்பிக்கையை அதிகமாகப் பெற்று, வெற்றிகரமாகத் தொண்டு செய்ய வாய்ப்பளிக்கும்.

## நமது துறைமுகங்கள்

திருக்கோணமலைத் துறைமுகத்துக்குஇப்போது கப்பல்கள் எதுவும் அனுப்பப்படுவதில்லை என்றும் அங்கு தொழிலாளர் வேலையின்றி இருப்பதாயும் ஒரு செய்தி கூறுகின்றது. இது வருந்தத்தக்கதாகும்.

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே, சென்ற சில நாட்களாக ஒரு கப்பலும் நிற்கவில்லை. துறைமுக வேலைகள் வெகு சுறுசுறுப்பாக நடைபெறுவதாயும், சென்ற 11 மாதங்களுக்குள், முந்திய வருடம் முழுதும் பட்டுவாடாச்செய்த சரக்குகளைவிட அதிகமாக ஏற்றி இறக்கியுள்ளதாயும், வேறு இடங்களுக்கு அனுப்பக் கப்பல்கள் இல்லையென்றும், துறைமுகக்கார்ப்பரேஷன்கொமிஷனர் மயில்வாகனம் பெருமையுடன் தெரிவிக்கின்றார். அவசரகாலப் பிரகடனம் இதற்கு எவ்வளவு தூரம் காரணமாயினும் சரி, கொழும்புத் துறைமுக வேலைகள் தாமதமின்றி நடப்பது பாராட்டத் தக்கதே.

ஆனால் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை, தலைநகரான கொழும்பில் மட்டும் ஏகபோகமாக நடத்துவது, தலைநகருக்கு நல்லதல்ல. நாட்டிலிருந்து மக்களில் பலரும், கொழும்பு வந்து குவிகின்றனர். வீடில்லாப் பிரச்சினை, சேரிகள் முதலிய சங்கடங்கள் அதிகரிக்கின்றன. இச்சங்கடம் குறைய திருக்கோணமலை, காங்கேசன் துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, காலி முதலிய பல துறைமுகங்களையும் விருத்தி செய்து பயன்படுத்தினால், தலைநகரில் ஜனநெருக்கடி அதிகரிக்காததுடன்,ஆங்காங்கேமக்கள் பரவியிருந்து அமைதியாக வாழ்க்கை நடத்தமுடியும்.

கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் கொழும்புத் துறைமுகமும், மற்றத் துறைமுகங்கள் வேறு நிர்வாகத்தின் கீழும் பிரிந்துள்ளன. பல துறைமுகங்களையும் சீராக அபிவிருத்தி செய்து பயன்படுத்த,எல்லாத் துறைமுகங்களையும் அவசியமாயின் இந்தக் கார்ப்பரேஷன் நிர்வாகத்தின் கீழாகவே கொண்டுவரலாம்.

பல துறைமுகங்களையும் அபிவிருத்திசெய்யப் போவதாகக் கூறும் அரசாங்கம், இப்போதுள்ள திருக்கோணமலை முதலிய துறைமுகங்களைச் சரிவரப் பயன்படுத்தத்தக்க ஏற்பாடுகளைச் செய்தல் அவசியம். இன்றேல் கொழும்புத்துறைமுகத்தில் மீண்டும் நெருக்கடிகள் ஏற்படவும், வேறு துறைமுகங்கள் சீராக அபிவிருத்தியடைவதற்கு வழியே இல்லாமற் போகவும், மக்கள் வீண் இம்சைகளுக்கு ஆளாகவும் நேரிடும்.

## குழந்தை இலக்கியப் பணி

குழந்தைகளுக்கான நல்ல நூல்களை வெளியிட வேண்டுமென்ற ஆவல் இன்று தமிழ் நாட்டில் நன்கு வளர்ந்து வருகின்றது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற முதலாவது குழந்தை இலக்கியமாநாடு குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கான வழிதுறைகளை ஆராய்ந்திருப்பதுடன்,குழந்தைஇலக்கியம் படைக்கவிரும்புவோர் என்னசெய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் யோசனைகள் கூறியிருக்கின்றது. குழந்தைகளுடன் நெருங்கிப் பழகி அவர்களின் இயல்புகளை நன்கு அறிந்து, அதனால் பெறும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதுவதே உகந்த வழியென்பதை குழந்தை இலக்கிய நூல்களை எழுதுபவர்கள் மனத்திற் கொள்ளல் வேண்டும். தமிழ் நாட்டிலும், ஈழ நாட்டிலும் இன்று குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை எழுத வேண்டுமென்ற ஆசை பள்ளிக்கூட ஆசிரியர்களிடத்தும் எழுத்தாளர்களிடத்தும் ஏற்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதே. அதே வேளையில், எங்கள் குழந்தைகளிடையேயும் படிக்கும் பழக்கம் வளர்ந்து வருவது பெரு மகிழ்ச்சியை ஊட்டுவதாகும்.குழந்தை இலக்கியங்கள் குழந்தைகளின் உள்ளங்களைக் கவரக்கூடிய முறையில் எழுதப்படவேண்டுமெனவும், அவை பொது அறிவை வளர்ப்பதுடன் நின்றுவிடாது குழந்தைகளை நல்லவர்களாக்குவதற்கும் உதவ வேண்டுமெனவும் இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்த சென்னைத் தேசாதிபதி திரு. விஷ்ணுராம் மேதி தமது உரையிற் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானது. சென்னைக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இம் மாநாடு குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியத்தை வெளியிடும் பணியிலும் முன்னணியில் நின்று உழைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

## இலங்கை வானொலி நிர்வாகம்

இலங்கை வானொலியில் அரசியல் கட்சிப் பிரசாரமும், தேர்தல் பிரசாரமும் நடைபெறுவதாக, பார்லிமெண்டில் எதிர்க் கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா புகார் கூறினார். அத்தனகல்லை தொகுதியில் போட்டியிடும் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்குச் சாதகமாக 'அரசியல் குறிப்புக்கள்' மூலம் பிரசாரம் செய்யப்பட்டது உண்மையாயின், அது இலங்கை வானொலியை துஷ்பிரயோகம் செய்வதேயாகும்.

இக் குற்றச் சாட்டுக்குப் பிரதமர் அளித்த பதிலில், இவ்விஷயத்தை சம்பந்தப்பட்ட மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக வாக்களித்தார். எந்த அரசாங்கமும் தன்னைக் காத்துக் கொள்ள சகல சாதனங்களையும் பயன் படுத்திக் கொள்வது இயற்கையே. என்றாலும் பொதுத் தேர்தல் விஷயத்தில் அரசாங்கம் எந்த அபேட்சகருக்குச் சாதகமாயும், வானொலி உள்ளிட்டு எந்த அரசாங்க சாதனங்களையும் பயன் படுத்துவது முறையல்ல. ஓர் அபேட்சகருக்கு அளிக்கப்படும் வசதி, மற்ற எல்லா அபேட்சகர்களுக்கும் கிடைப்பதாக இருந்தால்தான், தேர்தல் பாரபட்சமற்றமுறையில்ஜனநாயகத் தர்மப்படி நடைபெறுவதாக இருக்க முடியும். ஆகவே, இப்படியான தவறு இனி ஏற்பட அனுமதிக்கப்படக்கூடாது.

## நாவலர் வழி

தமிழ் நாட்டிலே சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பாகக் கொடிய பஞ்சம் வந்தது. நெல்லைக் கொள்ளை லாபம் வைத்துப் பலர் விற்றனர்.

சிதம்பரத்திலே நாவலர் பெருமானுக்கு நிலங்களுண்டு. நிலத்தில் விளைந்த நெல்லை என்ன விலைக்கு விற்பதென்று மணியக்காரர், யாழ்ப்பாணத்திலிருந்த நாவலருக்கு எழுதிக் கேட்டார். நியாயமான விலைக்கே விற்கும்படி பதிலளித்தார் பெருமான்.

ஆனால் இதற்கு மாறாக, கொள்ளை லாபத்துக்கு நெல்லை விற்று, மணியக்காரர் அந்தப் பணத்தைத் தர்ம நிதியில் சேர்த்து விட்டாராம்.

இதை அறிந்தார் நாவலர். மனம் நொந்து, ஏழு ஆண்டுகளாகச் சிதம்பரப் பக்கமே செல்லாமல் ஈழத்திலேயே இருந்துவிட்டாராம்!

தர்ம வழியில் ஈட்டிய பொருளையே தர்மம் செய்ய வேண்டுமென்றும், அதர்ம வழிகளில் பணம் சம்பாதிப்பதுவே பாவம் என்றும் நாவலர் பெருமான் கருதி, அந்தப் பாவம் தமக்கு வேண்டாமென்று, சிதம்பரத்துக்கே பின்னர் செல்லவில்லையாம்!

* * *

இந்த சம்பவத்தைப் பற்றி, கொழும்பு விவேகானந்த சபையில் நாவலர் விழாவிலே, திரு. லக்ஷ்மணன் எடுத்துச் சொன்னார். இதைத் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார் பேசுகையில் அதை இன்றுள்ள நிலையுடன் ஒப்பிட்டார். நாவலர் "கோழை" என்றும் நாமெல்லாம் கெட்டிக்காரர்களென்றும், குத்தல் விட்டு, நாவலர் பெருமான் காட்டிய அற வழிக்கும், இன்று நம்மில் பலரது மனோ நிலைக்கும் உள்ள வேற்றுமையை இடித்துச் சொன்னார்.

இது 'பிளாக்மார்க்கெட்' காலம். எந்த வழியிலாவது, எப்படியாவது பணம் தட்ட வேண்டும். அவ்வளவு தான். யார் எக்கேடு கெட்டாலும் அதைப்பற்றி நமக்கென்ன? இவ்வித மனப்பான்மை நம்மில் பலரிடையிலும் புகுந்து, பணமும் சுயநலமும் தான் நம்மை எல்லாம் ஆட்டிவைக்கின்றன. தமிழரின் இன்றுள்ள தாழ்ந்த நிலைக்கு முக்கிய காரணம் இதுவே. மீண்டும் உயர் நிலை எய்த, நாவலர் பெருமான் வாழ்ந்த நெறி நமக்குத் துணை காட்டவேண்டுமென்றார் மீனாட்சி சுந்தரனார்!

* * *

அன்று விவேகானந்த சபையில் நாவலர் பெயரால் 'மகேஸ்வர பூசை' என்ற அன்னதானம் நடைபெற்றது. பல ஏழைகளுக்கு பசிப்பிணி ஆற்றப்பட்டது. நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின் அது படமாடும் கோயில் பரமர்க்கு மாகுமாம்!

சில நாட்களுக்குமுன் வடநாட்டு வர்த்தகர் ஒருவர், கொழும்புக் கோவில் ஒன்றில், ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார். நல்ல சாப்பாடு. ஏழைகள் சாப்பிட்டு விட்டு வாயார வாழ்த்தினர்.

தனி ஒருவனுக்கு உணவில்லை என்ற நிலை ஏற்படாமற் தடுத்துவிட்டால், ஜகத்தினை யாரும் அழிக்கவேண்டியதில்லை அல்லவா?

நாம் அன்பை மறந்து சுயநல வாழ்க்கை வாழ்கிறோம். இக்காலத்தில் அன்புக்கு மிகவும் பஞ்சம். சுயநலம் எங்கு முடிகிறதோ அங்குதான் அன்பு உதயமாகிறது.

"எழுபது வயதிலும் நீங்கள் எப்படி இவ்வளவு மலர்ந்த முகத்துடன் இளமையாக

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செத்து விட்டது!

## அதன் மொழிக் கொள்கையின் விளைவு

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பண்டாரநாயக்காவுடன் செத்துவிட்டது. இனி அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயலுவது ஆகாத வேலை". இவ்வாறு, அக்கட்சியிலே முன்னர் ஓர் உபதலைவராக இருந்த கொழும்பு நியாயவாதி திரு. கே. ஸி. நடராஜா "ஈழநாடு" பிரதிநிதியிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

பண்டாரநாயக்கா தமது அறிவாற்றல்களையும் செல்வாக்கையும் பயன்படுத்தியதுடன், கட்சியின் வளர்ச்சிக்காகப்பணமும் தாராளமாக வழங்கினர். சில நல்லவர்கள் அக்கட்சியில் சேர்ந்தனர். ஆனல் துரதிருஷ்டவசமாக, கட்சியின் மொழிக் கொள்கையை தேர்தலை முன்னிட்டு மாற்றுமாறு சிலர் தூண்டியதற்கு அவர் உடன்பட்டு விட்டார். சிங்களம் மட்டும் கொள்கையை ஏற்றதுமே கட்சி குலைந்து விட்டது. அது வகுப்பு வாதக் கட்சியாகி விட்டது.

பண்டாரநாயக்கா புலிவாலைப் பிடித்துக் கொண்டு விட்டார். அதை விடவும் முடியவில்லை. மொழிக் கொள்கையால், வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. செய்த தவறை திருத்திக்கொள்ள அவர் முயற்சி செய்தார். ஆனல் முடியவில்லை. யாழ்ப்பாணத்து கிராமங்களில் சிங்களத்தைக் கட்டாயமாகப் புகுத்தவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இல்லை.

அடுத்த முறை தேர்தலில், அந்தக்கட்சி போட்டியிடுமாயின், 20 அல்லது 25 ஸ்தானமும் பெற முடியும் என்பது சந்தேகம். வேறு எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி பலம் கிடைக்காது. கூட்டாட்சிதான் ஏற்பட முடியும்" என்றார்.

# ஒரே நாளில் இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனையை பின்னர் சட்டமூலம் அதிகரிப்பது அந்த சாஸனத்துக்கு முரணுகுமென்றும் வாதித்து அரசாங்கக் கட்சியைத் திகைக்க வைத்து விட்டார். நீதி மந்திரிக்கு என்ன பதில் சொல்லுவதென்பதே தெரியவில்லை. இலங்கை அந்த ஏற்பாட்டில் கையெழுத்திட்டுள்ளதாஎன்பதுதமக்குத் தெரியாதென்று மந்திரி கூறியதும், சபையில் "கொல்" என்று சிரிப்பு. இலங்கையைச் சேர்ந்த ஆர். எஸ். எஸ். குணவர்த்தனதான் ஐ. நா. மனித உரிமை சாஸன குழுவின் தலைவரென்றும், அந்தசாஸனத்துக்கு மாருகச் சட்டம் செய்வதால் உலக அரங்கில் இலங்கையின் மானமே கப்பலேறி விடுமென்றும்திரு. நடேசன் வாதித்தார். யு. என். பி. கூரே, செனேட்டர் அஸீஸும் இவ்விஷயம் தெளிவாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். எக்கச்சக்கமான நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதற்குச் சரியான பதிலே சொல்ல முடியவில்லை. மரண தண்டனை நிறுத்தி வைக்கப் பட்டதேயன்றி ரத்துச் செய்யப்படவில்லை என்றும் ஆகவே இம்மசோதா ஐ. நா. சாஸனத்துக்கு முரணுகாதென்றும், நீதி மந்திரி முணுமுணுத்தார்.

### வாக்குப் பலமுள்ளது

வாதத்தில் தோற்ருலும் சபையிலே அரசாங்கக் கட்சிக்கு அதிக வாக்குப் பலமுள்ளது. அதனல் மசோதா நிறைவேறியது. இடைக்காலத்தில் 14 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென்றும், அவர்கள் விஷயத்தை விசேஷமாக கவனித்து சலுகை காட்ட வேண்டுமென்றும் கேட்டதற்கு, சபை முதல்வர் ஏ. பி. ஜயசூரியா, இதைப் பிரதம மந்திரியிடம் தெரிவிப்பதாகக் கூறினர்.

இம்மசோதா நிறைவேறியதும் கவர்னர்ஜெனரலுக்கு அறிவிக்கப்பட்டது. உடன் அவர் இச்சட்டத்தை அங்கீகரித்து, அவசரகால பிரகடனத்தையும் ரத்துச் செய்து விட்டார்.

பின்னர் "டபிள்" நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் விவாதத்துக்கு வந்தன. ஆனல்பிரதிநிதிகளில் பெரும்பாலானேரின் ஆதரவை அரசாங்கம்பெறவில்லையாகையால், அதன்மீது நம்பிக்கையில்லை என்பது முதல் தீர்மானம். திரு. நல்லையா (சமஷ்டி) தமிழில் பேசி, தீர்மானத்தை ஆதரித்தார். அது மொழி பெயர்ப்பாளரால், உடனுக்குடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. சபையிலே இரு சிங்கள செனேட்டர்களுக்கு ஆங்கிலமோ, தமிழோ தெரியாது. வாக்களிக்கையில் கூட "ஆய்" "நோ" என்பதைச் சரிவரச் சொல்ல முடியாமல் தடுமாறுகிருர்கள், சபையெல்லாம் சிரிக்கிறது. கூடிய சீக்கிரத்தில் மூன்று மொழிகளிலும் சபை நடவடிக்கைகளை ஏககாலத்தில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் அதில் வியப்பில்லை.

### பேசா மடந்தைகள்?

இந்த விவாதத்தில் விசேஷமென்னவெனில், சபையிலுள்ள மூன்று மந்திரிகள் ஒருவராயினும் பேசாதது தான். மூன்று மந்திரிகளும் பேசா மடந்தைகள் போல் மௌனம் சாதித்தனர். எதிர்க் கட்சித் தலைவர் சொய்ஸா இதைக் குத்திக் காட்டினர் என்ருலும் மூவரும் மூன்றும் "பேஸ்த்து"ப் பிடித்தவர்கள் போல தலைகுனிந்து வாயை இறுக மூடிக் கொண்டிருந்தனர்.

பாவம்! அவர்கள் என்ன பேசுவது? நொண்டிக் கட்சி. எப்படியும் தீர்மானம் நிறைவேற முடியாதென்ற நம்பிக்கையில், இருந்து வந்தார்கள். என்ருலும் அச்சமயம் அவர்களைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஒரே குற்றத்திற்காக ஒருவரை இரு முறை தண்டிக்கப்படாதென்பது சட்ட நியதி. ஆனல் நீதி மந்திரியோ, ஸிட்னியின் அறிக்கையை அனுமதித்தற்காக ஏற்கனவே பார்லிமெண்ட் சபையில் அவரைப் பிச்சுவாங்கி விட்டார்கள். இப்போது செனேட் சபையிலும் அவரைக் கண்டித்து ஒரு தீர்மானம் விவாதத்துக்கு வந்தது. தமது நடத்தைக்கு அவர் என்னதான் சமாதானம் கூறப் போகின்ருரென்று, பலரும் அவர் பதிலுக்கு ஆவலுடன் காத்திருந்தனர்.

செனேட்டர் நடேசன், சில திட்டமான கேள்விகளைக் கேட்டார். "ஸிட்னியின் அறிக்கையை அனுமதித்ததை நீங்கள் இப்போது சரி என்கிறீர்களா? தவறு என்கிறீர்களா?" என்று கேட்டார். இதற்கு எப்படி பதில் சொன்னலும் மந்திரி மாட்டிக் கொள்வார். ஆகவே "மௌனம் கலகநாஸ்தி" என்று அக் கேள்விகளுக்கு ஒன்றுமே பதில் சொல்லாமல் வேறு ஏதேதோ சொன்னர். அந்த அறிக்கை வெளியிட்டதாக அவரை நீக்கவில்லை என்றும் வேறு காரணங்களுக்காவே அவர் நீக்கப்பட்டதாகவும் கூறினர். கேட்ட கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. அவரைப் பதில் சொல்லும்படி கட்டாயப்படுத்தவும் முடியாது. அவர் ஏதோ பேச எழுந்தார். பக்கத்திலிருந்த தேசியமய மந்திரி அவரைப் பிடித்து இழுத்துப் பேச விடாமல் தடுத்தார். அவர் ஏதாவது உளறி விடுவாரோ என்ற பயம் போலும்.

### அவர் ஓர் அப்பாவி

நீதி மந்திரி ஓர் 'அப்பாவி' யாகவே காணப் பட்டார். "நீங்கள் ராஜிஞமாச் செய்வதாகக் கூறினீர்களா?" என்று கேட்டதற்கும் பதில் சொல்லாமல் சும்மா இருந்தார். தீர்மானத்தைவாக்கெடுப்புக்கு விட்ட போது, அவர் வாக்களிக்கவில்லை. ஸ்ரீமதி மொலமுரே (யு. என்.பி.) நடுநிலைவகித்தார். 14 பேர்பாதகமாகவும் 7 பேர் சாதகமாகவும் வாக்களித்ததால், பிரேரணை தோற்றது. இந்த முடிவு முதலிலேயே தெரிந்ததுதான். என்ருலும் மந்திரியின் பதில், அவர் கட்சி எவ்வளவு பலவீனமானதென்பதை அம்பலப் படுத்தியது.

செனேட் தலைவர் சேர் சிரில் டி' சொய்ஸா, மிக கண்டிப்பாகவும் பட்சபாதமின்றியும் சபை நடவடிக்கைகளை, ஒழுங்காக நடத்தி, குறித்த நேரத்திற்கு ஒவ்வொரு பிரேரணை விவாதத்தையும் கச்சிதமாக முடிக்கச் செய்தார். 15 நியமன மெம்பர்களடங்கிய இச் சபையும், கட்சி கட்டுப்பாட்டு முறையிலேயே இயங்குவதாலும், பார்லிமெண்ட் சபையின் எதிரொலியாகவே இருப்பதால் இச்சபை இனியும் நீடித்திருக்க வேண்டியது அவசியம் தானு? இதனல் பயன் ஏதும் உண்டா? என்ற சந்தேகத்துடன் சபையை விட்டு வெளிவந்தேன்.

# நாவலர் வழி

(8ஆம் பக்கம் பார்க்க)

இருக்கிறீர்கள் ?" என்று நேருவை, இந்திய 'டெலிவிஷன்' நிருபர் கேட்டதற்கு, "நான் குழந்தைகளை நேசிக்கிறேன். மலைகள், மரங்கள், புஷ்பங்கள்பால் அன்பு காட்டுகின்றேன்" என்ருர் பாரதப் பிரதமர்.

"அன்பே சிவம்" என்று அவர்வாயால் கோஷிக்கவில்லை. ஆனல் மரங்களிடமும்கூட அன்புகாட்டுகிருர். ஆனல் அன்பே சிவம் என்று கோஷிக்கும் நாம், "ஐயா பசி" என்று யாராவது வந்தால் அடித்து விரட்டுகிரேம்! இதுதான் நேருஜிக்கும் நமக்கும் உள்ள வேற்றுமை !

—ஐயாறன்

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

அரசியல் ஓர் "எளிய வேலை' என்று உலகிலுள்ள அரசியல்வாதிகள் அத்தனை பேரும் சொல்லிக் கொண்டு வருகின்றனர். அரசியல்வாதிகளின் தாளத்துக்கெல்லாம் ஆட்டம்போடும் மக்களும் அர்சியல் என்ற பேச்சைக் கேட்டவுடனேயே செவியை பொத்திக்கொண்டு அப்பாற்சென்று விடுகின்றனர். அப்படியிருந்த போதிலும் அரசியலில் ஈடுபட்டுச் சத்தம்போடுவதையே வாலிபர்கள் விரும்புகின்றனர். வயோதிகர்களும் ஆசைப்படுகின்றனர்.

யோக்கியமாக வாழ்க்கை நடாத்துபவர்களுக்கு 'அரசியல்' என்றுமே சேறும் சகதியும் நிறைந்த ஒரு குட்டையாகவே இருந்து வருகின்றது. இதனை அனுபவத்திற் கண்ட பழுத்த அரசியல் வாதிகள் பலர் 'போதுமப்பா போதும் இந்தப் புதுக்குளத்து வேளாண்மை' என்று சொல்லி வேறு உபயோகமான காரியங்களில் இன்று ஈடுபட்டு வருவதை நாங்கள் நேரிற்கண்டு வருகின்ரேம். ஒரு சிலர் 'அரசியல் விதைப்பு, வெட்டு, சூடுமிதி, என்பனவற்றுக்கு முற்றுப் புள்ளி போட்டுவிட்டு 'அரசியல் துறவு' பூண்டுகொள்வதும் உண்டு. ஆனல் முன்னுள் வவனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் அரசியற் சேற்றுக்குள் நின்று கும்மாளம் போட்டது போதுமென்று சொல்லி வயற்செய்கையில் தற்காலிகமாக இறங்கி இருக்கின்ருர். சேறும் சுரியும் நிறைந்த வயல்களிலும்பார்க்க அரசியல் ஒரே சேறும் சகதியுமாக இன்று மாறிவிட்டது. எனவே, வேளாண்மை செய்வதே இன்றைய நிலையில் தமக்கு மிகப் பிரியமானதொன்ருக இருக்கின்றதெனக் கூறி திரு. சுந்தரலிங்கம் வயல்வேலைகளை மேற்பார்வை செய்து வருகின்ருர்.

அரசியலிற் களை பிடுங்க முடியாதவாறு இன்று நாட்டில் பாசி படர்ந்து விட்டது. அதில் நாளாந்தம் சறுக்கி விழுபவர்களை நாங்கள் கண்டு வருகின்ரேம். சுணைமணையற்ற எருமைகளைப்போல இவர்களிற் சிலர் சேற்றிலேயே கிடந்து உழன்று வருவதால் அவர்களுக்கு அதுவே சொகுசான வாழ்க்கையாக அமைந்து விட்டது.

### அரிய கருத்து

வார்தா கல்வி நிபுணர் திரு. ஈ. டபிள்யூ. அரியநாயகம் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். தமது பிறந்த நாட்டிலே சில தினங்கள் தங்கி நிற்பதற்குத் திட்டமிட்ட போதிலும் அவசிய அலுவலாக அவர் வார்தா திரும்பவேண்டியிருந்தது. அப்படியிருந்த போதிலும் தமது கருத்துக்கள் சிலவற்றை நாட்டிற் பரப்பிவிட்டுத்தான் சென்றிருக்கின்ருர். வளமுள்ள நிலத்தில் விதைக்கும் விதைகளைப் போல அவருடைய கருத்துக்களும் முளைகொண்டு குருத்துக்களைக் கக்குமென எதிர்பார்க்கலாம்.

மகாத்மா காந்திஜியினுல் ஆரம்பிக்கப்பட்டு வினேபாஜியின் பெருமுயற்சியால் இந்தியா எங்கணும் பரவிவரும் சர்வோதய இயக்கம் ஆதிக் கிறிஸ்தவ சபையினரிடையே நிலவி வந்ததென்பது அவருடைய கருத்து. யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஊழியர் சங்கக் கூட்டம் ஒன்றிற் பேசும் போதுதான் இக் கருத்தை அவர் தெரிவித்திருந்தார். பிறர் நலம் பேணும் இந்த இயக்கம் ஆத்ம ஈடேற்றத்துக்கும் உதவி புரிகின்றதென்பதை அவர் எடுத்துக் காட்டினர்.

### எழுத்தாளருக்கு யோகம்!

தமிழ் எழுத்தாளரை முழுப் பட்டினிக்காரரென்றும் தமிழ்ப் பத்திரிகையாளர்களை அரைப்பட்டினிக்காரர் என்றும் சொல்வதுண்டு. இப்போது நிலைமை சிறிதளவு மாறிவருகின்றதாயினும் தமிழ் எழுத்தாளர் சிலரின் வாழ்க்கைப் பிரச்சினை பயங்கர ரூபங்களை எடுத்து வருவதைச் சொந்தக் கண்களாற் பார்த்து வருகின்ரேம். எழுத்தாளரைப் பொறுத்த வரை நிலைமை மோசமாக இருக்கலாம். ஆனல் சமீபத்தில், மலாயா பத்திரிகை ஒன்றின் முன்னுள் ஆசிரியரான ஐ. யூ. பின் இஸாக் சிங்கப்பூர் நகரமொன்றின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எழுத்தாளர்கள் என்ருல் எப்போதும் ஏழைகளாக இருக்கப்போவதில்லை. எல்லாருக்கும் ஒரு காலம் புகழும் யோகமும் அடிக்கத்தான் செய்யும்!

# பார்லிமெண்ட் கலரிக்கு பொது மக்கள் தடை

## சபையிற் காரசாரமான விவாதம்

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

பொது மக்கள், சனப்பிரதிநிதிகள் சபைக்கு வராமல் தடுக்கும், சபாநாயகரின் தீர்மானத்தை எதிர்க்கும் முகமாக நேற்று பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஒட்டிய விவாதத்தின்போது, பிரதமர் திரு. தகநாயக்கா, தமக்குக் கிடைத்த சில அந்தரங்கமான தகவல்களையொட்டியே தாம் இத்தகைய முடிவுக்கு வர வேண்டியிருந்தது எனக் கூறினர். செப்டெம்பர் மாதம் 23ம் திகதி திரு. தேமிஸ், பார்லிமெண்டிலே நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில், மக்கள் தம் பிரதிநிதிகளைக் கைத்துப்பாக்கியால் "சோர்! சோர்;" எனச் சுட்டு வீழ்த்திவிடுவார்கள் எனக் கூறியதைப் பிரதமர் நினைவுறுத்தினர்.

**தேமிஸ்:** கைத் துப்பாக்கி, "சோர்! சோர்!!" எனவா சப்திக்கும்? நான் சிறுவர்கள் விளையாடும் தண்ணீர் துப்பாக்கிகளைப்பற்றியல்லவா கூறினேன்! (சபையில் பலத்த சிரிப்பு)

விவாதத்தின் இறுதியில் எதிர்க் கட்சித் தலைவர் பேசும்போது ஒரு பிரதிநிதியின் பேச்சிலிருந்து பொது மக்கள் உரிமை மறுக்கப்படுமாளுல், இன்றைய பிரதமரே இவ்வாறு பலமுறை கூறியிருக்கின்ருர், அப்பொழுதெல்லாம் இப்படி நடைபெறவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டார்.

"வேண்டுமெனில் நாங்கள் சபாநாயகர்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்போம். ஆனல் உங்கள் மேல் எங்களுக்கு நம்பிக்கையிருக்கின்றது. எத்தனையோ இக்கட்டான நிலைமைகளில் நீங்கள் பட்சபாதமின்றி நடந்திருக்கின்றீர்கள். ஆனல் இப்பொழுது அரசாங்கம் கூறுவதற்கெல்லாம், 'ஆம்' எனத் தலையசைத்து, இப்படி பொதுமக்கள் வந்து அவர்கள் பிரதிநிதிகளை கண்டு பேசமுடியாமல் செய்யும் உங்கள் முடிவை நாங்கள் எதிர்க்கத்தான் வேண்டியிருக்கின்றது. இப்பொழுதும் கூட ஒன்றும் மிஞ்சிப்போய் விடவில்லை. நாங்கள் எங்கள் கட்சியை எடுத்துக் கூறியுள்ளோம். நாளையிலிருந்து பொது மக்கள் சபைக்கு வரலாம் என பிரதமர் உறுதி கூறினல் போதும்" என்ருர் டாக்டர் என். எம்.

தெஹியோவிட்ட பிரதிநிதி, திரு. எட்மண்ட் சமரக்கொடி பேசும்பொழுது ஏதும் சாக்கு போக்குகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லையென்றும், அவர்கள் சபாநாயகரில் நம்பிக்கை இழந்து விட்டனரென்றும், எனவே சபாநாயகர் உடனடியாக இராஜினமா செய்ய வேண்டுமெனவும் கூறினர்.

முன்னர் ஒரு முறை எப்படி தற்போதைய பிரதமர் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது, தம்மை (திரு. சமரக்கொடியை) ஒரு நாள் சபையில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர், சபாநாயகராகத் தெரிவு செய்தார் என்றும், தாம் சபாநாயகராக இருந்த சொற்ப நேரத்தில், அடக்க முடியாத பலர் சபையில் கொந்தளிப்பை ஏற்படுத்தியும், தாம் சபையின் கௌரவத்தைக் காப்பாற்றியதையும் குறிப்பிட்டார்.

காரசாரமான ஒருதலை விவாதத்தில் இந்தப் பேச்சு சுருதியிழந்திருந்தாலும், சுவையூட்டியது.

வாக்கெடுக்கப்பட்ட பொழுது, திரு. குசுமா இராஜரத்ன எதிர்க் கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்துடன் வாக்களித்தார். எதிர்க் கட்சியிலே இது ஒரு சலசலப்பை ஏற்படுத்தி மறைந்தது.

மாதர் பகுதி

**கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையங்களுக்குத் தவருது சென்று டாக்டரின் அறிவுரைகளைப் பெற வேண்டியதன் அவசியம் இங்கு வற்புறுத்தப் பட்டுள்ளது. இது டாக்டரின் ஏழாவது கடிதமாகும்.**

# கர்ப்பிணியின் நிறை

— 'நந்தி' —

உனது நிறை இப்பொழுது 115 இருத்தல் என்பதை நீ உன் அண்ணிக்கு எழுதிய கடிதம் வாயிலாக அறிந்தேன். அதாவது, கர்ப்பவதியான பின் உனது நிறை 15 ருத்தல் அதிகரித்திருக்கின்றது. இது மிகவும் நல்லது. ஒரு கர்ப்பிணியின் நிறை அவள் கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் 20ருத்தல் வரை அதிகரிக்கின்றது. குழந்தை, நஞ்சு, கருப்பை முதலியவற்றின் பளு கர்ப்பிணியின் நிறையைக் கூட்டுகின்றது. அத்துடன் கர்ப்ப காலத்தில் ஒரு பெண்ணின் உடலில் அதிகப்படியாக நீரும் கொழுப்பும் தங்கிவிடுகின்றன. பலசரக்குக் கடைக்காரன் கணக்குப் போடுவது போலக் கணக்குப் போட்டால் நான் எழுதியது உனக்கு நன்கு விளங்கும். கணக்கைக் கவனி:

| | | |
|---|---|---|
| குழந்தை | $6\frac{1}{2}$ | ருத். |
| நஞ்சு | 1 | ” |
| பனிநீர் | 2 | ” |
| கருப்பை | 2 | ” |
| மஸ்தனங்கள் | $1\frac{1}{2}$ | ” |
| நீரும் கொழுப்பும் | 7 | ” |
| மொத்தம் | 20 | ” |

கொழுப்பும் நீரும் 7 இருத்தல் வரை ஒரு கர்ப்பிணியின் உடலில் தங்குவது இயற்கை. அதற்கு மேலாகத் தங்கினல் அது நல்லதல்ல. அப்போது அவளின் நிறை அதிகரிக்கிறது. ஆகையால் அதைக் கூடிய வரை ஒரு கர்ப்பிணி தவிர்க்க வேண்டும். ஏன் தெரியுமா? மிதமிஞ்சி ஒரு கர்ப்பிணி பருத்தால் அவளின் சுக நிலை பாதிக்கப் படுகிறது. அதனல் தாய்மை அடைந்ததால் ஏற்படும் மகிழ்ச்சி அவளுக்கு உண்டாகாமற் போய் விடலாம். ஒரு வித வெறுப்புக் கூடத் தோன்றலாம். கர்ப்ப காலத்தில் ஒரு சிக்கலான அதிக இரத்த அழுத்தமும் மிதமிஞ்சிப் பருத்த பெண்களிடையேதான் பெரும்பாலும் தோன்றுகிறது. இருதயமும் இரத்தத்தை அளவுக்கு அதிகமாகப் பருத்த தேகத்தின் பாகங்களுக்கு உந்தித் தள்ளுவதற்கு அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. கர்ப்பமுற்றிருக்கும் போது சாதாரண நிறையுள்ள ஒரு பெண்ணின் இருதயமே அதிகமான வேலை செய்கிறது. எனவே நீங்கள் தேகத்தின் நிறையை மேலும் அதிகரித்து இருதயத்தைச் சிரமப் படுத்துவது விரும்பத்தக்கதல்ல. அதிகமாக ஒரு கர்ப்பிணி பருமன் அடைவதால் அவளின் உடல் அமைப்பும் அழகும் கெட்டுவிடுகின்றன. பிரசவமான பின்பும் அவள் தனது முந்திய தேகக் கட்டை அடைய முடிவதில்லை. இப்படி நம் நாட்டுப் பெண்கள் (முக்கியமாகத் தமிழ்ப் பெண்கள்) ஒவ்வொரு பிள்ளையுடன் தங்கள் தோற்றத்தின் வனப்பை இழந்து வருகிருர்கள். ஒரு பிள்ளைக்குத் தாயானதும் தங்களைப் பாட்டி என்று நினைக்கிருர்கள். 'கோடி ஒரு வெள்ளை. குமரி ஒரு பிள்ளை' என்ற பழமொழி கூட இதனல் ஏற்பட்டு விட்டது. அனவசியமான கொழுப்பு கர்ப்ப காலத்தில் பெண்களின் உடலில் அடைக்கலம் அடைவதே இந்த அவல நிலையின் காரணமாகும்.

தவருமல் சிகிச்சை நிலையங்களுக்குப் போய் வரும் கர்ப்பிணிகளுக்கு இந்த நிலை ஏற்படாது. ஏனெனில் அங்கே ஒழுங்காகக் கர்ப்பிணிகளின் நிறையைக் கவனித்து டாக்டர் வேண்டிய அறிவுரைகளைத் தருகிருர்.

கொழுப்பு, எண்ணெய் உள்ள உணவுகளை கூடியவரை கர்ப்பிணிகள் தவிர்ப்பது நல்லது. பொரித்த பதார்த்தங்களை உண்பதை நிறுத்தவேண்டும். உடல் பருத்து வருமாயின் கேக், சாக்லேட் முதலிய வற்றைக் கூட உண்ணலாகாது. புரதச் சத்துள்ள உணவுகளுடன் பழவகைகளையும் காய்கறிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பழங்களிலும் காய்களிலும் கீரைவகைகளிலும் ஜீவசத்து (வைட்டமின்) அதிகம் உண்டு. அவற்றைப் பச்சையாகவே உண்பது மிகவும் நல்லது.

உடலின் நிறையைக் கட்டுப் படுத்த தேகாப்பியாசமும் இன்றியமையாதது. சரசுதீபாவளிக்கு வந்தவள் இன்னும் போகவில்லை. அவளுக்கு அண்ணியும் நானும் தேகாப்பியாசங்களைக் காட்டிக் கொடுக்கிறேம். உனக்கு அடுத்த கடிதத்தில் அவற்றை எழுதுகிறேன்.

உனது அன்புள்ள
**நந்தி அண்ணு.**




பார்லிமெண்டில்

## நீதிமன்ற உத்தியோக மொழி சட்டம் தடைப்பட்டது

தமிழரை மேலும் வருத்தக் கூடிய விதத்தில் நீதிமன்றங்களில் உபயோகிக்கப்படவேண்டிய மொழி மசோதாவை, நீதியமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி 26-11-59 வியாழக் கிழமை பிரதிநிதிகள் சபையில் இரண்டாவது வாசிப்புக்குச் சமர்ப்பித்தார்.

சபையிலே சிறிது உற்சாகம் பிறந்தது. நீதியமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, திரு. காரியப்பர், காரியத்தை இலகுவில் முடித்து விடலாம் என நம்பியே, மார்ச் மாதத்தில் சபைக்கு வந்த இம்மசோதாவின் இரண்டாம் வாசிப்பை நேற்று இடைவேளைக்குப் பின்னர் சபையில் புகுத்தினர்.

எதிர்க் கட்சியினரிடையே திரு. தேமிஸ் போன்ரேரின் உடனடி ஆதரவைப் பெற்றுலும் எட்மண்ட் சமரக்கொடி, வி.ஏ. கந்தையா ஆகியோரின் இடைவிடாத் தாக்குதலைத் திரு. காரியப்பர், சமாளிக்க வேண்டியிருந்தது. எதிர் வரும் வாரத்தில் ஒருநாள் இந்த மசோதாவின் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற திரு. கந்தையாவின் பிரேரணை தோல்வியடைந்த பின்னர், அவர் "இந்த மசோதாவின் இரண்டாம் வாசிப்பை நீதியமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி (ஒரு தமிழ் பேசும் முஸ்லிம்) கொண்டு வருவது விதிசெய்யும் சதியே" எனக் குறிப்பிட்டார்.

திரு. கந்தையா, "தமிழரசுக் கட்சியில் அங்கத்தவராக வந்த, நீதியமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, அப்பதவி கிட்டும் எனத் தெரிந்ததும், எதிர்க்கட்சியில் முதலாவது வரிசையிலிருந்து அரசாங்கக் கட்சியின் முதல் வரிசைக்கு மாறிவிட்டார் இவர் பலமுறை இப்படிக் கர

(15ஆம் பக்கம் பார்க்க)

## பழமையைப் பேணும் பண்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார். இன்றைய கவிஞர்கள் தம்மைக் கம்பன் என்றும் புகழேந்திப் புலவர் என்றும் எண்ணிக் கொள்ளாது தம்மாலான தமிழ்ப்பணியைபடாடோபமின்றிச் செய்ய வேண்டுமெனத் தலைவர் தெரிவித்தார். திருவாளர்கள் க. சச்சிதானந்தன் பி. ஏ., இ. நாகராஜன் (கவியரசன்) இ. அம்பிகைபாகன் (அம்பி) மு. மயில்வாகனம் (மயிலன்) இ. முருகையன் ஆகிய கவிஞர்கள் 'என்வாக்கு' என்பதைப் பொருளாகக் கொண்டு தங்கள் கருத்துக்களைக் கவிதைகளாகப் பொழிந்தனர்.

### ஈழத்தில் இலக்கிய முயற்சி

அடுத்ததாகக் கருத்தரங்கம் நடைபெற்றது. 'ஈழத்து இலக்கிய முயற்சி'யைப்பற்றி வண. டி. ஆர். அம்பலவாணர் எம். ஏ., பி. ஓ. எல் பேசுகையில் கிறிஸ்த மிஷனரிமார் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளை முறையாக எடுத்துரைத்தார். இவ்வுரை எழுத்தாளர்களுக்கு மிகவும் உபயோகமாகவிருந்தது. திரு. கனகசெந்திநாதன் பேசும்போது ஈழவளநாட்டிலே தமிழ் வளர்த்த பெரும் புலவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் உயர்நோக்கு, பண்பாடு, தொண்டு என்பனபற்றி இக்கால எழுத்தாளர் பலர் அறியாதிருப்பது வெட்கத்துக் குரியதெனக் கூறினர். நாவலர் பெருமான் மிக இலகுவான நடையைக் கையாண்டு தமிழ் மரபைப் பேணிக் காத்துவந்தார் எனவும் அவர் தெரிவித்தார். இக்கால எழுத்தாளர்கள் பழைய இலக்கியங்களுடன் தொடர்பு கொண்டு தமது அறிவைப் பெருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினர்.

இதற்கு முன்னதாகத் திரு. செந்திநாதன் எழுத்தாளர்களை இரத்தினச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைத்தார். எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதை ஒரு கலையாக்கிக் கொண்ட அன்னரின் சாதுரியம் அனைவராலும் பாராட்டப் பெற்றது. சங்கச் செயலாளர் திரு. திருநாவுக்கரசர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகரின் இன்னிசைவிருந்துடன் விழா நிறைவேறியது.

# சிறுவர் பகுதி

## டெலிபோன் கண்டுபிடித்த வரலாறு

அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் 1847ஆம் ஆண்டில் ஸ்கொட்லந்திலுள்ள எடின்பரோ நகரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் அங்கு பள்ளிக்கூடம் ஒன்றில் பேச்சுக் கலை ஆசிரியராக இருந்தார். ஊமை, செவிடுகளுக்கான ஒரு பரிபாஷையைக் கண்டுபிடித்தவரும் இவர்தான். தம் தந்தையின் அடிச்சுவடுகளைப்பின்பற்றி அலெக்ஸாண்டர் சத்தம், பேச்சு இவை பற்றிய சாஸ்திரங்களைக் கற்கலானர்.

அமெரிக்காவில் உடலைத்தேற்றிக் கொண்டிருந்த அலெக்ஸாண்டருக்கு பஸ்டன் செவிடர் பள்ளியில் பேச்சு ஆசிரியர் வேலை கிடைத்தது. பள்ளி வேலையைப் பார்த்துக் கொண்டே அவர் பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டார். இவ் ஆராய்ச்சிகளில் ஒன்று "ஹார்மோனிக் டெலிகிராப்" பற்றியது. ஒரே தந்திக் கம்பியின் மூலம் ஒரே சமயத்தில் பல செய்திகள் அனுப்ப உதவுவது இச்சாதனம். அப்பொழுதுபுதிதாகத்தோன்றியிருந்த வெஸ்டேன் யூனியன் டெலிகிராப் கொம்பனியார் இச்சாதனத்தால் நன்மைகள் ஏற்படும் என நம்பினர்.

ஒலியை அறிய உதவும் கவை போன்ற சாதனங்களின் எதிரில் பல ஒலியைக் கிளப்பிஞல் அந்த ஒலி நிறைந்த கவை மட்டுமே அந்த ஒலியை அதிர்ந்து கொடுக்கும் என்பது அலெக்ஸாண்டர் பெல்லுக்குத் தெரியும். பல ஒலியிஞல் ஏற்படும் தனித்தனி மின்சார அலைகளை ஒரே கம்பி மூலம் பாய்ச்சி மறு கோடியில் பல அலை வரிசையில் இயங்கும் மின்சார கவைகளில் அவைகளைத் தனித்தனியே பிரித்துக்கொள்ள முடியாது! எனப்பெல் யோசித்தார்.

தொமஸ் வாட்ஸன் என்ற உதவியாளரோடு "ஹாமோனிக் டெலிகிராப்" என்ற இச்சாதனத்தைப் பற்றிய பல ஆராய்ச்சிகளில் பெல் இறங்கினர். செல்வந்தர்கள் பலர் இப்புதிய கண்டு பிடிப்பில் அக்கறை காட்டத் தொடங்கினர். ஒரே அளவான மின் ஓட்டத்தில் அலை எழுப்பி, புள்ளிக் கோடுகள் மூலம் செய்தி அனுப்பும் மோர்ஸ் சங்கேத முறை தான் தந்தி அனுப்ப பயன்பட்டு வந்துள்ளது. ஆனல் 1874-லிலேயே "ஹாமோனிக் டெலிகிராப்பை" விட இன்னும் அதிசயமான முறை ஒன்றைப்பற்றித் தாம் யோசித்து வருவதாக பெல் தமது தந்தைக்கு எழுதினர். "சப்தம் எழும்போது காற்றின் அடர்த்தி எப்படிப் பாதிக்கப்படுகிறதோ அதேபோல் மின் ஓட்டத்தின் அளவை ஒலியினல் பாதிக்கும் முறை ஒன்றைக் கண்டுபிடித்து விட்டேனனல் கம்பி மூலம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுவது சாத்தியமாகிவிடும்" என்று அவர் எழுதினர். ஜவ்வுடனே அல்லது வளைந்து நெளிந்து கொடுக்கக்கூடிய மெல்லிய தகட்டுடனே இணைந்த உலோகத் துண்டை நம் பேச்சு அதிரச் செய்யும். அந்த அதிர்வை மின்சார அலைகளாக்கி கம்பிமூலம் செலுத்திஞல் அவை சப்த அலைகளாகத் தூரத்திலுள்ள ஒருவருக்குக் கேட்கக்கூடும் என்று அவர் எண்ணினர்.

ஒலியியல் கலையில் தேர்ச்சியடைந்தவராக இருந்தாலும் பெல்லுக்கு மின்சாரத்தைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. தமது தேவைக்குத் தகுந்தாற் போல் போதுமான சக்தி வாய்ந்த மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது. அவரது எதிர்கால மாமனரான ஹார்பார்ட்டும் இதர முதலீட்டுக் காரர்களும் அளித்த தூண்டுதலால் 'ஹார்மோனிக் டெலி கிராப்பை'ச் செம்மைப் படுத்துவதிலேயே ஏறக்குறைய தமது முழு அவகாசத்தையும் செலவழித்தார். 'ஹார்மோனிக் டெலிகிராப்' தங்களுக்குப் பெருத்த செல்வத்தைத் தரும் என்று அவர்கள் எல்லோரும் நம்பினர்கள்.

1875ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் திகதியன்று வாட்சனேடு பெல், ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். தந்தியை அனுப்பும் சாதனம் ஒரு அறையிலும், தந்தியை ஏற்றுக்கொள்ளும் சாதனம் மற்ருெரு அறையிலுமாக இருந்தன. இவைகளிலிருந்து பல நீளங்களில் உலோகத்தாலான மெல்லிய தகடுகள் தொங்கிக் கொண்டிருந்தன. மின்சார அலைகளை அனுப்பவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ இவை உதவுவன. மின்சார மாறுதல்களைத் தகுந்தாற்போல் அதிரும் இவ் வமைப்புத் தான் டெலிபோன் சாதனங்களின் உயிர்நாடி. இத் தகடுகளில் ஒன்று தற்செயலாக அளவுக்கு மீறி முடுக்கப்பட்டிருப்பதைக் கவனித்த வாட்சன் அதைத் தளர்த்த ஆரம்பித்தார். அப்போது அவருடைய அசைவுகளால் மற்றத் தகடுகளும் ஒன்றைப் போல் சலசலக்க ஆரம்பித்தன. அதே சமயத்தில் அடுத்த அறையிலிருந்த பெல்லுக்கு ஏதோ லேசான சலசலப்புக்கேட்டது. அவர் வாட்சன் இருந்த அறைக்கு ஓடிச் சென்று பார்த்த போதுதான், மின்சார ஓட்டம் இல்லையென்று நினைத்த கம்பியில் மின்சார ஓட்டம் இருந்திருக்கிறது என்றும், கெட்டியாக பிடித்துப் போயிருந்த தகடு ஒலி அதிர்ச்சியை ஏற்கும் தகடு போல் இயங்கி அதன்பின்புறத்திருந்த மின்காந்த கருவியின் மூலம் ஒலி அலைகளை மின்சார அலைகளாக்கி அடுத்த அறைக்கு அனுப்பியுள்ளது என்பது தெரியவந்தது.

இந்த அடிப்படையில் ஒரு புதிய சாதனத்தை அன்றிரவே வாட்சன் அமைத்துத் தந்தார். அதன் மூலம் நிச்சயமான பேச்சு சப்தத்தைக் கேட்க முடிகிறது என்பதை அவர்கள் இருவரும் கண்டனர். வியாபார ரீதியில் பயனற்ற ஒரு வெறும் விளையாட்டுக் கருவியோடு காலத்தை விரயமாக்குவதா என்று ஹாபார்ட் கூறியதைக் கூட சட்டை செய்யாமல் பெல் ஒன்பது மாதம் கடுமையாக உழைத்தார். படிப்படியாக அச்சாதனத்தை செம்மைப் படுத்திய பிறகுதான் 1876ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு நாள் "வாட்சன் நீ இங்கு வந்துபோ" என்று தெளிவாகக் கூறி, அடுத்த அறையிலிருந்த வாட்சனை பெல் தம் அறைக்கு அழைக்க முடிந்தது. டெலிபோன் மூலம் முதல் முதலில் பேசப்பட்ட முழு வாக்கியம் அதுதான்.

### உங்களுக்குத் தெரியுமா?

அ. சாந்திகுமார்,
பதிவுஎண்: 480

1. உலகிலே மிகவும் பெரிய வைரச்சுரங்கம் எங்குள்ளது?
2. உலகத்திலே பெரிய நூதனசாலை எங்கிருக்கின்றது?
3. உலகத்திலே எங்கு பெரிய கோபுரம் உள்ளது? அதன் பெயரென்ன?
4. உலகத்திலே பெரிய சிலை எங்குள்ளது? அதன் பெயரென்ன?
5. பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் உள்ள பழைய குடியேற்ற நாடு எது?

### விடை

1. கிம்பர்லி, தென் ஆபிரிக்கா.
2. பிரித்தானிய நூதனசாலை லண்டன்.
3. ஐபெல்(Eiffel) கோபுரம் பாரிஸ்.
4. லிபேர்ட்டி சிலை, நியூ யோர்க்.
5. நியூபவுண்லாந்து.

செல்வச் சிறுவர்களே,

எனது மருமக்கள் சிலர் வெள்ளத்தால் கஷ்டப்பட்டிருப்பதை அறிந்து வருந்துகின்றேன். ஒரு சிலர் தங்கள் வாழை மரங்கள் எல்லாம் சரிந்து வீழ்ந்து விட்டன என்று எழுதியிருக்கின்றனர். வெள்ளத்தில் துள்ளி விளையாடிய மருமக்கள் எழுதியுள்ள கடிதங்களையும் படித்தேன். வெள்ளம் வரமுன்னர் அணை கோல வேண்டுமென்ற உண்மையை எனது மருமக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சின்ன மாமா

### புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

618. ம. பழனியப்பன், அர்ச். மரியநாயகி பாடசாலை, மத்துகாமம்.
619. ந. டேவிட், டச்சு வீதி, உடுவில், சுன்ஞகம்.
620. பி. எஸ். முரளி, 361, முகத்துவாரம், கொழும்பு-15.
621. யோ. யேசு, 102, விகாரை வீதி, மாத்தளை.
622. வே. செ. ந. துரைராசா, அல்வாய் தெற்கு, அல்வாய்.
623. வே. த. சண்முகவேல், அல்வாய் தெற்கு அல்வாய்.
624. எஸ். அப்துல்கபூர், 125, வடகரை வீதி, திருக்கோணமலை.
625. பீ. ரேக் அருளப்பு, 'அரியவில்லா' பீச் ரோட், பருத்தித்துறை.

### 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 12-12-59 க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்பவேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்
(5-12-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.............................................
விலாசம்.............................................
.............................................
.............................................

கையொப்பம்

பெற்றோர் அல்லது ஆசிரியரின் கையொப்பம். வயது..........

இங்கே வெட்டவும்

## உண்மைக் கதைகள்: ஹென்றி மோர்றன் ஸ்டான்லி II



நன்கொடையாளர்: வேலைக்கு அலைந்துதிரிந்த இளைஞன் ரோலன்சுக்கு அதிர்ஷ்டம் கிட்டியது. அவன் ஹென்றி மோர்றன் ஸ்டான்லி என்பவரைச் சந்திக்க நேர்ந்தது. குழந்தைகளில்லாத ஸ்டான்லி ஒரு வியாபாரி. இவருக்கு ரோலன்சில் பற்று ஏற்பட்டது. அவனுக்குத் தனது பெயரையே அளித்து, அவனைத் தமது கடையில் வேலைக்கமர்த்திக் கொண்டார். இதுவரை கிடைக்காத எல்லாச் சந்தர்ப்ப வசதிகளும் இப்பொழுது ஸ்டான்லியாக மாறிவிட்ட ரோலன்சுக்குக் கிடைத்தன.



புது உத்தியோகம்: ஸ்டான்லியின் வளர்ப்புத் தந்தை இறந்ததும், கடையும் மூடப்பட்டுவிட்டது. ஆகவே, ஸ்டான்லி ஒரு புது உத்தியோகம் தேட வேண்டியதாயிற்று. ஸ்டான்லிக்குச் சிறு வயதிலிருந்தே பத்திரிகைத் தொழில் மீது ஆர்வம் இருந்தது. இந்த ஆர்வத்தினல் தூண்டப்பட்டு, பல பத்திரிகைகளுக்கும் நிருபராக அவன் பணிபுரியத் தொடங்கினன். முதலில், அவனுடைய எழுத்துக்கள் பாராட்டத் தகுந்த முறையில் இல்லாதபோதும், விடாமுயற்சியும், அனுபவமும் அவனை நல்லவொரு பத்திரிகையாளனாக்கின.



உலக நிருபர்: ஐக்கிய அமெரிக்காவில் வெற்றிகரமானவொரு நிருபராகப் பணியாற்றிய ஸ்டான்லி, உலக நிருபராக விளங்க விரும்பினர். 1869-ஆம் ஆண்டில், நியூயோர்க்கிலுள்ள "நியூயோர்க் ஹெரல்ட்" என்ற பத்திரிகையின் அதிபரிடம் சென்று, தன்னை அதன் உலக நிருபராக்குமாறு வேண்டினர். அவரும் அப்படியே செய்தார். அத்துடன், அபிஸீனியாவில் பிரிட்டிஷ் பட்டாளத்தின் நடவடிக்கைகளைப் பற்றி எழுதியனுப்பும்படி ஸ்டான்லியை அங்கு அனுப்பியும் வைத்தார்.

(தொடரும்)

# நாடற்றவனும் நாயும்

(ஆங்கில மூலம்: ஸி. வி. வேலுப்பிள்ளை — தமிழாக்கம்: வி. என். பி.)

மெய்யனுக்கு அன்று வேலைகள் எல்லாம் சட்புட்டென்று முடிந்துவிட்டன. சல்லடை காம்பராவில் அவன் வேலை செய்யும் கடைசி நாள் அது. இனிமேல் இங்கிருந்து போய்விட வேண்டியதுதான் — திரும்புவதில்லை. அதை நினைக்கவும் முடியவில்லை. சல்லடைக் காம்பராவிலுள்ள சக்கரங்கள் அவனது வாழ்க்கையில் பத்து வருடங்களைச் சுழற்றிவிட்டன. காம்பரா வாயில் கதவிலுள்ள கைப்பிடி அவன் கை பட்டுப் பட்டுத் தேய்ந்து போய்விட்டது. பதின் மூன்ருவது வயதில் சல்லடைக் காம்பராவுக்குள் நுழைந்தவன். அன்று முதல் இன்று வரை அதுவே அவனுடைய உலகம், வேலையே அவன் வாழ்க்கை.

மூன்று மாதங்களுக்கு முன்பு, அவன் மதுரைக்கு யாத்திரை புறப்படும் சமயம் அந்த சூழ்நிலை முழுவதும் அவனது நரம்புகளை உரித்துப் பிய்த்தன. கடகடவென்று உருளும் சக்கரங்களின் இடைவிடாத ஏகநாதம் அவன் மனத்தை சோர்வடையச் செய்தது. 'இன்னும் உழை, இன்னும் வியர்வை சிந்து' என்று அவை சதா நச்சரித்துக் கொண்டிருந்தன. ஆனல் இன்று அவற்றின் அசைவில் ஒரு வித தாளக் கட்டுப்பாடு இருந்தது. அவனுடைய இருதயத் துடிப்புடன் ஒன்றி அவையும் கும்மாளம் போட்டன. ஆண்களும் பெண்களும் ஒவ்வொருவராகப் போய்ச் சேரும்வரை மெய்யன் மயிந்தி மயிந்தி நின்ருன் — ஒரு கடைசிப் பார்வைக்காக.

வரண்ட ஒளியற்ற அந்த சல்லடைக் காம்பரா திடீரென்று உயிர்ப்புற்றது. புத்தம் புதிய தேயிலைத் தூளின் நறுமணம், மௌனமாகக் கிடக்கும் சக்தி வாய்ந்த அந்த சக்கரங்கள்— இவையெல்லாம் அவன் மனத்தில் வர்ணிக்க முடியாத ஓர் உணர்ச்சியை எழுப்பின. சல்லடை தேயிலையை அரிக்கும் போது உண்டாகும் 'டக், டக், டக்' என்ற ஓசையும், சுழலும் சக்கரங்களின் குமுறலும் பத்து வருடங்களாக அவன் செவிகளில் லயித்திருந்தன.

"நாளை இன்னெருவன் இந்த இடத்துக்கு வரப்போகிருன். என்ருலும் ஒன்றும் நடவாததுபோல வழக்கமான வேலைகள் நடக்கும். எல்லாம் அது அதுக்குரிய இடத்தில் இருக்கும். நான் மட்டிலும் இருக்க மாட்டேன். வாழ்க்கைச் சுழலின் விசித்திரம்தான் என்ன? ஆமா, பார்க்கப் போனல் யார்தான் இவ்வுலகத்தில் இன்றியமையாதவர்கள்"—இவ்வாறு எண்ணமிட்டான் மெய்யன்.

பழைய சம்பவங்கள் திரைப் படம்போல் அவன் மனக்கண் முன்பு ஓடின. பிரயாணப் பத்திரங்களை எடுப்பதற்குத் தான் கொழும்புக்குப் போனதை நினைவுபடுத்தினன். இமிகிரேஷன் ஆபிஸில் 'விசாரணைகள்' என்ற போட் பலகையின் கீழிருந்த அதிகாரி – ஆம், எருமை மாட்டைப்போல தடித்த கழுத்துள்ள ஒரு குட்டையான மனிதன். அவன் கண்களில் அனல் வீசியது. வலையில் சிக்கிய வனவிலங்கு போலக்காணப்பட்டான். டி.ஆர்.பியைப்புதுப்பிக்க தான் இரண்டாம் முறையும் இந்த மனிதன் முன் பத்திரங்களை நீட்டியது ஞாபகம் வந்தது. அங்கு வந்த எல்லோரும் அவனுடைய கோரப்பார்வையைக் கண்டு கதி கலங்கினர்.

சிறிது நேரம் பொறுத்து, "ஏய், உன்னுடைய டி. ஆர். பியைப் புதுப்பிக்க முடியாது. போ வெளியே" என்று தடிக் கழுத்து உறுமியது.

"சாமி, நான் மதுரைக்கு சாமி கும்பிடத்தானே போனேன். நான் இங்கேயே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன், சாமி" என்று மெய்யன் குளறினன்.

"ஆமா, எல்லாப் பிச்சைக்காரப் பயலும் இப்போ இலங்கையனப் போய்விட்டான். இங்கே ஒன்றும் செய்வதற்கில்லாவிட்டால் வீட்டிலே போய்க் கிட, போ"

"சீ, என்ன மனிதன் இந்த ஆள்! வீட்டிலே போய்க் கிடக்கட்டாமெல்லே! இவர்கள் ஏன் இப்படி முரடர்களாய் இருக்கிருர்கள்? பிரஜா உரிமை அதிகாரியும் இப்படித்தான் நடந்து கொண்டான். என் அம்மா அப்பாவைக் கல்யாணம் செய்தவளா என்றல்லவா கேட்கிருன்! என்ன கொடுமை". சிந்தித்த படியே மெய்யன் அவ்விடத்தை விட்டு அகன்ருன்.

படம் மாறியது. அன்பு விஞ்சும் அருமைத்தாயாரின் நினைவு வந்தது. சோகப் புன்னகையும், நீர் ததும்பும் கண்களும். தாங்க முடியாத ஒரு வலி அவன் நெஞ்சத்தைப் பிளந்தது. அவள் இவ்வுலக வாழ்வை நீத்த நாள். கண்கள் வரண்டு போகும் வரை விக்கி விக்கி அழுதான். யமனேடு போராடிக் கொண்டிருக்கும் சமயத்திலும்கூட அவள் சொன்னள், வழக்கம்போல:

"மெய்யா, என் மகனே, என்னைப்பற்றி வருந்தாதேயடா! உனக்கு இன்னும் எவ்வளவோ ஆயுசு இருக்கு. என்னை நினைத்து நினைத்து அதை வீணுக்காதே! நான் எப்போதும் உன்னேடு கூடவே இருப்பேன்......... உடம்பைக் கவனித்துக்கொள். அத்துடன் உன் அப்பன் கொண்டு வந்த அந்த நாய்க்குட்டி—சூட்டி. அதையும் மறந்திடாதே!"

அந்நாளில் சூட்டி குதித்தோடித் திரியும் அழகான நாய். 'கொழு கொழு' வென்றிருந்த அதன் உடம்பில் மென்மையான கம்பளம் போல் உரோமம் வளர்ந்திருந்தது. காதுகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு அது அவனை வரவேற்கும்போது வால் மட்டுமா ஆடும்! பிற்பகுதி முழுவதுமே ஆடும். மறக்க முடியாதது அந்த இன்பக் காட்சி. தாய் இறந்த பின் சூட்டிதான் மெய்யனின் உயிர்த்துணை. அறுந்துபோன வீணை நரம்புகளில் எஞ்சிக் கிடக்கும் ஒரு துண்டு. தாயாரின் கடைசிப் பரிசு.

## சிறு கதை

இன்று, தன் வீட்டையும், மாமனையும் மாமியையும்—எல்லாவற்றிற்கும் மேலாக அந்த நாயையும்—விட்டுப் போவதை நினைக்க அவன் மனம் கிறுகிறுத்தது. இடிந்து நொருங்கிய மண்குடிசை போலிருந்தது அவன் உள்ளம். மாமிக்கு அந்த நாயென்ருல் பிடிப்பதில்லை. எனவே அதை ஸ்டோர் காவற்காரனிடம் கொடுத்து விடுவதென்று முடிவு செய்தான். ராமன் நாயைக் கேட்கிருன் என்று மெய்யன் தன் மாமியாரிடம் ஜாடையாகத் தெரிவித்த போது அவள் ஆட்சேபிக்கவேயில்லை. மௌனமாக ஆமோதிக்கவும் செய்தாள். இந்த மனப்பான்மை அவனுக்கு மேலும் ஆத்திரத்தையும் துக்கத்தையும் அளித்தது.

மெய்யன் வீடு திரும்பிய போது அவனுடைய பிரயாணத்துக்கு எல்லாம் தயாராயிருந்தன. அவனுடைய சாமான்கள் எல்லாவற்றையும் திரட்டிக் கட்டி அறையின் ஒரு மூலையில் வைத்திருந்தாள் மாமியார். வழக்கத்திலேயே அதிகம் பேசாத மெய்யனுக்கு அன்று நாவும் கிட்டிப்போய்விட்டது.

மாமனர் சொன்னர், "மெய்யன்! சஞ்சலப்படாதே! நாம் என்ன செய்ய முடியும்? வேறு வழியில்லை......... உன்னுடைய அப்பாட்டன் காலத்திலேயே நாங்கள் கிராமத்திலிருந்து புறப்பட்டு விட்டோம். இன்னும் யாராவது ஒரு எட்டிய உறவினர் இருக்கக் கூடும்— யார் கண்டார்கள்? ஆண்டவனை மறந்து விடாதே, ஏழைகளுக்கு அவன் ஒருவன் தான் துணை... பணத்தையும் பெர்மிட்டையும் கவனமாக வைத்துக்கொள்..."

"சரி, மாமா! சரி, மாமா!" இவ்விரு வார்த்தைகளிலும் தான் சொல்லப்போவதெல்லாம் அடங்கிவிட்டது போல் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான் மெய்யன்.

* * *

புறப்படும் நேரம் கிட்டியதும் துணிப்பொட்டணியை தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, சூட்டியை கக்கத்தில் இடுக்கி, மௌனமாக பிரியாவிடை பெற்ருன். ஸ்ரோர் காவற்காரனின் வீட்டை நோக்கி அவன் வயல்களுக்கூடாக நடந்து சென்றபோது, லயத்திலுள்ள தொழிலாளர்கள் அவனுடைய நிர்ப்பந்தமான புறப்பாட்டைப் பற்றியே பேசிக்கொண்டனர். அவனை எங்கேயோ கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்வதாக அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள்.

சூட்டி மெய்யனின் தோளோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அடிக்கடி அவனுடைய சொக்கையை மோந்து நக்கிப் பார்த்துக் கொள்ளும். அதுவே தாங்களிருவரும் ஒன்ருகச் செல்லும் கடைசிப் பிரயாணம் என்று அதுக்கெப்படித் தெரியும்? நாய்களுக்கு பிரஜாஉரிமை சட்டம் இல்லையா என்று மெய்யன் யோசித்தான். ஏதோ ஒரு வகை பத்திரங்களும் தஸ்தாவேஜுகளும் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் நாய்களின் உயிர்களுக்குமல்லவா ஆபத்து வந்து விடும்! கடவுளே என்று சூட்டிக்கு அப்படி ஒன்றும் நேர்ந்து விடப்படாது!

மெய்யனின் வரவை எதிர்பார்த்து நின்ருன் ராமன். அதிகம் பேசுவதற்கு நேரமில்லை. அடுக்களைக்குப் பின்னலிருந்த ஒரு சிறிய அறையைச் சுட்டிக் காட்டி, "அந்த அறைக்குள் பூட்டி வைத்திருக்கிறேன் சூட்டியை. நாள் போகப் போக அது என்னேடு பழகிவிடும். அதைப் பற்றி ஒன்றுமே கவலைப்பட வேண்டியதில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்," என்ருன் ராமன்.

ஆம் என்று தலையசைத்து விட்டு மெய்யன் கதவண்டை நெருங்கினன். சூட்டி அவனை இறுக அணைத்துப் பிடித்தது. தரையில் அதை இறக்கி விட்டு விட்டு அறைக்குள் கூப்பிட்டான். அது மறுத்தது. கெஞ்சி அழைத்துப்பார்த்தான். சூட்டி அசையவேயில்லை. முன்னங்கால் இரண்டிலும் பிடித்திழுத்தான். அடி விழப் போகிறதோ என்று நினைத்து சூட்டி அவனைப் பரிதாபமாகப் பார்த்தது. சட்டென்று அதைத் தூக்கிக் கொண்டு போய் அறைக்குள் விட்டுவிட்டு கதவைப்படீரென்று சாத்திவிட்டான். பாவம், சூட்டி முன்னங்கால்களால் கதவைப் பிராண்டியபடியே ஊளையிட்டது. இருவரும் மௌனமாக ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தனர். மாலை மங்கி இரவுட் கலந்து கொண்டிருந்தது. சூட்டியின் ஊளைச்சத்தம், குழந்தையின் அழுகுரல் போல், இருட்டில் மிதந்துவந்து மறைந்தது. அந்தக் குரல் அவனுடைய தாயார் துயிலுறும் இடுகாட்டிலிருந்து எழும் குரல் போலிருந்தது மெய்யனுக்கு. ஆமாம், தேயிலைச் செடிக்கடியில் அவளும் மண்ணேடு மண்ணயல்லவா கிடக்கிருள்?

ரயில்வே ஸ்டேஷனில் எப்போதும் போல ஏக தடபுடலாயிருந்தது. மெய்யன் டிக்கட் ஜன்னலண்டை போய் திருச்சி ஜங்சனுக்கு டிக்கட் வாங்கினன்.

கடைசி மணி அடித்தது.

"உள்ளே போ! ஒன்றுக்கும் கவலைப்படாதே!" என்ருன் ராமன். மெய்யன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். அப்பொழுதுதான் வண்டியும் வந்துநின்றது. ஆண்களும், பெண்களுமாக ஏராளமான சனங்கள் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். தோட்டக்காட்டுப் பெண்கள் சிலர் விம்மி அழுதார்கள். மெய்யனுக்காக அழுவதற்கு யாரும் அங்கில்லை. பெட்டிக்குள் ஏறி ஓர் பெண்ணுக்கருகில் உட்கார்ந்து கொண்டான். எதையும் கவனிப்பதற்கு அவனுடைய மூளை சரியாயிருந்தால் தானே! ரயில் வண்டி கீச்சிட்டுவிட்டு உருண்டு நகர்ந்தது. ராமன் வெளியே கையை மோவாய்க் கட்டையில் வைத்தபடி பார்த்துக் கொண்டு நின்ருன். 'தகிடு தொம், தகிடு தொம்' என்று தாளம் போட்டுக் கொண்டே ரயில் வண்டி தன் வேகத்தை அதிகரித்தது. மெய்யனை சித்திரவதை செய்வது போலிருந்தது- இந்த சக்கரங்களின் ஓசை. அவன் சீவியம் முழு

(13ஆம் பக்கம் பார்க்க)

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாப நிதி
— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை
மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த கால்முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.

## அரசியல் அதிர்ச்சியால் ஏற்படும் மாறுதல்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குரேவ்ற் சுருக்கமாகக் கூறுவதுபோல் நமது எதிர் காலத் தொழிலமைப்புக்கு வேண்டிய நுட்பத் தொழிற் கல்வியையே இளைஞர்களுக்கு ஊட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். இத் துறையில் நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நமக்கென ஒரு பல்கலைக் கழகமும், சில நுட்பத் தொழில் கல்லூரிகளும் தேவைப்படுகின்றன. இத்தேவைகளை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.

(தொடரும்.)

## நாடற்றவனும் நாயும்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதையுமேசக்கரங்கள் அல்லவா வியாபித்திருந்தன. ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி ஸ்டோரில் விளக்கெரிவதைக் கண்டான். அந்த விளக்கொளி, ரயில்வே ஸ்டேஷனில் அந்தப் பெண்களின் ஓலம், குட்டியின் பரிதாபமான அழுகை - எல்லாம் சேர்ந்து அவன் மூளையை சம்மட்டியால் அடித்தன. திடீரென்று இமிகிரேஷன் ஆபிஸில் கண்ட அந்த தடிக்கழுத்து இருளில் தோன்றியது.

"யாத்திரையாகத்தான் இந்தியாவுக்குப் போனேன் என்று உண்மையைச் சொன்னேன். மனிதன் நம்பவில்லை. இதுதான் எல்லாவற்றையும் விடப் பெரிய இறுதி யாத்திரை." வண்டி ஓடிக்கொண்டேயிருந்தது. வானில் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டின. இதற்கு முன் அவன் ஒரு நாளாவது நட்சத்திரங்களைப்பார்க்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இன்றைக்கு என்னவோ அவற்றைப் பார்க்க வேண்டுமென்ற ஓர் ஆசை பிறந்து விட்டது. குட்டியின் ஊளைக் குரல் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் எதிரொலித்து, அவனுடைய நெஞ்சில் வந்து ஒடுங்குவது போலிருந்தது.

அந்த இளம் பெண் கொஞ்சம் கொஞ்சமாகக் கிட்ட நெருங்கி வந்து விட்டாள். அந்த உஷ்ணமான ஸ்பரிசம் இன்ப போதையை அளித்தது. ஆனல் ஒரு கணம்தான். அடுத்த கணம வேறு நினைவுகள்: சல்லடை, காம்பரா, சுழலும் சக்கரங்கள்...ரயில் வண்டி வேகமாகச் சென்றது.

* * * *

அடுத்த நாள் காலை ஈரச் சேற்றை உடம்பு முழுவதும் பூசிக் கொண்டு குட்டி பழைய வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அதைக் கண்டவுடன் மாமி கூச்சலிட்டாள்.

"இந்த நாசமாய்ப் போன நாய் மறுபடியும் வந்திட்டுதே!" குட்டி ஒரு தரம் வீட்டைச் சுற்றி ஓடி வந்து அவள் மேல் தொங்கிப் பாய்ந்தது.

"சீ, போ, நாயே" என்று கத்தினள் மாமியார். குட்டி விருந்தைப் பக்கம் வழக்கமாகத் தான் படுக்கும் மூலையைத் தேடியது. அங்கே கோழிக் கூடு வைக்கப்பட்டிருந்தது!

"போ வெளியே, பிசாசு!" மீண்டும் கத்தினள் மாமியார். குட்டி கோழிக் கூட்டுக்கு வெளியே நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டு மெய்யனின் வருகையை எதிர்பார்த்திருந்தது. அவன் வந்தால் தானே! அதற்கொன்றும் விளங்கவில்லை.

காலை மாறி மத்தியானம் வந்தது. ஸ்டோரிலும் தோட்டத்திலும் வேலை செய்தவர்கள் பகற் போசனத்திற்கு வந்தார்கள். குட்டி தெருவைப் பார்த்தபடியே குந்திக் கொண்டிருந்தது. மெய்யனின் மாமனுர் வந்தார். அது ஓடிப் போய் அவருடைய கால் விரல்களை மோந்து பார்த்து வாலை ஆட்டியது. அந்த மனிதர் உணர்ச்சி வசப்பட்டவராய் தூரத்து மலைகளைப் பார்த்த வண்ணம் நின்ருர். நாய் ஊளையிட்டுக் கொண்டே அவருடைய முகத்தை அன்புடன் நோக்கியது.........

பொழுது சாய்ந்து இருள் சூழ ஆரம்பித்தது. குட்டி அந்த இடத்தை விட்டு அகலவில்லை. கண்களைத் தெருவில் பதித்தபடியே இருந்து விட்டது......

## வவுனியா இடைத் தேர்தல்

### நால்வர் போட்டியிடுகின்றனர்

வன்னி நாடு வளம் மிகுந்த நாடு. அங்கு வயல்கள் செழிப்பாக இருக்கும்; மரங்கள் பச்சையாக விளங்கும். வணிகத்துக்கும் வன்னி நாடு பெயர் போனது. காடும் நாடும், கிராமமும் நகரமும், சிங்களவனும் தமிழனும் ஒன்று சேரும் இடம் வவுனியா என்று சொல்லிவிடலாம்.

திரு. சுந்தரலிங்கம் இடைத் தேர்தலில் போட்டியிட முன் வரவில்லை. ஆனலும், பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக அவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை நான்கு அபேட்சகர்கள் தாக்கல் செய்துள்ளனர். திரு. பி. முத்தையா, வன்னி நாட்டு வாலிப விவசாயிகள் முன்னணி சார்பில் போட்டியிடுகின்ருர். இவருக்குக் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு இருக்கின்றதென இங்கு பொதுவாக நம்பப்படுகிறது. இவருடைய சின்னம் வண்டிச் சக்கரம்.

டக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகிருர். அவருடைய சின்னம் வீடு.

திரு. டபிள்யூ. பி. சிற்றம்பலம், எல். எஸ். எஸ். பி நிறுத்தியிருக்கும் அபேட்சகர். இவருடைய சின்னம் திறப்பு.

இன்றைய அரசியல்வானிலே அதிகமாகத் தோன்றும் நட்சத்திரங்கள் சுயேச்சையாளரே. வவுனியா இடைத் தேர்தலிலும் ஒருவர் இருக்கத்தான் செய்கிருர். அவர் தான் திரு. ஸி. சிவசிதம்பரம். இவருடைய தேர்தல் சின்னம் மரமாகும்.

## உலகில் சிறிய அணு உலை

செயற்கைக் கிரகங்களுக்கு மின்சார சக்தியை அளிக்கக் கூடிய உலகிலேயே மிகச் சிறிய அணு உலை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளதாக அணுசக்தி கொமிஷனர் ஜோன் ஏ. மக்கோன் தெரிவித்துள்ளார்.

5 கலன் எண்ணெய் கொள்ளக்கூடிய பாத்திரத்தின் பருமனை இந்த அணு உலை 220ருத்தல் எடையுள்ளது. இது மூன்று கில்லோவாட் அளவில் ஒருவருடத்திற்குத்தேவையான சத்தியை அளிக்கும். "ஸினப் 2" எனப்படும் இந்த அணுசக்தி உலை வானவெளி கப்பல்கள் பூமிக்குச் செய்தி அனுப்பும் "டிரான்ஸ்மிட்டர்" கருவி இயங்குவதற்குத் தேவையான மின்சார சக்தியைக் கொடுக்கும்.


நான் விரும்புவது


நெஸ்டோமோல்ட்

ஏனெனில்

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்.

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட், த. பெ. 189 கொழும்பு.

மெக்கானிக்குகள் குழந்தைகள், வாலிப வயதினர் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத்தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

சினிமா உலகம்

# சிவாஜிகணேசனுக்கு அன்பு முத்தங்கள் !

## கொழும்பில் அவர் மறக்க முடியாத அனுபவம்

"கொழும்பு கெயிட்டி தியேட்டரில் என் முகத்திலே பல அன்னைமார்களும் குழந்தைகளும் அன்பு முத்தங்களைச் சொரிந்தனர். ஓர் அன்னை வந்து மனமார ஆசி கூறினர்கள். நீடூழி வாழ்ந்து கலைப் பணி செய்ய வேண்டுமென்று வாழ்த்தினர்கள். இவை எல்லாம் என்னல் என்றுமே மறக்க முடியாது"



இவ்வாறு நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இலங்கை வானொலியைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி அவரைப் பேட்டி கண்டு, "கொழும்பு விஜயத்தின் போது நீங்கள் மறக்க முடியாத அனுபவம் என்ன?" என்று கேட்டதற்குப் பதிலளித்தார்.

"இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நல்லுறவு ஏற்பட, மற்றவர்களை விட கலைஞர்களாற்தான் அதிக பணி செய்ய முடியும். நான் இனி அடிக்கடி இலங்கை வருவேன். கலைவாணர் என். எஸ். கே. இங்கு விட்டுப்போன பணிகளை நான் இனி வந்து தொடர்ந்து செய்வேன்" என்று கூறி "ஈழநாட்டு அன்பர்களை என்றுமே மறக்க முடியாது — ஆம் — மறக்கவே முடியாது—வணக்கம்—ஐயா—வணக்கம்" என்று விடை பெற்ருர்.

எல்பின்ஸ்டனிலும், கெயிட்டியிலும் அவரைக்காண பெருந் திரளான கூட்டம். ஏராளமான சிங்கள மக்களும் வந்திருந்தார்கள்.

வீரபாண்டிய கட்ட பொம்மன், தமிழ் நாட்டில் வசித்து, தமிழராகவே வாழ்ந்ததால், அவர் தமிழர் என்பதே தமது கருத்தென்றும், தமிழரென்று அவரை ஏன் கொள்ளக்கூடாதென்பதற்குக் காரணம் தெரியவில்லை என்றும், சிலர் அரசியல் நோக்கத்துடனும், வேறு காரணங்களுக்காகவும் இதுபற்றிய கிளர்ச்சிகளைக் கிளப்பியிருக்கக்கூடுமென்றும் மற்ருேர் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.


## யாழ்ப்பாண சகோதரிகளின் பரத நாட்டியம்

நீலா, தயா, ஈஷா இம்மூன்று "யாழ்ப்பாண சகோதரிக"ளின் நடனம், கொழும்பு லயனல் வென்ற் தியேட்டரில் சென்ற ஞாயிறன்று மீண்டும் வெற்றிகரமாக நடைபெற்றது.

கலையின் உயர்ந்த இலட்சியம், "மக்களை தெய்வீக இன்பத்தில் சேர்ப்பதுதான். அந்த வகையில் இந்த நடனங்கள் பெரிதும் உதவியுள்ளன. தியேட்டரில் யாரும் புகைக்கவோ, 'பாரி'ல் குடிக்கவோ செய்யாதது குறிப்பிடத்தக்கது. சிறப்பாக கிருஷ்ணன் கோபியருடன் பிருந்தாவனத்தில் நடனமாடிய காட்சி, ரவிவர்மா படமே உயிர்பெற்று வந்ததுபோல் இருந்தது.

இக்கோஷ்டியினர் இம்மாதம் சென்னை சென்று இந்திய நுண்கலை ஸ்தாபனம், தமிழிசை மகாநாடு, மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ், சென்னை சங்கீத வித்வ சபை முதலிய இடங்களில் நடனக் கச்சேரிகள் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. திரு. சத்யலிங்கத்தின் உயரிய நட்டுவாங்கத்தில் நடைபெறும் இக்கோஷ்டியுடன் அவரது தகப்பனுரான வவனியா முன்னுள் பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கமும் இந்தியா செல்வாரெனத் தெரிகிறது.

—சித்ரா



இக்காரிகையின் இப்பார்வையின் நோக்கு எக்காளையைக் கவர்வதற்கோ? டிசம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் சினிமாஸ் தாபனத்தாரின் தியேட்டர்களில் காட்சியளிக்கும் **"பெற்ற மகனை விற்ற அன்னை"** என்னும் படத்தில், விஜயகுமாரியின் ஓர் அழகிய தோற்றம்.

## நாடகமும் சினிமாவும்

### 'சிவகெங்கைச் சீமை' புகழ் முஸ்தபாவின் கருத்து

"நாடகம் ஒரு பல்கலைக் கழகம். முயற்சியும் ஆர்வமும் உள்ளவர்கள்தாம் இதிற் தேர்ச்சி பெறமுடியும். சினிமாவில் நடிப்பதைவிட நாடகத்தில் நடிக்கத்தான் திறமையும் தகுதியும் அதிகம் தேவை. சினிமாவில் சில பாகங்களில் நடிப்பு சோபிக்கவில்லை என்ருலோ, அல்லது நடிப்பில் ஏதாவது குறை ஏற்பட்டுவிட்டாலோ கத்தரிக்கோல் உபயோகப்படுத்தி மீண்டும் நடித்துச் சரிப்படுத்திக் கொள்ளலாம். ஆனல் நாடகத்தில் குறை ஏற்பட்டுவிட்டால் குறையாகவேதான் போய்விடும். மறுநாள் நாடகத்தில்தான் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே, சினிமாவைவிட, நாடகத்திற்கு அதிக கவனமும் திறமையும் வேண்டும்." என்று கொழும்பு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மண்டபத்தில், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரக் கூட்டத்தில் கலைஞர் எம். கே. முஸ்தபா அவர்கள் கூறினர்.

மேலும் திரு. முஸ்தபா அவர்கள் பேசும்போது கூறியதாவது: இலங்கையில் உள்ள படாதிபதிகளும் சினிமா படப்பிடிப்புக்காக இப்பொழுது சென்னைக்கே வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களும் முயற்சிசெய்தால் இங்கேயே நல்ல ஸ்டூடியோக்கள் அமைத்துச் சிங்களப் படங்களுடன் தமிழ்ப்படங்களும் எடுக்கலாம். சென்னையில் நல்ல காட்சிகள் எடுக்க ஊட்டி, நீலகிரி, குற்ருலம் போன்ற சில இடங்கள்தான் இருக்கின்றன. ஆனல் இலங்கையெங்கணுமே சிறந்த காட்சிகளாகத்தானிருக்கின்றன. ஆகையால் நல்ல காட்சிகளுக்காக இலங்கைப் படாதிபதிகள் கஷ்டப்பட வேண்டியதில்லை. சென்னையில் எடுக்கப்பட்ட படங்களும் இங்கு காட்டப்பட்டு வெற்றிபெறுவது போல் இங்கு எடுக்கப்படும் படங்களும் தமிழ்நாடெங்கும் காட்டப்பட்டு வெற்றிபெற முடியும்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் நெடுங்காலமாகவே தமிழர்களால் போற்றி வள்ர்க்கப்பட்டு வந்ததென்ருலும், சென்ற நூற்ருண்டின் இறுதியில்தான் நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவரது சிறந்த சேவையால் நாடகம் ஒரு புது வேகத்தையும் புதிய பாதையையும் காண முடிந்தது. கூத்து என்று கூறப்பட்டுவந்த நாடகம் மேடை ஏறியவுடன் புதுப் பொலிவுடன் விளங்க ஆரம்பித்தது. திருப்பெருந்திரு சங்கரதாசர் போன்ற நாடக ஆசிரியர்களும் தக்க தருணத்தில் நற்பணியாற்றி நாடகத்தை ஓர் ஒப்பற்ற கலையாக மாற்றினர். அத்தகைய சிறப்புமிக்க கலை வளர எம். ஜி. ஆர். மன்றம் போன்ற பல மன்றங்கள் பணியாற்றவேண்டும்.

## சுதர்ஸனம் பிக்சர்சாரின் அடுத்த படம்

"அவள் யார்" படத்தைத் தயாரித்தளித்த சுதர்ஸனம் பிக்சர்ஸாரின் அடுத்த படம் ஒரு ஹாஸ்யப் படமாகவிருக்கும். இப்படத்தின் பிரதம பாகங்களை ஜெமினி கணேசனும், பி. சரோஜாதேவியும் ஏற்று நடிக்கிருர்கள். இப்படத்துக்கான திரைக்கதை வசனத்தை வே. லட்சுமணன் எழுதுவார்.

## எல்லாம் அவன் செயல்

"எல்லாம் அவன் செயல்" என்னும் படத்தைத் திரையிடுவதற்கான ஏற்பாடுகளை ஜனதா ஸினி கோர்ப்பரேஷன்ஸார் செய்து வருகின்றனர். மூன்று வருடங்களுக்குமுன் இப்படம் தணிக்கை செய்யப்பட்டிருந்தது. இப்படத்தில் குமரேசன், ஏழுமலை, கிருஷ்ணகுமாரி, பாக்கியம் ஆகியவர்கள் நடிக்கின்றனர்.

வெகுவிரைவில் திரையிடப்படும்!
சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)
லிபர்ட்டி (பதுளை) ஜோதி (திருக்கோணமலை)
ஏ. நாகேஸ்வரராவ் -- ஜமுனு
நடித்த
கண் நிறைந்த கணவன்



அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் திரையிடப்படுகிறது!
சென்ட்ரல் (கொழும்பு)
எம். ஜி. ராமச்சந்திரன்
அஞ்சலிதேவி
வீரப்பா
காலஞ்சென்ற
என். எஸ். கிருஷ்ணன்
என். எஸ். கே. மதுரம்
கே. ஏ. தங்கவேலு
முத்துலெட்சுமி
நடித்த
சக்கரவர்த்தி திருமகள்
(புதிய கொப்பி)

[வி]ளையாட்டுப் பகுதி


# புதிய அகில இலங்கைச் சாதனை

## யாழ்ப்பாண விளையாட்டு வீரரின் வெற்றி

பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் சென்ற சனிக்கிழமை இராணுவ சேவைகளின் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இலங்கை விமானப்படையைச் சேர்ந்த கோப்பெறல் என். பாலசுப்பிரமணியம் அன்று கெந்தி அடி வைத்துப் பாய்தல் நிகழ்ச்சியில் 48 அடி 1/2 அங்குலத் தூரத்தைத் தாண்டி அகில இலங்கை தேசிய விளையாட்டுச் சாதனையொன்றை நிலைநாட்டியிருக்கிறார்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். மாணவராயிருந்த காலத்தில் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக விளங்கினார். 1955-ல் உதைபந்தாட்டவெற்றிவீரராக வெற்றி பெற்ற இந்துக் கல்லூரிக் கோஷ்டியின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1958, 1959-ஆம் ஆண்டுத் தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும் கெந்தி அடிவைத்துப் பாய்தல் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்றிருக்கிறார். 1957-இல் 45 அடி 9 அங்குலத் தூரத்தைப் பாய்ந்து இவர் நிலைநாட்டிய யாழ்ப்பாண சாதனை இன்னும் நிலைத்திருக்கிறது. இராணுவ சேவை விளையாட்டுப் போட்டிகளிலும், விமானப்படை விளையாட்டுப் போட்டிகளிலும் கெந்தி அடி வைத்துப் பாய்தல் நிகழ்ச்சியில் புதிய சாதனை



களை நிலைநாட்டியிருக்கிறார். 1958 பெப்ரவரியில் பங்களூரில் நடைபெற்ற முக்கோண விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட விளையாட்டு வீரர்களுள் பாலசுப்பிரமணியமும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிரமமான பயிற்சியும், விடா முயற்சியும் கெந்தி அடி வைத்துப் பாய்தலில் இவரை வெகு தூரம் கொண்டு செல்லுமென நம்ப இடமிருக்கிறது.

## யாழ்ப்பாணத்தில் அரசாங்க சேவைகள் உதைபந்தாட்டக் கோஷ்டியினர் விளையாடுவர்

அரசாங்க சேவைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தின் பிரதிநிதிகள் இம்மாதம் 12, 13 ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இரு உதைபந்தாட்டப் போட்டிகளிற் கலந்துகொள்வார்கள். அக்கோஷ்டியில் பின்வருவோர் பங்குபற்றுவர்: எஸ். யோகராஜா (தலைவர்), பி. லொயிட் பெர்னாண்டோ, கே. பி. புசெல்லா, எம். நவரத்தினம், எம். ஏ. மீடின், துராங் பெரேரா, எல். எல். பி. சிங்கோ, ஆர். அலுவிகார, எஸ். இக்னேஷஸ், கே. நடராஜா, பி. எஸ். சவ்ராஜ், கே. ஏ. பிரேமதாஸா, ஏ. எச். ஏ. ஹுசெயின், ஏ. ஈ. நவரத்தினராஜா, டபிள்யு. எஸ். பொறேயூ, எஸ். கந்தசாமி, எஸ். குருசுவாமி, ஏ. எல். எம். நுவெயிஸ், எஸ். சுமதிபாலா.

## அவுஸ்திரேலியா வென்றது


அவுஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற இரு கிரிக்கெட் 'டெஸ்ட்' பந்தயப்போட்டி விளையாட்டுகளிலும், பாகிஸ்தானை அவுஸ்திரேலியா தோற்கடித்துள்ளது. பாகிஸ்தான் தனது சொந்த மண்ணில் 'டெஸ்ட்' பந்தயப் போட்டிகளில் தோல்வியடைந்தது இதுவே முதல் தடவையாகும்.

## அமெரிக்க ஜனாதிபதி 'ஐக்' கிரிக்கெட் விளையாட்டைக் கண்டுகளிப்பார்

இன்னும் சில நாட்களில் பாகிஸ்தானிலுள்ள கராச்சியில் பாகிஸ்தானுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் இடையே மூன்றாவது 'டெஸ்ட்' போட்டி விளையாட்டு நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டை அமெரிக்க ஜனாதிபதி ஐஸனேவர் ஒரு சில நிமிடங்களுக்குக் கண்டு களிப்பாரெனத் தெரிகிறது.

## குதிரை ஓட்டம்

அமெரிக்காவில் இந்நாட்களில் ஒரு புதுவிதமான குதிரை ஓட்டம் மக்களின் அபிமானத்தை நாளுக்குநாள் பெற்று வருகிறது. இரண்டு சக்கரங்களைக் கொண்ட வண்டியொன்றைக் குதிரைகள் இழுத்துக்கொண்டு ஓடுவதுதான் இந்த ஓட்டத்தின் முக்கிய அம்சமாகும்.



1. சிறிய, பெரிய நகரங்களிலுள்ள, குதிரை ஓட்டம் நடைபெறும் மைதானங்கள் முட்டை வடிவானவையாகும். அவற்றின் நீட்டளவு அரை மைலாகும்.

2. குதிரைகளுக்குக் காயமேற்படாதவாறு, அவற்றின் கால்களுக்குக் கட்டுகள் சுற்றப்பட்டுள்ளன; குளம்புகளுக்குப் பஞ்சு அடைக்கப்பட்டுள்ளது. கண்கள் கண்மூடிகளினால் மறைக்கப்பட்டுள்ளன. இது, எதையும் கண்டுவிட்டுக் குதிரைகள் பயத்தில் பாய்ந்து விடாமல் செய்து விடுகின்றது.

## நீதிமன்றங்களில் தனிச் சிங்களம்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் அடித்தவர்," எனக் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், இந்நாட்டு அரசாங்கம் குறைந்த சமூகத்தினரை சம உரிமை பெற்று வாழவொட்டாமல் பல வழிகளை வகுக்கின்றது எனக் குற்றம் சுமத்தினார்.

சிங்கள மொழிக்கு மட்டுமே இந்த மசோதா அந்தஸ்து வழங்குவதாகக் கூறி "நீங்கள் தமிழருக்கு இழைத்துள்ள, இன்னல்களையும் இடையூறுகளையும் கண்டு களைப்படையவில்லை. மேலும் மேலும் ஏன் எங்களை இப்படித் துன்புறுத்துகின்றீர்கள்?" எனக் கேட்டார்.

"பிரதேச மொழிகள் இதற்காக உபயோகிக்கப் படவேண்டும் எனக் கண்டிருந்தால் நாங்கள் அதனை வரவேற்றிருப்போம். ஆனால் அரசாங்கம் இதனை ஒரு அரசியல் சூதாட்டக் காயாகப் பயன் படுத்துகின்றது. நாட்டின் நிர்வாகத்தில் இப்படி அரசியல் சூதாட்டம் ஈடுகொடுக்க முடியாத நிலையில் முடியுமெ"னக் கூறினார்.

திரு. எட்மண்ட் சமரக்கொடி பேசும் பொழுது, "நாம் நாட்டில் முன்பு கண்ட கசப்புமிக்க காட்சிகள் நமக்கொரு பாடமாக அமைய வேண்டும். நாட்டு மக்கள் எல்லோரும் ஒருமையாக வாழ வழியமைப்பதேயன்றி, இப்படிப்பட்ட பிரிவு மனப்பான்மை கொண்ட மசோதாக்கள், பிரிவினையையே ஏற்படுத்தும்." எனக் கூறினார்.

திரு. காரியப்பர் எவ்வளவோ முயன்றும், திரு. சமரக்கொடி ஒவ்வொரு ஷரத்திலும், 'சிங்களம்' என இருக்குமிடத்தில் 'அல்லது தமிழ்' என்ற திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார். இடையே நன்மை செய்யும் முகமாக நேரம் குறுக்கிடவே, மசோதா நிறைவேறாமல் கமிட்டி நிலையிலேயே நின்றுவிட்டது.

அரசாங்கக் கட்சியினர் முகம் களையிழந்து விட்டது.

* * *

போக்குவரத்து மந்திரி, திரு. மைத்ரிபால சேனநாயக்கா, இலங்கை ஆகாய விமானப்பகுதிக்கு ரூபாய் பத்து அடையாள மான்யமாக வழங்க ஒரு பிரேரணையைக் கொண்டு வந்த பொழுது முன்னைய உணவு மந்திரி, திரு. பிலிப் குணவர்த்தன, இதனை இலங்கை ஆகாய விமானப் பகுதி என அரசாங்கம் அழைத்தாலும், அது பறங்கியரின் ஆதிக்கத்தில் இருக்கின்றது என்பது எல்லோரும் அறிந்ததே எனக் கூறினார்.

"இலங்கையின் விகாரமகா தேவியை, பறக்கும் டச்சுக்காரன் கடத்திச் சென்று, கள்ளக் கடத்தல் வேலைக்கு உபயோகப் படுத்துகின்றான்." எனக் குற்றம் சுமத்தினார்.

* * *

பாராளுமன்றத் தேர்தல் அதிகாரியின் சம்பள மான்யம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, திரு. பிலிப் குணவர்த்தனவின் கேள்வி யொன்றிற்கு பதிலளிக்கையில், 18—21 வயதுக்கு உட்பட்டோரின் தேர்தல் இடாப்புகள் 1960 ஜூன் மாதத்தில் தயாராகிவிடும் எனப் பிரதமர் தகநாயக்கா தெரிவித்தார்.

* * *

சுயமொழியில் காசோலை (செக்) எழுதுவதற்கான ஒரு மசோதா, நிதியமைச்சர் திரு. முஸ்தாபாவினால் கொண்டு வரப்பட்டு, உடனடியாக நிறைவேறியது.

## அமெரிக்க—ருஷிய வலைப்பந்தாட்டம்

அமெரிக்காவுக்கும், ருஷியாவுக்குமிடையே அமெரிக்க நகரான கான்ஸாஸில் வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. பெண்கள் விளையாட்டுப் போட்டியில் ருஷியா வென்றது. ஆண்களின் போட்டியில் அமெரிக்கா வென்றது.

## அனுராதபுரத்துக்குப் புதிய பெயர்?

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அனுராதபுரத்தில் சுப்ரீம் கோர்ட் விசாரணை

குற்றங்கள் பெருகிவருவதனாலும், அனுராதபுரத்து வழக்குகளில் பெரும்பாலானவை சுப்ரீம் கோட்டுக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாலும், விரைவில் அனுராதபுரத்திலேயே சுப்ரீம் கோர்ட் விசாரணைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனவரி மாதம் 10 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாவதாகத் தெரிகின்ற இச் சுப்ரீம் கோர்ட் விசாரணைகளை அனுராதபுரம் மாவட்ட கோர்ட்டிலேயே வைத்துக்கொள்வதா, அல்லது நகர மண்டபத்தில் வைத்துக் கொள்வதா என்று இன்னமும் தீர்மானமாகவில்லை என்றும், எப்படியும் இங்கு சுப்ரீம் கோர்ட் விசாரணைகளை நடாத்தஅரசாங்கஅதிபர் முயற்சித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

இலங்கையே திருக்கிடும்படியான கொலைகள் நடந்த இப் பகுதியில் நடைபெறும் மேல் கோர்ட்டு விசாரணையில் அட்லின் விநாளை கொலைவழக்கு, கலவரகால வழக்குகள்போன்றவை விசாரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விசித்திர உலகம்

## விபரீத வினாக்கள்

அண்மையில் பி. பி. சி. நிலையத்தில் பதவியொன்றிற்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தில் காணப்பட்ட சில வினாக்களைக் கண்டு ஆத்திர மடைந்தான் இளைஞனொருவன்.

உன்னுடைய தாய் திருமணமாகுமுன் என்ன பெயரால் அழைக்கப்பட்டாள்? உனது தகப்பன் என்ன தொழில் செய்கிறான்? என்றெல்லாம் வினாக்கள் காணப்பட்டன.

இளைஞன் பத்திரத்தின் குறுக்கே பின் வருமாறு எழுதி நிலையத்தாருக்கு அதை அனுப்பினான். **"வேலை தேடுவது நான். என் பெற்றோரல்ல."**

### துப்பறியும் கழுகு

இங்கிலாந்திலுள்ள அமெரிக்க வர்த்தக நிலையமொன்றில் வருடம் 19,500 ரூபாய் சம்பளம் பெறும் உயர் பதவியொன்றிற்கு ஒருவர் விண்ணப்பமனுப்பியிருந்தார். நிலையத்தார் "அடுத்த மூன்று வாரங்கட்குத் தன் நடவடிக்கைகள் கவனிக்கப்படுவதை விண்ணப்பதாரி விரும்புவாரா?" எனக் கேட்டிருந்தனர். 'தாராளமாகக் கண்காணியுங்கள்' எனப் பதிலளித்து விட்டார் விண்ணப்பதாரி.

இரண்டு தினங்களின்பின் கறுப்புக் கண்ணாடி யணிந்த நெடிய மனிதனொருவன் விண்ணப்பதாரி செல்லுமிடமெங்கும் காணப்பட்டான். சினிமா, பூங்கா, கடற்கரை, ஹோட்டல் எங்கு சென்றாலும் பின் தொடர்ந்தது இக்கறுப்புக் கண்ணாடி. அது மாத்திரமா? விண்ணப்பதாரி முன்பு கல்வி கற்ற பாடசாலை ஆசிரியர்கள், சக மாணவர்கள் எல்லோரிடமும் இவரைப் பற்றிச் சல்லடை போட்டுக் கொண்டிருந்தது.

இது விண்ணப்பதாரிக்குப் பிடிக்கவில்லை. "உங்கள் வேலை வேண்டாம்" என நிலையத்தார்க்கு அறிவித்தான். அத்துடன் அந்தத் துப்பறியும் கழுகும் அவனை விட்டகன்றது.

### நீதி மன்றத்தில் மரண மடைந்த தந்தை

சவுதாம்ரனிலுள்ள நீதிமன்றமொன்றில் சாட்சிக் கூண்டினுள் நின்றார் 61 வயதுடைய வில்லியம் ஒஸ்போர்ண். எதிரே காணப்பட்டாள் இளநங்கை யோவான்னி. அவரது மகள் அவள்.

யோவான்னி 35 வயதுடைய, தாரமிழந்த, இரு குழந்தைகளின் தந்தையான கிளைவ் என்பவரை மணக்க விரும்பினாள். பெற்றோர் மறுத்தனர். யோவான்னி நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தாள்.

இருதய நோயினால் பீடிக்கப்பட்ட ஒஸ்போண், மன்றத்தில், தாமும் தமது மனைவியும் யோவான்னியின் திருமணத்தை ஒப்புக் கொள்ளாமைக்கான காரணங்களைக் கூறினார். அவற்றுள் முக்கியமானது "இருபது வயது நிரம்பப்பெறாத தமது புதல்வி கிளைவின் இரு குழந்தைகளையும் பராமரிக்கும் அளவுக்கு அனுபவமும் பொறுமையுமில்லாதவளென்பது." "இதனால் மண வாழ்க்கையில் சில மாதங்களின் பின்னர் கசப்புண்டாகி, விபரீத விளைவுகளுண்டாகலாம்" எனவும் கூறினார்.

யோவான்னி தந்தையின் வேண்டுகோளை நிராகரித்தாள். தந்தை மகளின் மனம் மாறாதது கண்டு வருந்தினார். தலை சுற்றியது, அறிவு மயங்கியது. தொப்பென கூண்டுக்குள் விழுந்தார். அவரின் மனைவியும் மற்றையோரும் சாட்சிக் கூண்டை நோக்கி ஓடினர். அவர்கள் உயிரற்ற சடலத்தைத்தான் காண முடிந்தது.

ஆத்திர மடைந்த திருமதி. ஒஸ்பேர்ண் மகளைப் பார்த்து "நீ உன் தந்தையைக் கொன்று விட்டாய்" எனச் சத்தமிட்டாள்; இறந்தவரின் சடலம் அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

—பெனற்,

திக்கெட்டும் வெற்றி கொட்டும் 8வது வாரம்!

கிங்ஸ்லி - வெலிங்டன்
(கொழும்பு) (யாழ்ப்பாணம்)

சிலோன் டூறிங் சினிமா
(அம்பாறை)

நடிகர்கள்:

★ ஜெமினி கணேசன் ★ பி. சரோஜாதேவி




இன்றே கண்டு களியுங்கள்!

காமினி (மருதானை) பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (செக்கடித்தெரு)

வெம்பிளி (கண்டி) மொடர்ன் (மதுளை) விஜிதா (மஸ்கேலியா)

இதயத்திற்கு ஓர் இன்ப விருந்து!
சிந்தனைக்கு ஓர் எடுத்துக் காட்டு!!




★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
★ பி. எஸ். மனோஹர்
★ பண்டரிபாய்
★ ஈ. ஆர். சகாதேவன்
★ எம். எஸ். திரௌபதி
★ ஏ. கருணாநிதி
★ டி. பி. முத்துலட்சுமி

நடித்த

# பெற்றமகனை விற்ற அன்னை

பின்னணி:
சுசீலா, ஜிக்கி, டி. எஸ். பகவதி, ஜமுனாராணி, ஏ. எம். ராஜா,
சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன்

நடனம்:
ஹெலன், ஜி. பாலா, கண்ணன், பி. டி. சரோஜா

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை) ரொக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) கிங்ஸ் (வதுளை) நியூ இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருக்கோணமலை)

ஜெமினி கணேசன், எம். என். ராஜம், எம். என். நம்பியார்
அசோகன், ஸ்ரீரஞ்சனி

நடிக்கும்

# பெண் குலத்தின் பொன் விளக்கு

டிசம்பர் 11-ந் திகதி தொடக்கம்

எல்பின்ஸ்டன் (கொழும்பு) மற்றும் ஐந்து தியேட்டர்களிலும் குதூகல ஆரம்பம்!

வைஜயந்திமாலா, ஏ. நாகேஸ்வர ராவ், மனோகர், மாதுரிதேவி

நடிக்கும்

# அதிசயப் பெண்

(படத்தில் ஏறத்தாழப் பாதி டெக்னிக் கலரில்)

வைஜயந்திமாலாவின் ரம்மியமான நடனங்களை வண்ணத்தில் கண்டு களியுங்கள்!

அவற்றுள் சில அண்மையில் ஐரோப்பா சென்றிருந்தபோது அவரால் ஆடப்பெற்று அங்கு மிகுந்த பாராட்டையும் பெற்றவை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் திகதி வெளியிடப்பெற்றது.